# மொழியியல்

தொகுதி 6 ஜூலை - செப்டம்பர் எண் 1

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
கி. கருணாகரன்
ந. நடராசபிள்ளை

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1982

T13388
R005A07

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

## அண்ணாமலைநகர்

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் : | டாக்டர் சி. சுப்பிரமணியம் (நாகர்கோவில்) |
| துணைத் தலைவர் : | டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்) |
| செயலாளர் : | டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர் : | டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள் : | திரு ஜி. கிருட்டிணபகவான் (மலேசியா) |
| | டாக்டர் கே. குத்தாலம்பிள்ளை (திருவனந்தபுரம்) |
| | டாக்டர் பி. சாம்டேனியல் (அல்ஜீரியா) |
| | திரு ந. அருணபாரதி (வாரணாசி) |
| | செல்வி மு. சுசீலா (அண்ணாமலைநகர்) |

## மொழியியல்

### அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

### கட்டணம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ 200-00 | US $ 50-00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 300-00 | US $ 75-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 20-00 | US $ 5-00 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 30-00 | US $ 7-00 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு) | ரூ 10-00 | |

மொழியியல் 6. 1. (1982)

# சசூரின் மொழியியல் கோட்பாடு

செ. சண்முகன்
மைசூர்ப் பல்கலைக்கழகம், மைசூர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியல் அறிஞர்கள் மொழியை ஒரு உயிருள்ள பொருள் என்று கருதினர். உயிருள்ள பொருள்களைப்போல மொழியும் பிறப்பு, வளர்ச்சி, இனப்பெருக்கம் ஆகியவைகளைக் காட்டும் எனக்கொண்டனர். மொழியைப் பற்றிய ஆராய்ச்சி மொழி வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சியாகவே இருந்தது. மொழி வளர்ச்சியை அறியவேண்டுமென்றால் மொழி எவ்வித மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். மொழிகள் வெவ்வேறு காலகட்டங்களில் மாற்றங்களை அடைகின்றன என்று கொள்ள வேண்டும். மொழி மாற்றங்களை விளக்குவதே விஞ்ஞான ரீதியிலமைந்த மொழி ஆராய்ச்சி, மொழிவிவரணை இவற்றின் குறிக்கோள் என்று கொண்டனர். ஒரு மொழி எவ்விதம் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு தொடர்பான ஆனால் வேறுபட்ட மொழிகள் உருவாகின்றன என்பதையும் விளக்கினர்.

சசூர் (1857-1913) பத்தொன்பதாம் நூற்றாண்டு வரலாற்று மொழியியல் மரபில் வந்தவராயினும் தமது விரிவுரைகளில் ''மொழி'' என்பது ஒரு காலகட்டத்தில் மாற்றங்களைக் காட்டாமல் நிலை பெற்றிருக்கும் ஒன்று எனக் குறிப்பிடுவார். மொழியை நிலைபேறான பொருள் என்று கொண்ட காரணத்தால் அதனை விளக்கத் தனிமுறைகளைக் கையாள வேண்டுமென்றும், அந்த முறை ''வரலாற்று விவரணை'' (diachronic discription) முறையிலிருந்து வேறுபட்டதென்றும் கொள்வார். பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியலறிஞர்கள் மொழியை உயிர்கொண்ட பொருள் எனக் கருதியமையால் மொழியியலை ''உயிரியலோடு'' தொடர்புடைய ஒரு துறை என்றனர். சசூர் மொழியை நிலை பெற்ற ஒன்று என்று கருதியமையால் மொழியின் வளர்ச்சி, மாற்றம் இவைகளில் கவனம் செலுத்தாமல், மொழியின் நிலைபேற்றை விளக்க முயன்றார். மொழியின் அமைப்பை விளக்குவதோடு மொழியியல் ஒரு தனித்துறை என்றும், பிற இயல்களின் ஆராய்ச்சி, விவரணை முறைகளைத் தழுவாத ஒரு துறை எனவும் விளக்குவார்.

அவரது மொழியியல் கருத்துக்கள் அவர் ஜெனிவாப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய விரிவுரைகளில் வெளிப்பட்டன. அவரது விரிவுரைகளிலிருந்து பெறப்பட்ட, மாணவர்களுடைய குறிப்புகளைத் தொகுத்து, பேல்லி, செகஹயே என்பவர்கள் ஒரு புத்தகமாக 1916-ல் வெளியிட்டனர். ''Cours delinguistic generale'' (பொது மொழியியல் உரை) என்ற அந்தப் புத்தகம் மொழியியலில் ஒரு திருப்பத்தினை உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை.

மொழியியல் விஞ்ஞான ரீதியில் அமைந்தது. மொழியியலில் இரண்டு வகைகளைக் காணலாம்: 1. நிலைபேற்றை விளக்குமாறு அமைந்த மொழியியல் (synchronic linguistics) 2. மொழி மாற்றத்தை விளக்குமாறு அமைந்த மொழியியல் (diachronic linguistics). மொழி நிலைபேற்றை விளக்கவேண்டுமானால் மொழியின் அமைப்பை விளக்கவேண்டும். மொழியமைப்பை விளக்க மொழியில் காணப்படும் நிலையான கூறுகளையும், அவை காட்டும் தொடர்புகளையும் விளக்க வேண்டும். மொழிக்கூறுகளும்

அவற்றின் தொடர்புகளும் மொழியின் அமைப்பில் பங்கெடுக்கின்றன.

மொழி இரண்டு வகையானது: 1. பேச்சுமொழி, 2. மனமொழி. பேச்சுமொழி சலனங்களைக் காண்பிக்கும் மனமொழி நிலையான அமைப்பைக் காண்பிக்கும். ஆகவே மனமொழியைத் தான் மொழி விவரணைக்குப் பயன்படுத்த வேண்டும். மனமொழியின அமைப்பை, மொழியில் காணப்படும் மொழிக்கூறுகள் அவற்றின் தொடர்புகள் ஆகியன்வற்றால் விளக்கவேண்டும். அத்தகைய விளக்கமே ''நிலைபேற்று மொழி விளக்கம்'' எனப் படும்.

நிலைபேற்று மொழியின் அமைப்பை விளக்கினாலொழிய ஒருமொழியின் இருகாலகட்டங்களின் இடையே ஏற்படும் மொழி மாற்றங்களை விவரிக்கமுடியாதென்றும், மொழி மாற்றங்களை விளக்க இரண்டு காலகட்டங்களில் காணப்படும் மொழி அமைப்புகளை ஒப்பிட வேண்டும் என்றும் கொள்வார் சசூர். பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழி மாற்ற விளக்கங்கள் மொழியின் ஒலி, பொருள் ஆகியனவற்றில் ஏற்படும் மாற்றங்களைத் தனித்தனியாக விளக்கின. உண்மையிலேயே மொழிமாற்ற விளக்கம் மொழியின் முழு அமைப்பில் தோன்றும் மாற்றங்களை விவரிக்க வேண்டுமேயன்றித் தனித்தனியாக மொழிக்கூறுகளின் ஒலி, பொருள் மாற்றங்களை விளக்க முற்படக்கூடாது. மேலும் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தும் மொழிக்கூறு மாற்றங்கள் மொழியமைப்பினால் உருவாக்கப்படுவன அல்ல என்பன போன்ற கருத்துக்களும் சசூரால் வலியுறுத்தப்பட்டன.

மொழி என்பது ஒரு காலகட்டத்தில் தனி நிலைபெற்ற, பூர்த்தியான பொருள் என்பதால் அதை விஞ்ஞான ரீதியில் விளக்க முடியும். மொழியியல் மூன்று விதமான அடிப்படைக் குறிக்கோள்களைக் கொண்டிருக்க வேண்டும்: 1. ஒரு கால கட்டத்தில் நிலை பெற்றிருக்கும் மொழியை விவரிப்பதே விஞ்ஞான ரீதியில் அமைந்த மொழி விவரணை என்பதை நிரூபித்தல், 2. மொழி உணர்வை நிலைநாட்டல், 3. மொழி உணர்வைக்

கண்டு பிடித்தலும், விவரித்தலும். மேற்கூறிய பலவகைக் கருத்துக் களையும் எடுத்துரைத்த பெருமை சசூருக்கு உண்டு. இங்கு நாம் அவர் வலி யுறுத்திய மொழி நிலைபேறு, மொழிமாற்றம் பற்றிய கருத்துக்களையும், மொழிவகைகளான மனமொழி, பேச்சுமொழி, கிடக்கை மொழி ஆகியவை பற்றிய கருத்துக்களையும், மொழிக் கூறுகள், அவற்றின் அங்கங்கள், மொழிக்கூறுகள் காட்டும் தொடர் நிலைத் தொடர்பு, தொகுதி நிலைத்தொடர்பு ஆகியனவற்றையும், மொழிக்கூறுகளின் பொருள் குறித்தன்மை, மதிப்பு, பொருளடக்கம் முதலியனவற்றைச் சார்ந்த கருத்துக்களையும் விளக்குவோம்.

1. மொழி நிலைபேறு, மொழி மாற்றம்

வரலாற்று மொழியியலார் மொழியை காலத்தின் தாக்கத் தால் மாற்றமடையும் ஒரு பொருள் என்று கொண்டனர். சசூர் மொழியை நிலைபெற்ற ஒரு பொருள் என்றும், ஒரு குறிப்பிட்ட குறுகிய காலகட்டத்தில் மாற்றங்களை வெளிப்படுத்தாத ஒரு பொருள் என்றும் கொண்டார். மொழி அடையும் மாற்றத்தை ''மொழி வரலாற்று விவரணை'' என்றும், மொழியின் நிலை பேற்றை விளக்குவதை ''மொழி நிலைபேற்று விவரணை'' என்றும் அழைத்தார். இந்த வகையில் மொழியியலை இரண்டு வகையாகப் பிரிப்பர்: 1. மொழி நிலைபேறு விளக்கமொழியியல் (Synchronic linguistics). 2. மொழி வரலாறு விளக்க மொழியியல் (Diachronic linguistics). மொழி வரலாறு விளக்க மொழியியல் ஒரு மொழியின் வளர்ச்சியை விளக்கவேண்டும். மொழியை ஒரு மாற்றம் மடையும் சாதனம் என்று கொண்டு காலத்தின் தாக்கத்தால் மொழி எவ்வித வேறுபாடுகளை அடைகிறது என்பதையும், பின்னர் வேறுபாடுகளை வகைப்படுத்தலையும் தனது கொள்கை யாகக்கொண்டது வரலாற்று விளக்க மொழியியல்.

மொழி நிலைபேறு விளக்க மொழியியல், மொழியை (அதாவது ஒரு மிகக்குறுகிய காலகட்டத்தில் காணப்படும் மொழியை) நிலைபெற்ற சாதனம் என்றும் அதை விவரணைக்குட்படுத்தும் காலகட்டத்தில் மாற்றங்களை அடையாமல் நிற்கும் ஒரு பொருள் என்றும் கொள்ளும். ஒரு காலகட்டத்தில் நிலைபேறு பெற்ற மொழி இறந்த காலத்தில் பலவகை மாற்றங்களுக்கு

உட்படுத்தப்பட்டு வளர்ச்சியடைந்த ஒன்றாக இருக்கலாம். ஆனால் ஒருவர் மொழி நிலைபேற்றை விளக்குகையில் அந்த மொழி எந்த வகையில் வளர்ச்சியடைந்து தற்போது காணும் நிலையை அடைந்தது என்பதை விளக்கத் தேவையில்லை. மொழி நிலைபேற்றை விளக்குகையில் அது விவரணை சமயத்தில் எந்த வித அமைப்பைக் கொண்டிருக்கிறது என்பதைக் காண வேண்டும். அமைப்பைக் கண்டுபிடிக்க மொழியின் மொழிக்கூறுகளையும் அவையிடையே நிலவும் தொடர்பையும் நோக்க வேண்டும். இத்தகைய மொழியமைப்பு விளக்கங்களை ஒருவர் மொழி வளர்ச்சியில் பங்கேற்ற மாற்றங்கள் பற்றிய குறிப்புகளைக் கைக்கொள்ளாமல் ஏற்படுத்த முடியும். இத்தகைய கொள்கை களை மொழி நிலைபேற்று விளக்க மொழியியல் கைக் கொள்ளும்.

நிலைபேற்று விளக்க மொழியியல் மனதில் பதிந்திருக்கும் மொழிக்கூறுகளையும், மொழிக்கூறுத் தொடர்புகளையும் காட்டி நிற்கும் மொழியமைப்பை விளக்கும் வகையில் அமைந்தது. வர லாற்று விளக்க மொழியியல் மொழிமாற்றத்தைக்குறித்து விவரிக் கும் வகையில் அமைந்ததால் வெவ்வேறு காலகட்டங்களில் காணப் படும் மொழிக் கூறுகளில், மற்றும் மொழிக்கூறுத் தொடர்புகளில் தோன்றும் வேறுபாடுகளை விளக்கும் வகையில் அமைய வேண்டும்.

மொழி நிலைபேற்று விளக்க மொழியியலையும் மொழிவரலாற்று விளக்க மொழியியலையும் தனித்தனியே பிரிக்கக் காரணங்கள் உள : 1) மொழியின் நிலைபேற்றை விளக்குகையில் அந்தமொழி முற்காலத்தில் (இறந்த காலத்தில்) எந்த வித மாற்றங்களை அடைந்து தற்போதைய அமைப்பைப் பெற்றிருக்கிறது என்று விளக்கத் தேவையில்லை. அதாவது, மொழி வரலாற்றுக்குறிப்பு கள் எந்தவகையிலும் மொழிநிலைபேற்று விளக்கத்தில் பங்கு பெறவேண்டிய தேவை இல்லை. ஆகவே மொழிநிலைபேற்று விளக்கம் தனியானது, மொழி வரலாற்று விளக்கம் தனியானது. 2) மொழிநிலைபேற்று விளக்க மொழியியலும் மொழி வரலாற்று விளக்க மொழியியலும் தத்தம் விவரணைக்கு எடுத்துக்கொள்ளப்

படும் கருப் பொருட்கள் வேறுபட்டவை. நிலைபேற்று விளக்க மொழியியல் மனமொழியின் அமைப்பை விளக்க முற்படும். வரலாற்று விளக்க மொழியியல் மொழி மாற்றத்தை விவரிக்க முற்படும். ஆகவே ஒன்றின் விவரணை ''அமைப்பு விவரணை,' மற்றொன்றின் விவரணை ''வளர்ச்சி, மாற்ற விவரணை''.

சசூரின் பெருமை அவர் காட்டிச் சென்ற மொழியமைப்பு ஆராய்ச்சிக் கொள்கைகளின் மூலமும், வளர்ச்சி விவரணை, அமைப்பு விவரணையைச்சார்ந்தது என்று கூறிய கருத்தின் மூலமும் புலப்படும்.

மொழி நிலைபேற்று விவரணை மொழியின் அமைப்பை விளக்க வேண்டும். மொழி இரண்டு வகைகளில் நிலை பெற்றுள்ளது. 1. மனதில் பதிந்த மொழி (மனமொழி, langue) 2. பேசும் போது தோன்றும் ஒலியமைப்பைக் கொண்ட மொழி (பேச்சுமொழி, parole). மனமொழியில் வெவ்வேறு மொழிக்கூறுகள் காணப்படும். அவை அமைப்பைக் கொண்டனவாயிருக்கும். மொழிக் கூறுகளும், அவை காட்டும் அமைப்புகளும் எண்ண வடிவில் மன மொழியில் படிந்து கிடக்கும். மன மொழியின் அமைப்பு நிலையானது. ஆகவே அதனையே நிலைபேற்று மொழியியலின் விளக்கப் பொருளாகக் கொள்ள வேண்டும். சசூர், ஒரு விஞ்ஞான ரீதியில் அமைந்த துறை அதன் விளக்கப் பொருளாக இரண்டு குணங்களைக் கொண்ட ஒரு பொருளைக் கொள்ள வேண்டும் என்பார். பொருள்களின் அத்தகைய குணங்களாவன ''முழுத் தன்மையும்'' ''ஸ்தூலத்தன்மையும்''. ''மன மொழி'' முழுமையானது. அதன் அமைப்பை வெளிப்படுத்தும் மொழிக்கூறுகளும் அவைகளின் தொடர்பும் எண்ண வடிவில் நிலை பெற்று முழுமையாகக் காணப்படும். மனமொழியின் அமைப்பு அதனடிப்படையால் எழும் பேச்சு மொழிக்கூறுகளால் வெளிப்படுத்தப் படுவதால் மன மொழி ''ஸ்தூல'' மானது. மேற்கூறிய காரணங்களால் மன மொழியை (குறிப்பாக மனமொழியின் அமைப்பை) விஞ்ஞான ரீதியிலமைந்த மொழியியலின் விளக்கப் பொருள் எனக் கொள்வார் சசூர். விஞ்ஞான ரீதியிலமைந்த மொழியியல் மன மொழியை விளக்குவதையே கடமையாகக் கொள்ளல் வேண்டும் என்பார்.

''பேச்சு மொழி'' பேச்சுச்சூழலில் வெளிப்படும். பேச்சில் பல வகைப் பேச்சுக் கூறுகள் காணப்படும். பேச்சுக் கூறுகள் பல விதச் சிறு கூறுகளின் தொடர் நிலைத் தொடர்பால் உருவாக்கப் படும். பெரும் பேச்சுக் கூறுகள் பலவகைச் சிறு பேச்சுக் கூறுகளின் தொடர்ச்சியையும், சிறு பேச்சுக் கூறுகளின் வெளிப்படையற்ற தொடர் அமைப்பையும் காட்டி நிற்கும். மன மொழியை, சிறு கூறுகளையும், சிறு கூறுகளின் தொடர், தொகுதி அமைப்புகளை யும் காட்டி நிற்கும் அடிப்படை மொழி என்று கொண்டால் பேச்சு மொழியை மன மொழியின் பிரதி பலிப்பு (குறிப்பாகப் பேச்சுச் சூழ்நிலையில் வெளிப் படும் மொழி) எனலாம். பேச்சு மொழியைச் ''சலன மொழி'' என்றும் அழைக்கலாம். ஏனென்றால், அது சூழ் நிலையில் உருப்பெறும், உருவாக்கப்படும் மொழி. பேச்சு மொழியில்தான் ''மொழி மாற்றங்'' களுக்கென்றமைந்த காரணங்கள் தோன்றும். பொதுவாக ஒரு மொழியின் மாற்றத்தை விளக்குகையில் பேச்சு மொழியை ஆதாரமாக எடுத்துக்கொள்வ தில்லை. மொழி மாற்றம் குறித்து பேசும்போது எவ்விதம் ஒரு காலகட்டத்தில் நிலை பெறும் மொழி மாறுபாடுகளுக்கு உட் படுத்தப்படுகிறது, எவ்விதம் வேறு வடிவம் பெறுகிறது என்பதை விளக்க வேண்டும். அதாவது பேச்சு மொழி மொழி மாற்றத் திற்குக் காரணமாக அமைந்தாலும் மொழிமாற்றம் பற்றிப் பேசும் போது மன மொழியின் மாற்றத்தைப்பற்றித்தான் பேச வேண்டும். ஆகவே மொழி மாற்றத்தை விளக்க இரண்டு காலகட்டங்களின் மனமொழியை ஒப்புமைப்படுத்தி வேறுபாடுகளைக் கண்டறிய வேண்டும்.

வரலாற்று விளக்க மொழியியல் ''மொழிமாற்றம்'' குறித்துப் பேசவேண்டும் என்றோம். வெவ்வேறு கால கட்டங்களில் காணப் படும் மொழியின் மொழிக் கூறுகள், அவற்றின் அமைப்பு, இவை களின் ஒற்றுமை, வேற்றுமைகளையும் வெளிப்படுத்த வேண்டும். வரலாற்றின் அடிப்படையில் ஒற்றுமைப்படுத்தப்படும் மொழிக் கூறுகளை ''வரலாற்று ஒற்றுமைகள்'' என்பதன் கீழ்க் கொண்டு வரலாம். ''வரலாற்று ஒற்றுமைகள்'' (வரலாற்று ஒற்றுமைக் கூறுகள்) மொழி நிலைபேற்றில் (அதாவது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்து மொழியில்) ஒற்றுமையைக் காண்பிக்க வேண்டிய

அவசியம் இல்லை. தற்கால பிரஞ்சு மொழியில் pas ''step'', pas ''not'' நிலைபேற்று அடிப்படையில் ஒற்றுமை அற்றவை. அதாவது இரண்டும் வெவ்வேறு மொழிக்கூறுகள். ஆனால் வரலாற்று அடிப்படையில் அவை ஒத்தவை. இரண்டும் கடந்த காலத்தில் ஒரே சொற்கள்தாம். வெவ்வேறு தொடர்பான மொழிகளில் காணப்படும் தொடர்பான சொற்களை (உருவமாற்றம் அடைந்த ஆனால் ஒரே எண்ணத்தைக் குறிக்கும் சொற்கள் Tamil- பால், Kannada- ஹாலு) வரலாற்று அடிப்படையில் ஒத்த சொற்கள் எனலாம். இக்காலத் தமிழில் காணப்படும் முடி ''கிரீடம்'', முடி ''மயிர்'' என்ற சொற்கள் நிலைபேற்று அடிப்படையில் ஒத்தனவல்ல. ஆனால் வரலாற்று அடிப்படையில் ஒத்தன. தற்கால மொழியில் காணப்படும் பல பொருள்களைக் (தொடர்பற்ற பொருள்கள்) காண்பிக்கும் சொற்கள் பண்டைக் காலத்துத் தொடர்புள்ள பொருள்களைக்குறித்த சொற்கள் என நிரூபிக்கப்பட்டால் அவைகளும் வரலாற்று அடிப்படையில் ஒத்தன வெனக் கருதப்படும்.

வரலாற்று மொழியியலைப் பற்றிய சசூரின் கருத்துக்களுக்கும், ''இளம் இலக்கணத்தார்'' (young grammarians) என்ற வரலாற்று மொழியியலார் கருத்துக்களுக்கும் வேற்றுமை உண்டு. ''இளம் இலக்கணத்தார்'' மொழி மாற்றங்களை ''ஒலிமாற்றம்'' (sound change) ''ஒப்புமை மாற்றம்'' (analogical change) ''பிற மொழிக்கூறுகளால் எழும் மாற்றங்கள்'', ''பொருள் மாற்றம்'' என்று வகைப்படுத்துவர். இத்தகைய ''மொழியம்ச மாற்றங்கள்'' தனித்தனியாக அவர்களால் விளக்கப்படும். ''ஒலிமாற்றம் விதிகளுக்குட்பட்டு, விதிவிலக்கற்று ஏற்படும்'' எனவும் கொள்வர். அதாவது ஒரு குறிப்பிட்ட ஒலி ஒரு குறிப்பிட்ட (ஒலிச்) சூழ்நிலையில் வேறொரு ஒலியாக மாறும் என வைத்துக் கொள்வோம். அத்தகையக் கூற்று ஒரு ''விதியாகக்'' கருதப்படும். மேலும் ஒரு விதியை ஏற்படுத்தும்போது, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை ஒரு மொழிக்கூறுக்கென அமைந்தால் தானாகவே குறிப்பிட்ட ஒலி மாற்றம் அடையும் எனவும் கூறமுடியும். இதன் அடிப்படையில் ''ஒலிமாற்றங்கள் விதியிலிருந்து வழுவாமல் ஏற்படும்'' என விளக்குவர்.

இளம் இலக்கணத்தார் கூறிய ஒலிமாற்றம், பொருள் மாற்றம் முதலியன எந்த வகையில் ''மொழியின் முழு அமைப்போடு'' தொடர்புடையவை என்பதை அவர்கள் எடுத்துரைக்கவில்லை. அவைகளைத் தனிப்பட்ட மொழியம்ச மாற்றங்களாக விளக்கினார்களேயொழிய அவை ''மொழியமைப்பு அம்ச மாற்றங்கள்'' என விளக்கவில்லை. அதன் காரணம், அவர்கள் மொழியின் பரிபூர்ண அமைப்பை மனதில் கொள்ளவில்லை. சசூர் மொழியைப் பொதுவாக ''மனமொழி'' என்று கொண்டு மொழி மாற்றத்தை மொழி அமைப்பு மாற்றம் என்றும், ஒலிமாற்றம், பொருள் மாற்றம் என்பனவற்றை மொழியம்ச மாற்றங்கள் என்றும், மொழியம்ச மாற்றங்கள் மொழிக்கூறுகளின் மதிப்பை மாற்றும் வகையில் இருந்தால்தான் மொழியம்ச மாற்றமாகக் கருதவேண்டும் என்றும் கூறுவார். மொழியம்ச மாற்றங்களில் ஒலி மாற்றத்துக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தார். ஒப்புமைப்படுத்தலால் விளையும் மாற்றங்களை ''மாற்றம்'' என்றே கொள்ளவில்லை. அதை (ஒப்புமை மாற்றம்) மொழி நிலை பேற்றின் ஒரு அம்சமென்றே கருதுவார்.

2. மொழி நெறி

டர்க்கெய்ம் என்ற சமுதாயவியலறிஞர் தமது ''Rules of Sociological Method'' (1895) என்ற புத்தகத்தில் ''சமுதாயவியலை'' ஒரு விஞ்ஞான ரீதியிலமைந்த துறை என விளக்க முயல்வார். சமுதாயவியலின் விளக்கப் பொருளாக ''சமுதாய நெறி'' அல்லது ''சமுதாய உண்மை'' (Social fact) என்ற பொருளை எடுத்துக் கொள்வார். ''சமுதாய உண்மை'' என்பது ஒரு சமுதாயத்தின் அங்கத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, அவர்களின் செயல்களை நிர்ணயிக்கும் வகையில் அமைந்த, சமுதாய மக்களின் மனதில் பதிந்த கருத்துக்களின் தொகுப்பே யாகும். சமுதாய மக்களின் செயல்களை நிர்ணயிக்கும் வகையில் அமைந்ததால் அது சமுதாய நெறிமுறைகளின் அடிப்படையாகும். சமுதாய உண்மைகள் ஒரு சமுதாய அங்கத்தினரின் மனதின் அடித்தளத்தில் படிந்து கிடக்கும் கருத்துக்கள் என்றும் அவைகளைச் சமுதாயத்தினர் கல்வியின் மூலம் பெறுவர் என்றும்

டர்க்கெய்ம் கூறுவார். ஒரு சமுதாயத்தில் நாம் அங்கத்தினராகப் பங்கெடுக்கும்போது நாம் அந்தச் சமுதாயத்தில் நிலவும் சில விதி நெறிமுறைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். விளக்கங்கள் தெரிந்தோ தெரியாமலோ நாம் சமுதாய நெறி முறைகளைப் பின்பற்று கிறோம். சமுதாயத்தோடு ஒன்றி வாழ நெறிமுறைகள் தேவை. எப்போது நாம் சமுதாய நெறிமுறைகளைப் புறக்கணிக்கிறோமோ அப்போது நாம் அச்சமுதாய அங்கத்தினர் பட்டியலிலிருந்து விலகுபவர் ஆகிறோம். சமுதாய நெறிமுறைகளை அனுசரிக்கும் வகையில் அமைந்த சில கருத்துக்களை நாம் மனதில் பதித்து வைத்திருக்கிறோம். அத்தகைய கருத்துக்களின் சங்கமமே ''சமுதாய உண்மை'' என அழைக்கப்படும்.

டர்க்கெய்ம் சமுதாய இயலின் விளக்கப் பொருளாக ''சமுதாய உண்மையை'' நிலை நாட்டி விளக்கியதைப் போன்று, சசூர் மொழியியலின் விளக்கப் பொருள் ''மொழி உண்மைகள்'' அல்லது ''மொழி நெறி'' என்று கொள்வார். ''மொழி உண்மை களை'' (Language facts) நம் முன்னோர்களிடமிருந்து பெறு கிறோம் என்றும், அவை மொழிச்செயல்களான ''பேச்சு, பேசுதல்'' ஆகியனவற்றை நிர்ணயிக்கும் பொருள் என்றும் கூறுவார். மொழி உண்மைகள் (மொழிக்கருத்துகள்) மொழி பேசுவோரின் அடிமனத்தில் காணப்படுவதாலும், பேச்சை நிர்ணயிப்பதாலும் அது முக்கியத்துவம் வாய்ந்தது. பேச்சு ஒரு வகைச் சமுதாய செயல். ஆகவே பேச்சின் அடிப்படையான ''மொழி நெறி'' ''சமுதாய நெறி'' யின் அங்கமாகும். ஒரு மொழியைப் பேசுகின்றவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ''மொழி நெறி'' மொழிச் செயல்களை நிர்ணயப்படுத்துகிறது என்பதற்குச் சில காரணங்கள் உள்ளன. ஒரு மொழியைப் பயன் படுத்து தலை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாக ஒரு ''மொழி நெறி'' தான் காணப்படும். அதற்கு வெவ்வேறு இணை உருவங்கள் இருக்க முடியாது. ஒரு ''மொழி நெறியை'' ஏற்றுக் கொண்ட மொழி பேசுவோர் அதில் காணப்படும் சில அம்சங்களைப் புறக் கணித்து பேச்சுக்கூறுகளை (பெருங்கூறுகள்) உருவாக்குவார்களே யானால் அவைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்களுக்குப் புரியாது; எனவே அங்கு அவர் கூறும் மொழிக்

கூறுகள் பயனற்றதாகும். 2) மொழி நெறிகள் கல்வியால் பெறப் படுவன. 3) மொழிக் கருத்துகள் ஒரு மொழியின் வரலாற்றுக் கருத்துகளைத் (உண்மைகளை) தழுவியன அல்ல. 4)ஒரு மொழி பேசும் பலரின் மொழிச்செயல்களை (பேச்சு) ஊன்றிக் கவனித்து, பேச்சின் பொதுத்தன்மைகளை உணர்ந்து தன்னிச்சையாகப் பேசும் வகையில் மனதில் மொழிக் கருத்துக்களை நிலை பெறச் செய் வதன் மூலம் ''மொழி உண்மை'' உருவாக்கப்படும்.

மொழி உண்மைகள் சமுதாய உண்மைகளே. ''மொழி நெறி'' யையே சசூர் ''மனமொழி'' என்பார். மொழியைச் சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் ஒன்று என்பார் விட்னி. சசூரின் கருத்துக்களில் விட்னியின் தாக்கத்தைக் காண முடியும். மொழி சமுதாயத்தில் அங்கம் வகிப்பதால் அதனைச் சமுதாய உண்மை என்று கொள்ளு வதில்லை. மொழி என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் எல்லோருக்கும் பொதுவானது. ஆகவே அது எல்லோருடைய மனதிலும் நிலை பெறும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் நபர்கள் ஒரே மொழியைப் பேசுகிறவர்கள் என வைத்துக் கொள்வோம். அவர்கள் மனதில் காணப்படும் ''பொது மொழி'' எவ்விதம் பொதுமைத்தன்மையை அடைகிறது என்பதும், பொதுமொழியானது ஒருவர் மற்றவரைப் பார்த்து அவர் பேசு வதைப் போல் பேசுவதால் உருவாகின்றதா இல்லை பலர் பேச்சின் பொதுத்தன்மைகளை தொகுத்து வைப்பதால் உரு வாகின்றதா என்பமிதல்லாம் விவாதத்துக்குரிய விஷயம். சசூர், மொழியை விவரிக்கையில் அது ஒரு சமுதாயத்தினருக்கென அமைந்த பொதுச்சொத்து எனக் கூறுவதன் மூலம் மொழியின் பொதுமைத்தன்மையைச் சார்ந்த கொள்கையை வலியுறுத்து கின்றாரேயன்றிக் குறிப்புத்தன்மைக் கொள்கையை வலியுறுத்துபவ ராக ஆகவில்லை. அவர் டர்க்கெய்ம் என்பாரின் கொள்கைகளை அப்படியே கைக் கொண்டார் என்று கூறுவதை விட டர்க்கெய்ம் என்பாரைப் போன்று ''பொதுமைத்தன்மைக்கொள்கையை'' வலியுறுத்துபவர் வழிநின்றார் எனக்கூறலாம்.

### 3. மொழி வகைகள்

நிலைபேற்று விளக்க மொழியியல் ஒரு குறிப்பிட்ட குறுகிய காலகட்டத்தில் நிலைபெற்றிருக்கும் மொழியை விளக்கவேண்டும்

என்றார் சசூர். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு சமுதாயத்தில் மொழி மூன்று வகைகளில் நிலை பெற்றிருக்கும். அவை பின் வருமாறு: 1. பேச்சில் தோன்றும் மொழி– இம்மொழி பேச்சுச்சூழலில் நிலைபெறும். 2. பேசுவோரின் மனதில் காணப் படும் மொழி– இது எண்ண உருவில் நிலைபெறும். 3. பேச்சு மொழியும், மன மொழியும் இணைந்த ''கலவை'' மொழி. முதல் வகையைப் ''பேச்சுமொழி'' (la parole) என்றும், இரண் டாம் வகையை ''மன மொழி' (la langue) என்றும், மூன்றாம் வகையைக் ''கிடைக்கை மொழி'' (le langage) எனவும் அழைக்கலாம்.

பேச்சு மொழியை நாம் நம் விவரணைக்காக ஒரு பொருள் என்று கொண்டாலும் அது ஒரு செயலே. பேசுதலாகிய செயலில் வெளித்தோன்றும் மொழி ''பேச்சு மொழி''. பேச்சு மொழியைப் பல வகைப் பேச்சுக்கூறுகளின் தொகுப்பு எனலாம். பேச்சுக் கூறுகள் பேச்சுச் சூழ்நிலைகளால் மாறுபாடு அடைபவை பேச்சுச் சூழல் களின் அம்சமான பேச்சைப் பேசுவோர், (அவரது அறிவு, மனநிலை, உணர்ச்சிகள்) பேச்சைக் கேட்பவர், (அவரது அறிவு, அவர் வளர்ந்து, வாழ்கிற சூழ்நிலை) பேச்சு ஏற்படும் இடம், காலம், சமுதாயச் சூழ்நிலை ஆகியவற்றின் தாக்கத்தால் பேச்சுக்கள் வேறுபடும். ஆகவே பேச்சு மொழி ஒரு வகை ''சலன மொழி''. மேலும் அது வெளிப்படையாகப் பிறர் கண் களுக்கும் காதுகளுக்கும் புலனாகும் மொழி. பிறர் பேசும் போது அவரது வாயுறுப்புகளின் அசைவை நாம் பார்க்க முடிவதால் அது கண்ணுக்குப் புலனாகிறது. பிறர் பேசும் போது ஒலிகள் நம் காதுகளில் விழுவதால் அது காதுக்குப் புலனாகிறது. பேச்சுக் கூறுகளும், பேச்சும் அதன் அடிப்படையாக மன மொழியைக் கொள்ளும். பேச்சில் காணப்படும் கூறுகளை அவற்றின் அமைப்பு, அவற்றின் பொருள் ஆகியவற்றை மனமே கிரகிக்கிறது. பேச்சில் வெளிப்படையாகத் தோன்றுவன ஒலித்தொடர்களே. அவற்றின் அமைப்பையும், பொருளையும் மனமே உணர்கிறது. பேச்சு மொழி பல வகைச் சிறப்பு அம்சங்களைக் கொண்டது. அவை இடத்தால் மாறுபடுபவை; மொழி பேசுவோரின் தன்மையால் மாறுபடுபவை; புதிய வகையில் அமைந்த மொழிக்கூறுகளை

வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை; நிலையற்ற கலப்படமான தன்மையைக் காட்டுபவை. ஒரு மொழி பேசும் எல்லா மக்களும் ஒரே வகையில் பேசுவதில்லை. ஆகவே பேச்சு ஊக்கமான, சலனமுள்ள, இச்சைக்கு உட்படுத்தப்பட்டு வெளிப்படும் மொழி. பேச்சை விஞ்ஞான ரீதியில் விளக்க முடியாது.

''மனமொழியை'' மனதில் பதிந்திருக்கும் மொழி பற்றிய அறிவின் அமைப்பு என்று கொள்ளலாம். மொழிக்கென்று இலக்கணம், ஒலி, சொல் முதலியன உண்டு என்று கொண்டால் ஒலி, சொல் முதலியவைகளையும், அவற்றின் அமைப்புகளையும், இலக்கணக்கூறு, அதன் அமைப்பு ஆகியவற்றையும் ஒவ்வொரு மொழிபேசுவோரும் அறிந்து வைத்திருப்பர். அத்தகைய அறிவையே ''மனமொழி'' என்கிறோம். நம்மால் படிப்படியாக உணரப்பட்டு, அமைப்புக் கொடுக்கப்பட்டிருக்கும் மொழி பற்றிய விதிகளே ''மனமொழி'' ஆகும். அதை நாம் கல்வி மூலம் பெறுகிறோம். அதன் இருக்கை மனித மனம். பிறர் பேசுவதைச் சரி அல்லது தப்பு என நாம் நிர்ணயிப்பது அதை நாம் மன மொழியோடு தொடர்பு படுத்துவதன் மூலமே. மனமொழி நிலை யான அமைப்பைக் கொண்டது. அது சூழ்நிலையின் தாக்கத்தால் மாறு படுவதில்லை. ஒவ்வொரு மொழி பேசுவோரிடமும் இது முழுமையாக இருப்பதாக நாம் கூறமுடியாது. மனமொழி, ஒரு மொழியை உபயோகிப்பவர் அதை வழுவற்ற முறையில் பேச உதவுகிறது. மனதில் பதிந்த மொழிக்கூறுகள் தொகுக்கப் படு வதனால் ஏற்படும் அமைப்பே மனமொழியின் அமைப்பாகும். மன மொழி நிரந்தரமானதாகவும், வேறுபாடுகளைத் தோற்று விக்காமலும், ஒரு சமுதாய மக்கள் எல்லோருக்கும் பொதுவான தாகவும் இருப்பதனால் இதனை நிலைபேற்று மொழியியலின் விளக்கப் பொருளாகக் கொள்ள வேண்டும்.

மனமொழியும், பேச்சு மொழியும் இணைந்த மொழியே ''கிடக்கை மொழி''. இது மொழிபேசும் எல்லா மக்களுக்கும் உரித்தான சொத்து. கிடக்கை மொழிதான் மனிதனை மிருகத்தி லிருந்து பிரிக்கிறது. இதுவும் விஞ்ஞான ரீதியிலான விளக்கங் களுக்கு உட்படுத்த முடியாத தன்மை கொண்டது. சசூரின் ''மன மொழி'' ''பேச்சு மொழி'' என்பதனை சாம்ஸ்கி விளக்கிய

''மொழி உணர்வு'' (competence) ''மொழிப்பயன்படுத்தல்'' (performance) என்ற கருத்துக்களோடு தொடர்புப்படுத்துவர் சிலர். சாம்ஸ்கி விளக்கிய ''மொழி உணர்வு'' என்ற கருத்து மனம் சார்ந்த கருத்து. ஆனால் சசூரின் ''மன மொழி'' சமுதாயத்தைத் தழுவிய கருத்து. சாம்ஸ்கி விளக்கும் ''மொழி உணர்வு'' சமுதாயச் சொத்தல்ல. ஆனால் ''மன மொழி'' ஒரு சமுதாயச் சொத்து.

4 மொழிக்கூறுகள்

மேற்கூறியவைகளிலிருந்து ''நிலைபேற்று மொழியியல்'' மனமொழியைத்தான் விளக்கப் பொருளாக ஏற்றுக் கொள்ளும் என்றும் மனமொழி மொழிக்கூறுகளால் ஆன தொகுப்பு என்றும் கண்டோம். இங்கே நாம் மொழிக்கூறுகளையும், அவை காட்டும் தொடர்புகளையும் ''மன மொழியின்'' அமைப்பை விவரிக்கும் வகையில் விளக்குவோம்.

மனமொழி தனக்கே உரித்தான அமைப்பைக் கொண்டது. அதன் அமைப்பில் அது தன்னுள் அடக்கும் மொழிக்கூறுகளும் அவைகளின் இடையே தோன்றும் தொடர்புகளும் பங்கெடுக்கின்றன. மனமொழியில் காணப்படும் மொழிக்கூறுகளை ''மொழிக்குறி'' (sign)எனலாம். மொழிக்குறிகளில் ஒலியமைப்பும் பொருளும் காணப்படும். ''உருபன்களை'' எல்லாம் மொழிக் குறிகள் எனலாம், தொடர்புகளால் நிர்ணயிக்கப்படும் ''மதிப்பினை''ப்பெற்ற மொழிக்குறிகளின் அமைப்பே மனமொழி. மொழிக்குறிகளைத் தொகுப்புநிலைத் தொடர்பில் நிறுத்துவதன் மூலம் ''மொழிக்குறித்தொகுப்பு'' உருவாகும். அத்தகைய தொகுப்பே மனமொழியின் அமைப்பாகும்.

பேச்சில் இரண்டு வகைத் தொடர்நிலை அமைப்புகளைக் காணலாம்: 1. ஒலித்தொடர் அமைப்பு, 2. பொருள் தொடர் அமைப்பு. மனமொழி, பேச்சுமொழியின் அடிப்படையாதலால் அதிலும் ஒலித்தொடர், பொருள் தொடர் அமைப்புகள் காணப்படும். ஆனால் ஒலித்தொடர், பொருள்தொடர் ஆகியவை நினைவு (எண்ணம்) உருவில் காணப்படும். மன மொழியில் படிந்திருக்கும் ஒலிகளையும், ஒலித்தொடர்களையும் ''நினைவொலி'', ''நினை

வொலித்தொடர்'' எனலாம். மனமொழியில் காணப்படும் குறிகளின் பொருளை ''நினைவுப்பொருள்கள்'' (எண்ணம்) எனலாம். மனமொழி மொழிக்குறிகளால் ஆனதால் அம்மொழிக்குறிகளில் நினைவொலிகளும், எண்ணங்களும் காணப்படும். ''நினைவொலித்தொடர்கள்'' ஒரு குறிப்பிட்ட ''எண்ணத்''தோடு இணைந்து காணப்பட்டால் அத்தகைய இணைப்பை ''மொழிக்குறி'' என்கிறோம். ஒரு மொழிக்குறியில் காணப்படும் நினைவொலித்தொடரும், எண்ணமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.

சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் ஆகியனவற்றைப் பொதுவாக மொழிக்குறிகள் எனலாம். நினைவொலித்தொடர் ஒன்று ஒரு குறிப்பிட்ட குறுகிய எண்ணத்தைக் குறிக்கும் வகையிலும், பிரிக்க முடியாத வகையிலும் இருந்தால் அம்மொழிக் கூறை ''தனிமொழிக்குறி'' (Simple Sign) என அழைக்கலாம். இரண்டு அல்லது மூன்று ''தனிக்குறிகள்'' இணையும் போது (தொடர்நிலையில்) அங்கே ''கூட்டுக்குறி'' (Syntagm) உருவாகும்.

பெரும்பாலான தனிக்கூறுகளின் அங்கங்களான ஒலித் தொடர், பொருள் (எண்ணம்) ஆகியவற்றின் இடையே ''இயற்கையான அகத்தொடர்பு'' (Natural relationship) காணப்படுவதில்லை. ஆகவே மொழிக்குறிகள் ''இயற்கையானவை'' எனக்கூறமுடியாது. மொழிக்குறிகள் ''தொடர்ச்சியாக நிற்கும் தன்மையும்'' (Syntagmatic relationship) ''தொகுப்பில் அங்கம் வகிக்கும் தன்மையையும்'' (Associative relationship) கொண்டவை. பெரும்பாலான மொழிக்குறிகள் ''இயற்கையானவை'' அல்ல, அதாவது அவைகளின் அங்கமான ஒலித்தொடர் மற்றும் நினைவுப்பொருள் ஆகியவற்றின் இடையே தோன்றும் அகத் தொடர்பு இயற்கையானதல்ல. அகத்தொடர்பு சமுதாயத்தினரால் உருவாக்கப்படுகிறது. இதனைச் சில காரணங்கள் மூலம் விளக்க முடியும்.

பொதுவாக எந்த ஒரு எண்ணக்கூறையும் ஏதாவது ஒரு ஒலித் தொடர் மூலம் ஒரு சமுதாயத்தினரால் குறிக்க முடியும். ஆங்கில

மொழி பேசுவோர் ''மரம்'' என்ற எண்ணக்கூறை (tree) என்ற ஒலித்தொடராலும், தமிழ்மொழிபேசுவோர் (மரம்) என்ற ஒலித் தொடராலும் குறிப்பதைக் காண்க. 2) ஒரு மொழிக்கூறின் அங்கமான எண்ணக்கூறும், ஒலித்தொடர்களும் தனித்தனியே மாற்றம் அடையும் தன்மை கொண்டவை. 3) மொழியில் ஒலித் தொடர்களுக்கும் அதனோடு சம்பந்தப்பட்ட நினைவுக்கூறு களுக்கும் இடையே தோன்றும் தொடர்பு இயற்கையானது என்று எண்ணும் வகையில் ஒலி-நினைவுக்கூறுகளைத்தாங்கி நிற்கும் மொழிக்குறிகள் எண்ணிக்கையில் மிகக்குறைவு.

கூட்டுக்குறிகளை சில வகைகளில் இயற்கையானவை என லாம்; ஏனென்றால் அவைகாட்டும் நினைவுக் கூறுகளுக்கும், ஒலி, இலக்கண அமைப்பிற்கும் இயற்கையான தொடர்பு உண்டு. அதாவது கூட்டுக்குறிகளின் பொருளை (நினைவுக்கூறு அமைப்பு) அதில் தோன்றும் தனிக்கூறுகளின் எண்ணக்கூறுகளைக் கூட்டு வதன் மூலம் பெறமுடியும்.

மனமொழியில் காணப்படும் குறிகள் தொகுப்பு அமைப்பை காட்டுவன. ஆனால் பேச்சுமொழியில் தோன்றும் மொழிக்குறிகள் தொகுப்பு அமைப்பைக் காட்டாதவையாயிருக்கும். மொழிக் குறிகளை மாற்றமடையும் தன்மையுடையன எனவும் மாற்றம் அடையாத தன்மையுடையன எனவும் கூறமுடியும். மொழிக் குறிகளை மாற்றமடைவன என்பவர்கள் தம் கண் முன் மொழி வரலாற்றை நிறுத்துவர். வரலாற்று மொழியியலார் மொழிக் குறியின் மாற்றத்தன்மையை விளக்க முயல்வர். மொழிக்குறியின் மாற்றத்தை (ஒலியமைப்பு, பொருள் இவைகளின் மாற்றம்) விளக்குகையில் சில காரணங்கவையும் விளக்குவர். அக் காரணங்களில் சில பின்வருமாறு: 1) மொழிக்குறியின் ஒலியமைப் புக்கும், பொருளுக்கும் இடையே தோன்றும் தொடர்பு இயற்கை யானதல்ல. 2) மொழிக்குறிகள் வெவ்வேறு வகைகளில் (சூழ் நிலை, பேசுவோர்) பயன்படுத்தப்படுவதால் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும்.

மொழிக்குறியை மாற்றமடையாத்தன்மை கொண்டவை என்பவர்கள் ஒரு காலகட்டத்தில் நிற்கும் மொழியின் நிலைபேற்றைத் தம் கண்முன் கொண்டு நிறுத்துவர் ஒரு காலகட்டத்தில் நிற்கும் மொழியின் அமைப்பு அம்மொழி நிலவும் சமுதாயத்தின் அங்கத்தினர் எல்லாருடைய மனதிலும் ஒரே வகையான அமைப்பில் தோன்றும். மனமொழியில் காணப்படும் குறிகள் நிலையான இடத்தைப் பெற்றிருக்கும். ஆகவே ஒருவர் ஒரு மொழிக்குறியைக் கூறும்போது அவை மாற்றமடைந்தவை என இன்னொருவர் கருதுவதில்லை.

5. மொழிக்குறித் தொடர்புகள்

''மொழிக்குறிகள்'' (Signs) இரண்டுவகையான தொடர்பைக் காட்டிநிற்கும். அவையாவன 1. தொடர்ச்சிநிலைத் தொடர்பு (வரிசை நிலைத்தொடர்பு-Syntagmatic relationship) 2. சங்கத் தொடர்பு (இணைப்பு நிலைத்தொடர்பு-Associative relationship).

மொழிக்குறிகள் வரிசைநிலையில் நின்று குறித்தொடர்களை உருவாக்கும். குறித்தொடர்கள் பேச்சுமொழியில் காணப்படும். சசூர் வரிசைநிலைத் தொடர்பை மிக விரிவாக விளக்கவில்லை. இக்கால மொ யியலார் வரிசை நிலைத்தொடர்பில் இரண்டு வகைகளை அடக்குவர். 1. தனிவரிசை நிலைத்தொடர்பு 2. வரிசை இயைபு தொடர்பு. சசூர் காட்டிய வரிசைநிலைத் தொடர்பு மொழிக்குறிகளின் தொடர்பு ஆன காரணத்தால் அத்தொடர்பில் இலக்கண அம்சமும் பங்கு கொள்கிறது என்று கொண்டு அத்தொடர்பைப் பொதுவானது (அதாவது தனிவரிசை (linear) வரிசை இயைபு (co-occurrence) தொடர்புகளை அடக்கியது) எனக்கொள்ளலாம். மொழிக்குறிகள் இன்னொரு மொழிக் குறியின் முன்னாலோ, பின்னாலோ, இடையிலோ நிற்கும்போது ''வரிசைநிலைத் தொடர்பு'' வெளிப்பட்டு நிற்கும்.

ஒரு மொழிக்குறியை ஒருவர் பயன்படுத்தும்போது அதனோடு தொடர்பான சில மொழிக்குறிகள் மனதில் தோன்றும். ஆகவே ஒருவர் மனதில் மொழிக்குறிகள் பல இணைந்து காணப்படுகின்றன எனக்கூறமுடியும். பல மொழிக்குறிகள் இணைந்து

''மொழிக்குறித் தொகுதி'' யாக மனதில் நிலைபெறுகின்றன எனவும் கூறமுடியும். மனதில் தொகுதியாக நிற்கும் மொழிக் குறிகளின் இடையே ''இணைப்பு நிலைத்தொடர்பு'' (Associative relationship) காணப்படுகிறது. மொழிக்குறிகள் அவைகளின் ஒலியமைப்பு, பொருள், இலக்கண அமைப்பு ஆகியவற்றால் இணைக்கப்பட்டு மனதில் பதிகின்றன. சசூர், மொழிக்குறி இணைப்பு, அவைகளின் ஒலியமைப்பு, பொருள் ஆகியவைகளைத் தனித்தனியாகவோ, கூட்டாகவோ எடுத்துக்கொண்டு ஏற்படுத் தப்படும் என்பார். ஒரு மொழிக்குறியுடன் இணைக்கப்படும் பிற மொழிக்குறிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து சிறிய அல்லது பெரிய ''குறி இணைப்புத் தொகுதிகள்'' உருவாகும். ஆனால் சசூர் அவைகளை விளக்கவில்லை.

இணைப்புத்தொடர்புகளையே மனமொழியில் காணப்படும் ''குறி அமைப்பு'' ஏற்படும் வகையில் அமைந்த தொடர்பு என்பார் சசூர். வரிசைநிலைத் தொடர்பு பேச்சு மொழியில் காணப்படும், ''குறித்தொடர்களை'' உருவாக்கும் தொடர்பு என்பார். குறித் தொடர்கள் பேச்சு மொழியின் அங்கங்கள் ஆகையால் அவை களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மன மொழியில் காணப் படும் ''குறி அமைப்பை'' (குறித்தொகுதி) விளக்குவதில் சசூர் கவனம் செலுத்தினார். மனமொழியும், மனமொழியின் குறியமைப் பும் நிலையானது என அவர் வலியுறுத்தியதுதான் இதன் காரணம். மனமொழியும் ஒவ்வொரு மொழிக்குறியும் பிற குறிகளிலிருந்து வேறுபட்டவை. அவைகளின் வேறுபாடு மற்றும் எதிர்நிலைத் தன்மை அவைகள் எந்த பிற மொழிக்குறிகளோடு இணைப்புத் தொடர்பு, வரிசைத்தொடர்பு இவைகளைக் கொண்டிருக்கிறதோ அதைச் சார்ந்து நிர்ணயிக்கப்படும். ஒரு மொழிக்குறியின் சிறப்புத் தன்மை இரண்டு காரணங்களால் பிற மொழிக்குறியின் சிறப்புத் தன்மையிலிருந்து வேறுபடும். 1. மொழிக்குறியின் அங்கமான ஒலியமைப்பு, பொருள் ஆகியன. 2. மொழிக் குறி காட்டும் வரிசை நிலை, இணைப்புநிலைத் தொடர்புகள். (மொழிக்குறியோடு இணையும் பிற தொடர் நிலை, இணைப்பு நிலைக்குறிகள்), மேற்கூறிய இரண்டு காரணங்களில் இரண்டாம் வகை மொழிக்குறியின் ''மதிப்பை''யும் (value) நிர்ணயிக்கிறது.

ஒலியமைப்பில் வேறுபட்ட இரண்டு மொழிக்குறிகள் ஒரே வகையான இணைப்புத் தொடர்பை வெளிப்படுத்தி நின்றால் அவைகளை ஒரே மதிப்புள்ள மொழிக்குறிகள் என அழைக்க முடியும்.

மொழிக்குறிகள் ஒலியமைப்பு, பொருள் இவைகளால் தொடர்புபடுத்தப்படுமாயின் அங்கே இணைப்புத் தொடர்பு ஏற்படும். <படிப்பு> என்ற மொழிக்குறியை எடுத்துக் கொண்டால் அதில் இரண்டு சிறு குறிகள் இருப்பதை உணரமுடியும் (படி-ப்பு) <படிப்பு> என்ற குறியுடன் தொடர்புடையதாக பலகுறிகள் காணப்படும், <நடப்பு, நடிப்பு, கடிப்பு> என்பன <படிப்பு> என்ற குறியைப் போல் —ப்பு எனும் சிறு குறியால் முடிவதால் <படிப்பு> என்னும் குறியோடு தொடர்புடையன. <படித்தல், படித்த, படிக்கிற> என்றகுறிகள் <படி> என்ற குறியை அடிப்படைக்குறியாகக் கொள்வதால் <படிப்பு> என்ற குறியோடு தொடர்புடையன. <இடுப்பு. தடிப்பு> என்பன ஒலியமைப்பால் (கடை ஒலிகள்) <படிப்பு> எனும் மொழிக்குறியோடு தொடர்புடையன. <பாடம், ஆசிரியர், மாணவர், புத்தகம்> என்ற குறிகள் பொருள் அடிப்படையால் <படிப்பு> என்ற குறியோடு தொடர்புடையன.

வரிசை நிலைத் தொடர்புகள் மொழிக்குறிகளால் வெளிப்படையாக காட்டப்படும் தொடர்புகள். வரிசை நிலைத்தொடர்புகள் ''மொழிக்குறித்தொடர்களை'' உருவாக்கும். குறித்தொடர்களை ''கூட்டுத்தொடர்'' என்பார் சசூர். கூட்டுத்தொடர்களை விவரிக்க வேண்டுமானால் அவற்றில் காணப்படும் தனிக்குறிகளையும், அவை காட்டும் வரிசை நிலைத் தொடர்பையும் விளக்க வேண்டும். வெவ்வேறு வரிசைகளில் மொழிக்குறிகளை நிறுத்தி கூட்டுத் தொடர்களை ஒரு மொழி பேசுவோர் உருவாக்க முடியும் என்று கொண்டதாலும், வரிசைத்தொடர்பு, பேச்சுமொழியோடு சம்பந்தமான தொடர்பு என்று கொண்டதாலும் சசூர் வரிசை நிலைத்தொடர்பை விரிவாக விளக்கவில்லை. வரிசைநிலைத் தொடர்பு அமைப்பிலும் நிலையான அமைப்பு காணப்படுகிறது என்பதை நாம் தற்போது ஒத்துக் கொள்கிறோம். தற்கால மொழியியலறிஞரான சாம்ஸ்கியின் பெருமை குறிகளின் வரிசை

நிலைத்தொடர் அமைப்பை விளக்கமாகக் கூறியதால் உயர்ந்து நிற்கிறது. சாம்ஸ்கி தனது இலக்கணவிளக்கத்தில் மொழிக்கூறு களின் தொடர்நிலைத் தொடர்புக்கு முக்கியத்துவம் கொடுப்பார். சாம்ஸ்கி மொழிவிவரணைக்கு எடுத்துக் கொள்ளும் அடிப்படை மொழிக்கூறு ''வாக்கியங்கள்''. ஆனால் சசூர் எடுத்துக் கொள்வது ''மொழிக்குறிகள்''. சாம்ஸ்கியும் இணைப்புநிலைத் தொடர்பு களை விளக்கும் வகையில் தனது விவரணையைக் கொடுத்தார் என்பதற்கு அவர் காட்டிய செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களின் தொடர்பும், அவைகளிடையே தோன்றும் ''மாற்று விதி''யும் சான்றாக அமைகின்றன. ''தொடரியல்'' (Syntax) என்பது பேச்சுமொழியை விவரிக்கும் இயலின் அங்கம் என்ற கொள்கையை சசூர் கொண்டிருந்தார் என புலப்படுகிறது. இதன் காரணம் அவர் வாழ்ந்த காலம். மரபு இலக்கணத்தார் வகுத்த மொழி விவரணைகள் ''சொற்களை'' அடிப்படையாகக் கொண்டவை. மரபு இலக்கணத்தாரின் கொள்கைகள் சசூரின் மொழி ஆராய்ச்சியில் தாக்கம் ஏற்படுத்தின எனலாம். மேலும் சசூர், மொழியை ''சமுதாய உண்மை'' என நிலை நாட்ட நினைத்ததால் மொழிக்குறிகளையும், அவற்றின் அமைப்பையும் விளக்கினார். குறித்தொடர்களின் ''பொது அமைப்புகளை'' விளக்க அவர் முயலவில்லை.

### 6. மொழிக்குறியின் மதிப்பு

மொழிக்குறிகளின் உள் அமைப்பும், அவைகளின் மதிப்பும் வெவ்வேறானவை. ஒரு குறிப்பிட்ட ஒலித்தொடர் ஒரு குறிப் பிட்ட எண்ணக்கூறை குறிக்கும் போது ஒரு மொழிக்குறி உரு வாகும். ஆகவே மொழிக்குறியின் உள் அமைப்பு அதன் ஒலித் தொடர் அமைப்புக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடையே ஏற்படும் தொடர்பால் நிர்ணயிக்கப் படுகிறது. ஒரு குறிக்கென்று அமைந்த ஒலியமைப்பையும், பொருளையும் நாம் குறிப்பிடும் போது அவை மொழிக்குறியின் நிச்சயமான அம்சமாகின்றன. மொழிக்குறியின் ஒலியமைப்பும், பொருளும் பிற மொழிக்குறியின் ஒலியமைப்பு, பொருள்களிலிருந்து வேறுபடுத்தப் படுவது அவை களின் ''எதிர்நிலைத்'' தன்மையைப் பொறுத்துதான்.

மொழிக்குறிகளின் ''மதிப்பு'' அவைகளின் வேறுபாட்டால் உருவாகிறது. ஒரு குறிப்பிட்ட ''மொழிக்குறித் தொகுதி''யில் எத்தகைய அங்கம் வகிக்கிறது ஒரு மொழிக்குறி என்பதைப் பொறுத்தே அதன் ''மதிப்பு' அமைகிறது. மொழிக்குறியின் உள் அமைப்பு நேரடியாக ஒரு மொழிக்குறியின் ''மதிப்பை'' ஏற்படுத்தாது. இதை சில காரணங்களால் விளக்கலாம் இரண்டு மொழிக்குறிகள் தங்கள் ஒலியமைப்பிலோ, பொருளிலோ வித்தியாசம் காண்பிக்கலாம். ஆனால் அவை பிறகுறிகளுடன் காட்டும் தொடர்பு ஒத்ததாக இருந்தால் அவைகளை ஒரே மதிப்பைக் கொண்ட மொழிக்குறிகள் என்றே கருதவேண்டும். சசூர் மொழிக் குறிகளின் மதிப்பை விளக்க ''செஸ் விளையாட்டை'' எடுத்துக் கொள்வார். செஸ் விளையாட்டில் (பகடை) ஒரு குறிப்பிட்ட ''காய்'' என்ன பொருளால் செய்யப்பட்டது, எத்தகைய தன்மையானது என்பதால் அதன் மதிப்பு வெளிப்படுவதில்லை. செஸ் பலகையில் அது எந்த இடத்தில், எந்த எந்த காய்களுடன் தொடர்பில் நிற்கிறதோ அதைப் பொறுத்தே அதன் மதிப்பு நிர்ணயிக்கப்படும். அதேபோல் மொழிக்குறிகளின் மதிப்பும் அவை பிற குறிகளுடன் கொண்டிருக்கும் தொடர்பால் நிர்ணயிக்கப்படுகிறது. மதிப்பு என்பது ஒரு தொடர்பு அம்சம்.

மொழிக்குறிகள் (தங்களது பொருளின்மூலம்) வெளியுலகப் பொருள்களைக் குறிக்க பயன் படுத்தப்படும் போது ''குறிப்புத் தன்மை''யை (signification) அடைகின்றன. மொழிக்குறிகள் பிறகுறிகளோடு இணைப்புத்தொடர்பைக் காட்டுவதன் மூலம் ''மதிப்பை'' (value) அடைகின்றன. மொழிக்குறியின் ''குறிப்புத் தன்மை'', ''மதிப்பு'' இரண்டும் இணையும் போது மொழிக் குறிகள் ''பொருளடக்கம் அல்லது பொருளமைப்பை''ப் (content) பெறுகின்றன. பிரஞ்சு மொழியில் காணப்படும் மொழிக்குறி <mouton> ஆங்கில மொழிக்குறி <mutton> க்கு சமமானது என்று நாம் பொதுவாகக் கூறினாலும், சசூர் அவைகளை ''குறிப்புத்தன்மை''யில் சமமானது என்றும் ''மதிப்பில்'' வேறுபட்டவை என்றும் கருதுவார். அதன் காரணம் பிரஞ்சு <mouton> ஆங்கில குறிகளான <sheep> <mutton> என்ற இரண்டு குறிகளுக்கும் பொதுவானது. ஆகவே அது இரண்டு வகை மதிப்புகளைக் கொண்டது.

மொழிக்குறியின் "மதிப்பே" மொழியை ஒரு சமுதாய உண்மை என விளக்க ஏற்றுக் கொள்ளப்படும் அடிப்படை அம்சம். மொழிக்குறியின் மதிப்பு மொழிக்குறியின் ஒலியமைப்பு எதிர்நிலையாலும், பொருள் எதிர்நிலையாலும் உருவாகும். ஒரு மொழி பேசுவோரின் மனதில் ஒரு ஒலியமைப்பு மொழிக்குறியாக உருவெடுக்க வேண்டுமானால் அது வேறுபடுத்தப்பட வேண்டும். ஆகவே மொழிக்குறி என்பது வேறுபாட்டுத்தன்மையினால்தான் நிச்சயிக்கப் படுகிறது. ஒரு மொழியைப் பேசுவோர் தம் மனதில் ஒரு மொழிக்குறியின் ஒலியமைப்பையும், பொருளையும் தெளிவற்ற முறையில் மதித்து வைத்திருக்கலாம். ஆனால் அம்மொழிக் குறியின் மதிப்பை, அம்மொழிக்கூறு பிற கூறுகளிலிருந்து வேறு பட்டு நிற்பதை தெளிவாக உணர்ந்திருப்பர். இத்தகைய வேறு படுத்தல் தன்மையே "சமுதாய உண்மையின் அம்சங்களை" உருவாக்கும் தன்மை கொண்டவையாயிருக்கும்.

இருபதாம் நூற்றாண்டில் நிலைபெற்று மொழியியல் வளர் வதற்கு முழுமுதற்காரணமாக இருந்தவர் சசூர். அவர் காட்டிச் சென்ற வழியில் பலவகையான மொழி ஆராய்ச்சிகள் மொழி வரலாற்று இயலிலும், மொழிநிலைபேற்று இயலிலும் எழுந்தன. சசூர் காட்டிய "தொடர்பு அடிப்படையான மொழி விளக்கங்கள்", பின்னர் "அமைப்பு மொழியியல்" (Structural Linguistics) கொள்கைகள் உருவாகக் காரணமாயிருந்தன. ஆகவே பலரும் சசூரை "அமைப்பு மொழியியலின் தந்தை" என அழைப்பர். அமைப்பு மொழியியல் கொள்கைகள் சசூரால் உருவாக்கப்பட்டுப் பின்னர் பிராக், கோபன்ஹேகன், லண்டன் மற்றும் அமெரிக்க மொழியியல் கொள்கைகளில் முக்கிய பங்கையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியதை இருபதாம் நூற்றாண்டு மொழியியல் வளர்ச்சியை நோக்குவோர் அனைவரும் கண்டு கொள்வர்.

**துணை நூல்கள்**

1. Bloomfield, L. 1924 : Review of Saussure's "Course de linguistic generale" : MLJ. 8: 317-9.

2. Chomsky, N. : 1965 : Aspects of the Theory of Syntax : MIT.

3. Davis, P. W. : 1975 : Modern Theories of Language.

4. de Saussure, F : 1959 : A Course in General Linguistics N Y Philosophical Library.

5. Dinnen, F. : 1969 : An Introductin to General Linguistics Holt Rinehart & Winston Inc.

6. Durkheim, E. 1938 : Rules of Sociological Method : Free Press of Glencoe

7. Geoffrey Sampson, : 1980 : Schools of Linguistics, Competition and Revolution, Hatchinson.

8. Godel, R. 1966 : De Saussure's Theory of Language: CTL. 3: 479-93.

9. ———— 1969 : A Geneva School Reader in Lingui stics, Indiana : IUP

10 G. C. : 1970 : A Survey of Structural Linguistics. Faber, London.

ins, R. H. 1967 : A Short History of Linguistics Indiana Uni. Press.

12. Rudolf Engler , 1975 : European Structuralism, Saussure : CTL. 13. 2: 829-886.

13. Wells, R. S . 1947 : De Saussure's System of Lingui- stics : Word 3: 1-37.

14. William Washbagh , 1974 : Saussure, Durkheim and Sociological Theory : Archi, Linguisticum, 5.

# இடப்பெயரில் மாற்றங்கள்

தமிழ் நாட்டில் காணப்படும் இடப்பெயர்கள் பல காலப் போக்கில் பேச்சு மொழியின் தாக்கத்தால் மாற்றமடைந்துள்ளன என்பதற்குக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்கள் சான்றாகவுள்ளன.

| இயற்பெயர் | வழங்கும்பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| அகத்தீச்சுரம் | அகத்தீஸ்வரம் | குமரி |
| பைம்பொழில் | பம்புளி | நெல்லை |
| இராமேச்சுரம் | ராமேஸ்வரம் | இராமநாதபுரம் |
| திருத்தண்கால் | திருத்தங்கல் | ,, |
| குன்றக்குடி | குன்னக்குடி | ,, |
| திருமெய்யம் | திருமயம் | புதுக்கோட்டை |
| திருமோகூர் | திருமுக்கூர் | மதுரை |
| கருவூர் | கரூர் | திருச்சி |
| திருஎறும்பியூர் | திருவெறும்பூர் | ,, |
| திருமழபாடி | திருமலவாடி | ,, |
| வெற்றியூர் | வெத்தியூர் | ,, |
| சேய்ஞலூர் | சேங்கனூர் | தஞ்சை |
| திருப்பழனம் | திருப்பயணம் | ,, |
| திருக்கொள்ளிக்காடு | தெற்குக்காடு | ,, |
| கன்றாபூர் | (கோவில்) கண்ணரப்பூர் | ,, |
| கீழ்வேளூர் | கீவலூர் | ,, |
| திருஅழுந்தூர் | தேரழுந்தூர் | ,, |
| திருஇடவெந்தை | திருவடந்தை | செங்கல்பட்டு |
| திருப்புட்குழி | திருப்பக்குழி | ,, |
| திருவேட்களம் | திருவக்குளம் | தென்னாற்காடு |
| கோவன்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |

ஆதாரம் : டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை (1946) தமிழகம் ஊரும் பேரும் பழநியப்பா பிரதர்ஸ், சென்னை.

# குறிப்பு வினையெச்சம்

சு. அழகேசன்
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்

குறிப்பு வினையெச்சங்கள் பற்றிய இலக்கணங்களைச் சுட்டிக் காட்டுவதோடு, சங்க இலக்கிய வடிவங்களிலிருந்து (forms அதன் அமைப்பு நிலைகளையும் (structure) வரையறுப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியம் தெரிநிலை வினையெஞ்சு கிளவிகளின் இலக்கணங்களையும் அதன் வாய்பாடுகளையும் உணர்த்திய போதிலும், குறிப்பு வினையெச்சங்கள் பற்றி யாங்ஙனும் உணர்த்த வில்லை. அவர் எழுத்ததிகாரத்தில் 'இன்றி' என்னும் வினை யெஞ்சு கிளவியின் இகரம் செய்யுளின் கண் உகரமாகத்திரியும் என மட்டுமே உரைக்கிறார் (தொல். 237). உரையாசிரியர் இளம்பூரணர் 'அன்றி' என்பதும் செய்யுளில் மாறும் எனக் காட்டுவர் (இளம். எழுத்து-238).

சேனாவரையர் 'இன்றி', 'அன்றி', 'அல்லது', 'அல்லால்' என்பனவற்றையும் (சேனா. 229), தெய்வச் சிலையார் 'இன்றி', 'அன்றி' என்பனவற்றையும் (தெய். 223), நச்சர் 'இன்றி', 'அன்று' என்பனவற்றையும் நச்சர். 230) குறிப்பு வினை யெச்சங்களாகக் காட்டுவர். நச்சர், மேலும் 'அல்லது', 'அல்லால்' எனவரும் குறிப்பு எச்சம் பெயர்த்தன்மை உடையவாய் முன் வந்த வினையின் காலத்தை உணர்த்தி (நச்சர். 231) என்ற ஒரு குறிப்பையும் தருகிறார். ஆனால், இவர்களும் குறிப்பு எச்சங் களின் இலக்கணத்தைத் தெளிவாகச் சுட்டவில்லை.

முதன்முதலில் வினையெச்சம் பற்றிய சிந்தனையைத் தரு வதும் இலக்கணம் வகுப்பதும் நன்னூலே. இஃது வினையெச்ச இலக்கணங்களைத் தெரிநிலை, குறிப்பு இரண்டிற்குமாகவே வகுக்கிறது. இருதிணைப் பொது வினையுள் எச்சங்களை அடக்கும். நன்னூலார் தொழிலும் காலமும் விளக்கி, வினை முற்றுக்கு வேண்டும் பாலொன்றும் தோன்றாது, அப்பாலுடனே வினையொழிய எஞ்சி நிற்பன வினையெச்சங்களாகும் (நன். 342) என இலக்கணத்தையும் வரையறுப்பார். மேலும் அவர் வினைக் குறிப்பு முற்றே குறிப்பு எச்சங்களாக வரும் (நன். 351) என்ற கருத்தையும் தருவர்.

நன்னூல் உரையாசிரியர்கள் குறிப்பு வினை எச்சங்கள் பற்றிய பல விளக்கங்கள் தருகின்றனர். ஆறுமுகநாவலர், அறமன்றிச் செய்தான், அறமல்லாதில்லை, அறமல்லாமே யில்லை, அறமல்லாமை யில்லை, அறமல்லாமலில்லை, நீ யல்லா லில்லை என வினையெச்சக் குறிப்புக்களுக்கு நி, து, மே, மை, மல், ஆல் என்பவை விகுதிகளாக வரும் எனக் கூறுவர் (ஆறுமுக. 343). இவ் வெச்ச விகுதிகளோடு அ, கால், கடை, வழி, இடத்து, என்பன வற்றையும் விகுதிகளாகச் சேர்த்ததோடு உடன்பாடு, எதிர்மறை வடிவங்களும் உண்டு என்ற கருத்தையும் தருகிறார், சடகோப இராமானுஜாசாரியார் (சடகோப. 146). இலக்கண விளக்கமும் குறிப்பு எச்சங்கள் பற்றிப் பேசுகிறது. குறிப்பு முற்றே குறிப்பு எச்சங்களாகத் திரியும் என இஃது கூறும் (இல. விள. 250). இதன் உரையில் குறிப்பு வினை எச்சங்கள் பற்றிய விளக்கங்கள் காணக்கிடைக்கின்றன.

1. குறிப்பு வினை எச்சம் வினையையும், குறிப்பு வினையையும் முடிபாகக் கொண்டு முடியும்.

(எ. கா. உழுது அன்றி உண்ணான்: அறம் அன்றி இலன்)

2. குறிப்பு வினைமுற்று எச்சமாய்த்திரியும்.

3. குறிப்பு முற்றினை வினையெச்சம் ஆக்குங்கால் ஆய் என்ற வாய்பாடு சேர்த்துப் பொருள் கொள்க.

| கு. வி. மு. | பால் | கு.வி. எச்சம் |
|---|---|---|
| வில்லன் | ஆண்பால் | வில்லனாய் |
| முகத்தள் | பெண்பால் | முகத்தளாய் |
| கையினர் | பலர்பால் | கையினராய் |
| விழுமிது | ஒன்றன்பால் | விழுமிதாய் |
| கைய | பலவின்பால் | கையவாய் |
| நெஞ்சினேன் | தன்மைஒருமை | நெஞ்சினேனாய் |
| கண்ணேம் | தன்மைப் பன்மை | கண்ணேமாய் |
| கண்ணை | முன்னிலை ஒருமை | கண்ணையாய் |
| வலத்தினிர் | முன்னிலைப் பன்மை | வலத்தினிராய். |

4. இன்றி, அன்றி, அலது, அல்லால் போல்வன குறிப்பு வினை எச்சங்கள்.

இலக்கணக் கொத்தும், குறிப்பு வினை முற்றுக்களை குறிப்பு வினைமுற்று, குறிப்பு வினை எச்சம், குறிப்பு பெயரெச்சம் என மூன்றாகப் பாகுபடுத்துவதோடு (இல. கொ. 67) குறிப்பு வினை முற்றே, குறிப்பு எச்சமாதலையும் சுட்டுகிறது (இல. கொ. 82). தொன்னூல் விளக்கமும் குறிப்பு வினைமுற்று, ஈரெச்சம் எனப் பிரித்தே பேசுகிறது (தொன். வி. 103). சுவாமி நாதம் குறிப்பு வினையெச்சம் எனச் சுட்டாவிடினும் அன்றி, இன்றி என்பன வினையெச்சத்தின் தன்மையைப் பெறும் என்ற குறிப்பைத் தரும் (சுவாமி. 53).

இலக்கண தீபம் குறிப்புவினைகளைக் குறிப்பு வினைமுற்று, குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப் பாகுபடுத்து

வதோடு, எதிர்மறை, உடன்பாடு எனவும் பாகுபடுத்துகின்றது. (இல. தீப. 5) ஆனால் விரிவான இலக்கணம் தரவில்லை. பிற்காலத்தில் தோன்றிய தமிழ் நூலிலும், குறிப்பு வினை யெச்சங்கள் பற்றிய எண்ணங்கள் கொண்டிருந்தாலும் (தமிழ்.358) விரிவான இலக்கணம் வகுக்கவில்லை. ஆறுமுக நாவலர் இலக்கணச் சுருக்கத்தில் சில விளக்கங்களைத் தருகிறார் (இல. சுரு. 230)

1. பால் காட்டும் முற்று விகுதிப் பெறாத குறைச் சொல்லாய் வினைச் சொல்லைக் கொண்டு முடியும் வினை குறிப்பு வினை எச்சமாகும்.

2. குறிப்பு வினை எச்சங்கள் தெரிநிலை விகற்பங்கள் கொள்ளும்.

அறமன்றிச் செய்தான் அறமன்றிச் செய்யான் - தெரி. வி. மு.

அறமன்றிச் செய்த அறமன்றிச் செய்யாத - தெரி. பெ. எ.

அறமன்றிச் செய்து அறமன்றிச் செய்யாது - தெரி. வி. எ.

அறிமன்றிச் செய்தமை அறமன்றிச் செய்யாமை - தெரி. தொ. பெ.

3. குறிப்பு வினை எச்சங்கள் குறிப்பு வினை விகற்பங்கள் கொள்ளும்.

அறமன்றி யிலன் - கு. வி. மு.

அறமன்றி இல்லாத - கு. பெ.

அறமன்றி இல்லாதவன் - கு. வி. அ. பெ.

அறமன்றி இன்மை - கு. தொ. பெ.

4. உடன்பாட்டு குறிப்பு வினையெச்சங்கள் பண்படியாகத் தோன்றி அகர விகுதியைப் பெற்று வரும் (இல. சுரு. 277). இவை செயவென்னும் வாய்ப்பாட்டு குறிப்பு வினை எச்சங் களாகும்.

மெல்லப் பேசினான் சாலப்பல
பைய நடந்தான் உறக்கரிது
வலியப் புகுந்தான் மாணப் பெரிது.

5. எதிர்மறை குறிப்பு வினை எச்சங்கள் அல், இல் என்னும் எதிர்மறைப் பண்பு அடியாகத் தோன்றி றி, து, மல், மே, மை, ஆல், கால், கடை, வழி, இடத்து என்னும் விகுதிகளைப் பெற்று வரும் இல. விள. 278).

றி - அறமன்றிச் செய்தான்
து - அறமல்லா தில்லை ; அறமல்ல தில்லை
மல் - அறமல்லாமலில்லை
மே – அறமல்லாமே யில்லை
மை – அறமல்லாமை யில்லை
ஆல் - நீ யல்லால் இல்லை
கால் - அவனல்லாக் கால் நீயார்
கடை - அவனல்லாக் கடை நீயார்
வழி - அவனல்லா வழி நீயார்
இடத்து – அவனல்லா விடத்து நீயார்

இக்குறிப்பு வினையெச்சங்கள் கல்வெட்டுக்களில் காணப்படு கிறமையையும், (வேலுப்பிள்ளை, 1976:262) இன்றைய உரை நடைகளில் கூட, இன்ன, இல்லது, இல்லாமல், இல்லாது, இன்றி, அல்லது, அல்லாமல், அன்றி என்பன வழங்குகிறமை யும், (Corden, 1962 : 292-293) இன்றைய மொழியில் அல்லது, அல்லாமல், அல்லாதன்றி முதலிய சொற்கள் வழங்கு கின்றமையையும் (Pope, 1979 : 147) அறிஞர்கள் சுட்டுவர். அல், இல் அடிகளிலிருந்து தோன்றிய இவ்வெச்சங்களைத் தெரி நிலை எச்சங்களின் ஒப்புமையாக்கத்தில் (ano!ogy) இருந்து தோன்றியிருக்கலாம் எனவும் அறிஞர்கள் சுட்டுவர் (போஸ், 1981 : 47).

இவர்களின் எண்ணங்களைக் காணும் போது குறிப்பு வினை எச்சங்கள் என்பன கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

1. பால் காட்டும் முற்று விகுதிப் பெறாத குறைச் சொல்லாய் காலமும் ஒழிய நிற்பன.

2. குறிப்பு வினை முற்றுக்களிலிருந்து வருவிக்கப் படுபவை.

3. முடியும் சொற்களாக வினைகளை ஏற்பன.

4. இன்றி, அன்றி என்பனவற்றின் இகரம் செய்யுளில் உகரமாகத்திரிவன. (இவை செய்து என் வினை யெச்சங்கள்)

5. அ, றி, து, ஆல், மல், கடை, வழி, இடத்து என்பன வற்றை வினை எச்ச விகுதிகளாக ஏற்பன.

6. செய்து, செய இரண்டையும் வாய்பாடுகளாக ஏற்று வருவன.

சங்க இலக்கியங்களில் குறிப்பு வினை எச்ச அமைப்புக்கள்

சங்க இலக்கியங்களில் குறிப்பு வினையெச்சங்களாக 23 வடிவங்கள் காணப்படுகின்றன. இதன் அமைப்புக்கள் கீழ்க் `ண்டவாறு அமைகின்றன.

1. பெ. அடை ± சாரியை / எதிர்மறை உருபு + விகுதி

(எ. கா.) நுண்ண் - இ - து [நற். 94-3, 342-8]

அரி - து [புறம். 260-21; அகம். 10-7, 28-4]

இன்ன் - ஆ - து [புறம். 143-12, 145 10]

2. குறைவினை அடி ± சாரியை + விகுதி

(எ. கா. அல்ல்-அ-து [பொரு. 94, பட். 26]

அன்-றி [மலை. 134, குறுந். 289-4]

சாரியைகள்

சாரியைகளாக அ, ஆ, இ என்ற மூன்றுமே காணப்படு கின்றன.

(எ கா.)

அல்-அ-து [நற். 189-1, குறுந். 115-6]

அல்ல்-ஆ-கால் [கலி. 64-27, 124-12];

நுண்ண்-இ-து [குறுந். 167-5]

**விகுதிகள்**

விகுதிகளாகச் சங்க இலக்கியங்களில் ஆல், கால், கு, து, தை, றி, று என்ற ஏழும் காணப்படுகின்றன.

எ. கா. அல்ல்-ஆல் [கலி. 14-10, 15-2]

அல்ல்-ஆ-கால் [கலி. 124-6]

நல்-கு [மலை. 392, பதிற். 26-49. பரி. 3-62]

நன்-கு [நற். 150-1, 247-9, அகம். 22-8]

இனி-து [பொரு. 116 ; நற். 16-10, பதிற். 6-6 ; அகம். 58-9 ; புறம். 127-7]

எளி-து [மது. 145, புறம். 160-11]

அல்ல்-அ-தை ]புறம். 38-13, பரி. 5-71, கலி. 2-14]

அன்-றி [நற். 12-10, அகம். 126-2]

அன்-று [புறம். 124-2]

**எதிர் மறைக் குறிப்பு வினையெச்சங்கள்**

எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்கள் சங்க இலக்கியங்களில் இரண்டு நிலைகளில் அமைகின்றன.

1. எதிர் மறைப் பகுதிகளே குறிப்பு வினை எச்சங்களை உணர்த்துதல்.

அல்ல் - ஆல் [கலி. 88-8, 102-9]

அன் - றி [மலை. 134, அகம். 126-2]

இல்ல் - அ-து [நற். 310-11, புறம்.331-6]

இன் - றி [சிறு. 121, கலி. 2-19, 3-1, அகம். 13-9]

இன் - று [நற். 1-6, பரி. 12-2, புறம். 76-6]

2. எதிர்மறை உருபு - ஆ எதிர்மறையை உணர்த்துதல்

எ. கா இன்ன் - ஆ - து [புறம். 43-12, 145-10]

எனவே இலக்கணிகள், சங்க இலக்கிய வடிவங்கள் இவற்றைக் கொண்டு குறிப்பு வினை எச்சங்கள் என்பன பால் காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச் சொற்களாய், வினை யெஞ்சி நிற்பதாய், செய்து, செய என்ற இரண்டையும் குறிப்பு வினையெச்ச வாய்பாடுகளை ஏற்பனவாய், வினைகளை ஏற்பதாய், அமைப்பிலும் குறிப்பு வினைகளின் இலக்கணங்களையே கொள்வ தாய் குறிப்பு வினைமுற்றுக்களிலிருந்து வருவிக்கப்படுவனவாய் அமைவன எனக் கொள்ளலாம்.

## துணை நூல்கள்


1. தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, மு. ப. 1958.

2. ,, சொல் - சேனாவரையர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1962.

3. ,, ,, தெய்வச்சிலையார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1979.

4. ,, ,, நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1974.

5. ,, ,, கல்லாடனார் உரை, தெ. பொ. மீ (பதிப்பு, தமிழக அரசு ஓரியண்டல் வரிசை எண் 48, 1971.

6. ,, ,, இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை. மு ப. 1963.

7. நன்னூல் - ஆறுமுகநாவலர் - புதுக்கியது, இராசநாயகம் (பதிப்.) வித்தியா நுபாலன் யந்திரசாலை, சென்னை, 22ம் பதிப்பு, 1958.

8. ,, - சிவஞானமுனிவர் - கழகவெளியீடு, சென்னை. ஏழா. பதிப்பு, 1971.

9. நன்னூல் - சடகோப இராமானுஜசாரியார், எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை, 18-ம் பதிப்பு, 1958.

10. ,, - சங்கரநமச்சிவாயர் - உ. வே. சா. பதிப்பு, கபீர் அச்சுக் கூடம், சென்னை, 1953.

11. இலக்கண விளக்கம் - கோபாலையர் தி. வே. (பதிப் தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு, மு. ப. 1971.

12. இலக்கணக் கொத்து (உரையுடன்), ஸ்ரீ ஆறுமுகநாவலர் பரிசோதித்தது, பொன்னுஸ்வாமி (பதிப்., வித்தியாநு பாலன் அச்சகம், சென்னை, 1956.

13. சுவாமிநாதம் - சண்முகம் செ. வை. சண்முகம் (பதிப்பு) அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறை வெளியீடு, மு. ப. 1975.

14. தொன்னூல் விளக்கம், மூலமும் உரையும், மெக்கன்சி பதிப்பு, இ. ப. 1891.

15. இலக்கண தீபம், கிருஷ்ணன், வி. எஸ் (பதிப்.) Bulletin of the Govt. manuscript Library, Madras, Vol. VIII, Govt. Madras, 1955.

16. தமிழ் நூல் பாவும், உரையும், சரவணத்தமிழன், த. தமிழன் பதிப்பகம், திருவாரூர், தி. ப. 2003.

17. இலக்கணச்சுருக்கம் - ஆறுமுகநாவலர், ஆறுமுகநாவலர் அச்சகம், சென்னை, 1951.

18. Velupillai, A. 1976. Study of the Dialects in Inscriptional Tamil, Trivandrum, DLA :

19. Arden, A. H. 1962. A Progressive Grammar of Common Tamil, Christian Literary Society, Madras.

20. Pope, G. U. A Hand Book of the Tamil Language, Asian Educational Service, Delhi. Ed. 7.

21. Beschi, 1974. A Grammar of the High Dialect of the Tamil Language, The Tanjore Maharaja Sarfojis Saraswathi Mahal Library, Thanjavur.

22. Agesthialingom, S. and S. V. Shanmugam, 1970. The Language of the Tamil Inscription Au: Annamalai nagar.

மொழியியல் 6. 1, (1982)

# திணை - பால் பாகுபாடு

செ. வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

## 1. முன்னுரை

சொற்களைப் பலவிதமாகப் பாகுபாடு செய்யலாம். அவைகளில் கிரேக்க மொழிச் செல்வாக்கால் ஐரோப்பிய மொழிகளில் உள்ள மரபு இலக்கண நூல்களிலும் இன்றைய மொழிநூல்களிலும் (உதாரணம் ஹாக்கெட், 1956 : 221 லயன்ஸ், 1968 : 270) இரண்டு வகையான பாகுபாடு சிறப்பாகப் பேசப்படுகின்றன. அவையாவன; 1. சொல் வகைப்பாடு (Parts of speech); 2. இலக்கணக் கூறுகள் (Grammatical categories).

பொதுவாகச் சொல் வகைப் பாகுபாடு பரந்தது: அடிப்படையானது; இலக்கண கூறு குறுகியது; துணை நிலையானது, என்று கருதப்படுகிறது. (முழு விளக்கத்துக்கு அகத்தியலிங்கம், 1979 : 61-68 பார்க்கவும்)

## 1. 1. சொல் வகைப்பாடு

தமிழில் சொல் வகைப்பாடு பற்றி ஆய்வு நடை பெற்று வந்தாலும் அதன் எண்ணிக்கை பற்றி இன்னும் திட்ட வட்டமான முடிவுக்கு வரவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. ஆயினும் தமிழ் இலக்கண நூல்களில் சிறப்பாகத் தொல்காப்பியத்தில் இரண்டு சொல்வகைப்பாடே கூறப்பட்டிருப்பதாக அறிஞர்கள் கருதுகிறார்கள்.

> சொல்லெனப் படுப பெயரே வினையென்று
> ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே (சூத். 158)
> இடைச் சொற் கிளவியும் உரிச் சொற் கிளவியும்
> அவற்று வழி மருங்கில் தோன்றும் என்ப (சூத். 159)

என்ற இரண்டு தொல்காப்பிய சூத்திரங்களும்தான் சொல் வகைப்பாட்டைப் பற்றி விளக்குகின்றன. மீனாட்சிசுந்தரனார் (1974 : 124)

> சொல் நான்கு வகை என்ற கருத்து நேரே தொல் காப்பியத்திலிருந்து கிடைக்கவில்லை. பெயர், வினை யோடு, இடை, உரியை அவர் கூட்டவில்லை. உரை யாசிரியர்கள் வழியாகவே சொற்கள் நான்கு வகை என்ற கொள்கை தோன்றியது.

என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. எப்படியாயினும் சொல் வகைப் பாகுபாட்டை நினைத்துப் பார்த்திருக்கின்றார் என்பது தெளிவு. மொழியியல் நோக்கில் சொல் வகைப்பாடு எத்தனை என்று நிச்சயித்த பிறகே தொல்காப்பியத்தைப் புரிந்துகொண்டு மதிப்பிட முடியும்.

## 1.2. இலக்கணக் கூறுகள்

தொல்காப்பியத்துள், திணை, பால், எண், இடம், காலம் ஆகிய இலக்கணக் கூறுகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

'ஒருமை எண்ணின் பொதுப் பிரிபாற் சொல்' என்பதால் எண் (Number)என்ற இலக்கணக் கூறும்

தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னும்
அம் மூவிடத்தும் உரிய என்ப

என்பதால் இடம் (person) என்ற இலக்கணக் கூறும் விளக்கப் பட்டிருக்கின்றன.

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்றல் ஆறே

(சூத். 225)

என்னும் நூற்பாவில் முன்னிலை ஒழிந்த சொற்கள் மூன்றிடத்துக் கும், ஐந்து பாலுக்கும் பொதுவாக வரும் என்று சொல்வதால் இரண்டு இலக்கணக்கூறுகள் இடம்,பால் சேர்ந்து செயல்படுகின்றன என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது; எனினும், இடம், எண், என்ற இலக்கணக் கூறுகள் சொற்களைப் பாகுபடுத்தும்போது சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்பதால் அவை இங்கு சிறப்பாக சுட்டிக் காட்டப்பட்டன.

1. 3 சொல்வகைப்பாகுபாடும் இலக்கணக் கூறுகளும்

தொல்காப்பியர் சொல் வகைப்பாட்டை இலக்கணக் கூறு களின் அடிப்படையில் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. பெயர்ச் சொல்லை வேற்றுமை என்ற இலக்கணக் கூறு அடிப் படையிலும், வினைச் சொல்லைக் காலம் என்ற இலக்கணக் கூறு அடிப்படையிலும் தொல்காப்பியர் வருணித்துள்ளார்.

கூறிய முறையின் உருபு நிலை திரியாது
ஈறு பெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப

(சூத். 69)

பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில் நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே

(சூத். 70)

என்ற சூத்திரங்களால் பெயர் என்ற சொல் வகைப்பாடு வேற்றுமை என்ற இலக்கணக் கூறை ஏற்று, காலம் என்ற இலக் கணக் கூறை ஏற்காது வரும் என்ற உண்மையைப் புலப்படுத்தி யுள்ளார். அப்படியே,

வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்
(சூத். 198)

என்ற சூத்திரத்தால் வினை என்ற சொல்வகைப்பாடு காலம் என்ற இலக்கணக் கூறை ஏற்று, வேற்றுமை என்ற இலக்கணக் கூறை ஏற்காது வரும் என்றும் விளக்கியுள்ளார்.

திணை, பால், எண், இடம் என்ற இலக்கணக் கூறுகள் சொற்களின் பாகுபாட்டுக்கு, அதாவது உட்பிரிவுக்கு (sub classifi cation) பயன்படுபவை. இவைகளில் திணை- பால்- பாகுபாடு பற்றித் தொல்காப்பியர் விரிவாகவே கிளவியாக்கம், பெயரியல், வினையியல் ஆகிய மூன்று இயல்களிலும் வருணித்துள்ளார். எனவே திணை- பால்- பாகுபாடு; பாகுபாட்டின் அடிப்படை; சொல் வகைப்பாடும், திணை பால் பாகுபாடும்; பெயரியல், வினையியல், வருணனையில் காணப்படும் இந்தப் பாகுபாடு பற்றிய செய்திகள் ஆகியவை பற்றி மொழியியல் நோக்கில் ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## 2. திணை-பால் பாகுபாடு

தமிழில் திணை அடிப்படையில் உயர்திணை, அஃறிணை என்று இரண்டாகச் சொற்கள் பிரிக்கப்படுகின்றன. அந்த இரண்டு திணைச் சொற்களை மீண்டும் ஐந்தாக- ஐந்து பாலாகப் பிரிப்பார்கள். திணையின் உட்பிரிவாகவே பால் அமைந்துள்ளது. இதைத் தான் தெய்வச் சிலையார் 'பால் எனவே திணையும் அடங்கும்' என்று(168 ஆம் சூத்திர உரை) கூறியுள்ளார். எனவே அவை திணை-பால் என்று இங்கு பொதுவாகக் குறிப்பிட்டுள்ளன.

திணை- பால் எண்ணிக்கையில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. திணையைப் பாலாகப் பிரிக்கும் முறையில் - சிறப்பாக உயர்திணையைப் பிரிக்கும் முறையில்தான் தொல்காப்பிய உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது அது மொழி அமைப்பைச் சரியான முறையில் விளக்கப் பயன்படுவதால் மொழியியல் நோக்கில் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

தொல்காப்பியர் உயர்திணையை மூன்று பாலாகப் பிரிக்கலாம் என்பதை,

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப்பாற் சொல் உயர்திணை யவ்வே (சூத். 2)

என்ற நூற்பாவால் விளக்கியுள்ளார். இதை இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ஒருவகையாகவும், தெய்வச்சிலையார் மற்றொரு வகையாகவும் பிரித்து விளக்கியுள்ளார்கள். முன்னதை இளம்பூரணர் முறை என்று முதல் உரையாசிரியர் பெயரால் அழைக்கலாம்.

**2. 1. இளம்பூரணர்முறை**

'ஆடூஉவினை அறியுஞ் சொல்லும், மகடூஉவினை அறியுஞ் சொல்லும், பல்லோர் அறியுஞ் சொல்லோடு பொருந்தி அம்முப்பாலை அறிவிக்குஞ் சொல் உயர்திணை உடையன'

என்பது இளம்பூரணர் பொழிப்புரை. சேனாவரையர் மேலும் சில விளக்கம் கொடுத்திருப்பது தவிர இந்தப் பாகுபாட்டைப் பற்றி வேறு ஒன்றும் சொல்லவில்லை. நச்சினார்க்கினியரும், கல்லாடனாரும் இதே முறையைப் பின்பற்றியுள்ளார்கள். இந்தக் கருத்தை வரைபடமுறையில் விளக்குவதாக இருந்தால் கீழ்க்கண்டவாறு படம்போட்டுக் காட்டலாம். இப்படியேதான் இஸ்ரேலும் (1973 : 16 ; 1976 : 20) படம் வரைந்து காட்டியுள்ளார்.




அஃறிணை பால் பாகுபாட்டில் கருத்து வேறுபாடு இல்லாததால் அதுவும் இங்கு சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்தப் பாகுபாட்டில் 'எண், என்ற இலக்கணக் கூறும் இருப்பதைச் சுப்பிரமணிய சாஸ்திரி (1945 :3) சுட்டிக் காட்டியுள் ளாரே தவிர அதை ஒட்டி எப்படிப் பிரிப்பது என்று விளக்க வில்லை. இஸ்ரேலும் (1976 : 20)

'இருவகை எண் வேறுபாட்டினைத் தொல்காப்பியனார் தெள்ளிதின் புலப்படுத்தியுள்ளார்'

என்றுகூறி அதற்குக் கீழ்க் கண்டவாறு படமும் வரைந்து காட்டியுள்ளார்.




இங்கு எண்ணுக்கு முக்கியத்துவம் கொடுத்து திணை பாகுபாடு புறக்கணிக்கப்பட்டு விட்டது. அதாவது 'எண்' என்ற இலக் கணக்கூறு தமிழில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது, அவ்வளவுதான். இதனால் 'எண்' திணை - பால் பாகுபாட்டில் எப்படி இணைந்து செயல்படுகிறது என்பது புலப்படுத்தப்பட வில்லை. எனவே இந்தப் பாகுபாட்டில் சிறப்பு எதுவும் இல்லை.

**2. 2. தெய்வச்சிலையார் முறை**

தெய்வச்சிலையார் மேலே குறிப்பிட்ட சூத்திரத்தின் பொழிப்புரையில் கருத்து மாற்றம் இல்லை. உரை விளக்கத்தில்,

'ஒன்று, இரண்டு, பலவென வடமொழிப் புலவர் கூறியவாறு போலப் பாகுபாடு வழக்கின்மையின் ஒன்று பலவெனத் தமிழ் நடை இரண்டு பாலாம். அவற்றுள், உயர்திணை ஒருமை ஆடூஉ அறி சொல், மகடூஉ அறி சொல் என இருமுடிபுடைத் தாகலின் அச் சொற்கள் பலரறி சொல்லோடு கூடி மூன்று பாலாயின, அல்லது பால் உள்ளன இரண்டு என்பது அறிவித்தற்கு எனக் கொள்க'

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு உயர்திணை ஒருமை என்று பிரிவு உண்டாக்கி அதனையே ஆண், பெண் என்ற இரண்டு பிரிவு செய்கிறார். அதாவது உயர்திணையை ஒருமை, பன்மை என்று முதலில் இரண்டாகப் பிரித்துப் - பின்னரே ஒருமையை ஆண், பெண் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது பொருள். இந்தக் கருத்தை ஒட்டி, அகத்தியலிங்கம் & சுந்தரம் (1969) கீழ்க்கண்டபடி படம் வரைந்து காட்டியுள்ளார்கள்.




இங்கு அதிகபட்சம் திணை, எண், பால் ஆகிய மூன்று இலக்கணக் கூறுகள் அமைந்துள்ளதைக் கவனிக்க வேண்டும். மேலும் உயர் திணையில் எண் அடிப்படையில் பிரித்துப் பால் பிரிவு செய்ததால், ‘ஒருவர்’ என்ற சொல்லையும் திணை - பாலுள் அடக்க முடிந்தது. சில சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுக்குப் பொதுவாக வரும். அதாவது இரண்டு பிரிவுக்கும் வருவதோடு அந்தப் பிரிவின் வேற்றுமையைக் காட்டாது இருக்கும். தமிழில் ஆண், பெண், வேறுபாடு இல்லாமல் இருப்பது ‘ஒருவர்’ என்ற சொல். அது போலவே யார் என்ற சொல் பால் வேற்றுமையோ, எண் வேற்றுமையோ இல்லாமல் உயர்திணையில் எல்லாப் பாலுக்கும் வரும். இப்படிப்பட்ட பொதுச் சொற்களே பாகு பாட்டை நிர்ணயிக்க உதவுகின்றன.

தெய்வச்சிலையார் கருத்தை விளக்கும் முறையில் அமைந் துள்ள இரண்டு உண்மைகள் சுட்டிக்காட்டத்தக்கன. 1) இப்படிப் பிரிக்க வேண்டும் என்பதில் நாம் மேலே சொன்னது போல் மொழி அமைப்பைக் காரணம் காட்டாது தமிழ் இலக்கண அமைப்பைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு பொருளை மூன்றாகப்

பிரித்தால் ஒருமை, இருமை, பன்மை என்ற இலக்கணப் பாகு பாடு ஏற்பட்டு விடும். ஆனால், தமிழில் ஒருமை, பன்மை என்ற இலக்கணப் பாகுபாடுதான் உள்ளது. அதனால் அது பொருந் தாது என்பது அவருடைய கருத்து. இது அவ்வளவு சரியான பொருத்தமான காரணம் இல்லை. ஆனால் நாம் காட்டியபடி அது தமிழ் மொழி அமைப்பை ஒட்டிய பாகுபாடு ஆனதால் இன்று நாம் அதை ஏற்றுக் கொள்கிறோம். சுருக்கமாகச் சொன்னால் அவருடைய பாகுபாடு சரியானது; அதற்கு அவர் கூறிய காரணந்தான் சரியானது அல்ல. இதனால்தானோ என்னவோ தெய்வச்சிலையாரின் உரைச் சிறப்பு இதுவரை (1969 வரை) உணரப்படாமல் போய் விட்டது. தெய்வச் சிலையார் உரையில் உள்ள இரண்டாவது கருத்து: சூத்திரத்தில் உள்ள 'சிவணி' என்ற சொல்லுக்குக் கொள்ளும் இலக்கண விளக்கமே அவருடைய புதிய விளக்கத்துக்குக் காரணம். இளம்பூரணர், சேனாவரையர் போன்றோர் சிவணி என்பதை வினையெச்சமாகக் கொள்ளத் தெய்வச்சிலையார்

'சிவணி என்பது வினையெச்சமன்று; ஒடுவின் பொருண்மை தோன்ற வந்தது'

என்று விளக்கியுள்ளார். இதன்படி பொழிப்புரையில் 'ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோர் அறியுஞ் சொல் லோடு கூடி அம் மூன்று கூற்றுச் சொல் உயர்திணையிடத்த' என்று விளக்கியுள்ளார். ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்றும் ஒரு பிரிவாக அமையாமல் ஆண்பாலும், பெண் பாலும் சேர்ந்து ஒரு பிரிவாகிப் பிறகு பலர்பாலோடு சேருகிறது இதுவே அண்மை உறுப்பு ஆய்வின் (Immediate Constituen analysis) அடிப்படையாகும். உம்மைத்தொகையாக வரும் போதுதான் மூன்றையும் ஒரே விதமாகப் பிணைக்கலாம். ஏனைய இடங்களில் இரண்டு சேர்த்த பிணையில்தான் மூன்றா வது சேரும்.

தெய்வச்சிலையார் உரையில் எண் என்ற இலக்கணக் கூறு திணை-பால் பாகுபாட்டில் அடங்கியிருப்பது சூசகமாகக் காட்டப் பட்டுள்ளது.

'தமிழில் எண்ணையும், பாலையும் ஒன்று சேர்த்து ஆண்பால் பெண்பால், ஒன்றன் பால், பலவின் பால் என இலக்கண அறிஞர்கள் பகுத்தனர். எனினும் தமிழில் எண் பகுப்பு எனத் தனியாகக் காண வேண்டுவதில்லை எனக் கூறுவது தவறாகும்' என்று அகத்தியலிங்கம் (1979 : 151, 152) கூறுவதும் கவனிக்கத்தக்கது.

இங்கு பால் என்ற சொல்லின் பொருளும் தொல்காப்பிய பயிற்சியும் ஆராயத் தக்கது.

2.3. பால்

பால் என்ற சொல் பாகுபாடு அல்லது பிரிவு என்ற பொருளை அடிப்படையாக உடையது. தொல்காப்பியரும், 'டன்மையும் ஒருமையும் பாலறி வந்த' என்று பெயரியலிலும், (சூத். 196 வினையியலிலும், (சூத். 208) குறிப்பிடுவது எண் என்ற பாகு பாட்டைக் குறிக்கிறது. ஆனால்.

நீயிர், நீயென வரூஉங் கிளவி
பால் தெரி பிலவே உடன் மொழிப் பொருள
(சூத். 188)

என்ற சூத்திரத்தில் பால் என்பது ஜென்டர் (Gender) என்ற இலக்கணக் கூறையும், செக்ஸ் (Sex) என்ற ஆண், பெண், உடல் கூறு வேறுபாட்டையும் குறிப்பிடுகிறது. அல்லது மேலே கூறிய ஐந்துவிதமான பாகுபாடு - பிரிவு என்ற சிறப்புப் பொருள் உடையது; பொதுப்பொருள் அல்ல.

திணை-பால் பாகுபாட்டில் உயர்திணையில் திணை, எண், பால் என்ற மூன்று இலக்கணக் கூறுகள் அமைந்திருப்பதால் பால் என்பது ஜென்டர் (Gender) என்ற பொருளிலும் ஏனைய வற்றில் திணை-எண், என்ற இரண்டு கூறே இருப்பதால் எண்ணே பாலாக அமைந்து பாகுபாடு என்ற பொருளிலும் அமைந்துள்ளன.

### 3. பாகுபாட்டின் அடிப்படை

திணை-பால் பாகுபாடு எந்த அடிப்படையில் அமைந்தது என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். இதற்குப் பல விதமான விடைகள் இலக்கண உலகில் அளிக்கப்பட்டு வந்துள்ளன. எனவே அவற்றின் அடிப்படையைப் புரிந்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

#### 3.1. தொல்காப்பியர்

தொல்காப்பியர் உயர்திணையை 'மக்கட் சுட்டு' என்றும், அஃறிணையை 'அவரலபிற' அவரல்லாதபிறம் என்றும் சுருக்கமாக குறிப்பிட்டிருப்பது உயிரியல் (Biological) அடிப்படை என்றே கருத வேண்டியிருக்கிறது. அதாவது உலகில் மனிதன் தனி இனம் என்பதில் ஐயமில்லை. ஏனையவற்றைப் பலவகையாக உயிரியல் நிலையில் பகுக்கலாம் என்றாலும், மொழி அமைப்பில் அது தேவையற்றது என்று கருதியே அவர் குறிப்பிடவில்லை. எனவே உயிரியல் அடிப்படை என்றால் உயிரியல் முறையில் செய்யப்படும் பலவித பாகுபாடுகளைக் குறித்தது அல்ல. தொல்காப்பியர் உயிரியல் உண்மைகளை ஓரளவு உணர்ந்தவர் என்பது மரபியலால் அறியலாம். இங்கு மொழி அமைப்பு முறைக்குத் தேவையான உயிரியல் உண்மையை மட்டுமே எடுத்துக்கொண்டுள்ளார் அவர்.

#### 3.2. இளம்பூரணர்

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகியவர்கள் தரும் விளக்கத்தில் சமூக மதிப்பீடு (Social values) அடிப்படையும் உயிரியல் அடிப்படையும் கலந்து காணப்படுகின்றன. இரண்டு அடிப்படைக்கும் ஒவ்வொருவர் தரும் அழுத்தம் சிறிது வேறுபடுகிறது. நச்சினார்க்கினியர் உரையில் சமூக மதிப்பீட்டு கருத்து அதிகமாக அழுத்தம் பெற்றுள்ளது; ஏனையோரிடத்து இரண்டும் காணப்படுகின்றன.

> 'உலகத்தின் மக்கள் என்ற பொருளை உயர்திணை என்றது கூறுபாடின்மையின், அஃறிணை கூறுபாடுடைமையின்' அஃறிணை என்மனார் 'அவரல' என்னாது 'பிற' என்றான், அவை உயிருடையனவும் உயிரில்லனவும் என இரண்டு கூற்றன என்றற்கு'

என்ற இளம்பூரணர் வாசகம் உயிரியல் அடிப்படையை ஒத்துக்கொண்டு அஃறிணை உயிருடையன, உயிர் இல்லாதன என்று இரண்டு உட்பிரிவு உடையது என்று கூறுவதன் நுட்பம் சுட்டிக் காட்டத்தக்கது. மக்களில் உயிர் உடையது போலவே அஃறிணையிலும் உயிருடையன இருப்பதாலும் அதனால் சில பண்புகள் பொதுவாகக் காணப்படுவதாலும் விரவுத்திணை என்ற பாகுபாடு அமைக்க வேண்டியதாயிற்று. மேலும் உயர்திணைக் கும் அஃறிணையில் உயிருடையனவற்றுக்கும் பொதுவான சில இலக்கணப்பண்பு உண்டு. எனவேதான் மொழியியலாளர் உயிருடையனவற்றை உயிரி என்றும், உயிரில்லாதனவற்றை உயிரிலி என்றும், (Animate and inanimate) பெயர்ச் சொற்களை இன்னொரு வகையில் பாகுபாடு செய்வதும் உண்டு. (சண்முகம் 1971 : 20) உதாரணமாக ஏழாம் வேற்றுமை உருபாக உயிரிலி கள் 'இல்' என்பதும் உயிரிகள் 'பக்கல்', 'கண்' போன்றவற்றை யும் ஏற்கும், எனவே அஃறிணையில் இளம்பூரணர் குறிப்பிட்ட பிரிவு இலக்கண நோக்கிலும் பொருள் உடையது. இத்தோடு இளம்பூரணர்,

> மக்கட்சுட்டே என்பது மக்கள் என்று வரைந்து சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை என்னும் ஒருவன்'

என்று இளம்பூரணர்கூறும் போது மக்களுக்குள்ளே கொஞ்சம் உயர்வுதாழ்வு கற்பித்து, உயர்வுடையோரே உயர்திணை என்னும் போது சமூக மதிப்பீடு இலைமறை காயாகத்தான் புலப்படுத்தப் படுகிறது. இந்தக்கருத்து ஒத்துக்கொள்ளாதவர்கள் இருந்திருக்க வேண்டும்.

'மக்கள் எனினும் சுட்டு எனினும் அவரையே சொல்லியவாறு என்பர் ஒரு திறத்தார்'

என்று அவர் காலத்தில் நிலவி வந்த மற்றொரு கருத்தைக் குறிப்பிடுகிறார். இதன்படி திணைபாகுபாடு உயிரியல் அடிப் படையில் அமைந்தது என்பதே பொருள்.

### 3. 3. சேனாவரையர்

சேனாவரையர் சமூக மதிப்பீட்டை வலியுறுத்திப் பேசினாலும்

இந்தப் பாகுபாடு மொழி அமைப்பை ஒட்டியது என்றும் உணர்ந் திருக்கிறார் என்று அவர் உரையால் அறிய முடிகிறது.

> 'மக்கள்' என்றது மக்கள் என்னும் உணர்வை. எனவே மக்களே ஆயினும் மக்கள் என்று சுட்டாது பொருள் என்று சுட்டியவழி உயர்திணை எனப்படாது என்பதாம்'

என்று கூறும்போது சமூக மதிப்பீட்டு உணர்வு தெளிவாகவே விளக்கப்பட்டு விட்டது. அதாவது பேசுவோன் செய்யும் மதிப் பீடே அடிப்படை திணைப்பாகுபாடு ஆகிறது. ஆயினும்,

> 'உயர்திணை என்பன தொல்காப்பியர் குறியாகலான் ஆடூஉ, மகடூஉப் போல வழக்கொடு படுத்தும் பொருள் உணரலாகா மையின்,'

என்று குறிப்பிடும்போது இலக்கணக் கலைச்சொல்லாய் உலக வழக்கோடு சம்பந்தப்படாததாய் அமைந்தது என்ற கருத்து வெளிப்படுகிறது. எனவே சமூக மதிப்பீடு முழுவதும் பொருந்தாது; பொருத்திப் பார்க்கக் கூடாது என்ற உண்மையும் அவர் உணர்ந்திருக்கிறார் என்பதும் புலப்படுகிறது.

3. 4 நச்சினார்க்கினியர்

'மக்கட் சுட்டு' என்பதற்கு மக்களாகிய நன்கு மதிக்கப் படும் பொருள்' என்றும் 'உயர்திணை என்பதற்கு 'உயர்ந்த ஒழுக்கம்' என்றும் 'அஃறிணை' என்பதற்கு 'அவ்வொழுக்கம் அல்லவாகிய ஒழுக்கம்' என்றும் விளக்கியதோடு

> 'உயர்ந்த ஒழுக்கம் என்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி அதன் எய்துவிப்பத் தாமும்' மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள்' என்று அச்சொற்குப் பொருள் கூறினார் என்று உணர்க'. அவர் கூறிய உயர்ச்சி தோன்றத் தாமும் 'உயர் திணை' என்றே ஆளுதல் பற்றி'

என்று உரை விளக்கம் தருவது சமூக மதிப்பீட்டைக் குறிப்ப தாகவும் அதாவது மானிடத்தின் சிறப்பு பேசுவதாயும் அமைந்திருக்கிறது.

கல்லாடனார் நச்சினார்க்கினியரைத் தழுவியே உரை எழுதி யுள்ளார்.

3-5. தெய்வச்சிலையார்

> 'மக்களாவார் ஒரு நீர்மையர் அன்றி, ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய வடிவு வேற்றுமை உடையராகலின், அவ ரெல்லார் மாட்டும் பொதுவாகக் கிடக்கும் மக்கள் தன்மை யைக் குறித்து மக்கள் இவர் என்னும் பொதுப் பொருண்மை உயர்திணை ஆவது என்பது அறிவித்தற்குச் 'மக்கட்சுட்டு' என்றார்.'

என்று சொல்லியுள்ளது உயிரியல் வேறுபாட்டிலும் ஒற்றுமை யையே கவனிக்க வேண்டும் என்ற உயிரியல் அடிப்படைக்குக் கூடுதல் விளக்கம் ஆகும். மேலும் திணை என்பது ஒழுக்கம் என்று நச்சினார்க்கினியர் பொருள் கொண்டது தவறு என்பதை மறைமுகமாக.

> 'உயர் பொருள்' என்னாது திணை என்றது என்னையெனின் அவ்வாறு ஆடல் வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறியென்று உணர்க'

என்ற விளக்கத்தால் கூறியுள்ளார். அடுத்த சூத்திர உரையில் 'ஆண், பெண், அலி, ஆண்பன்மை, பெண்பன்மை, அலிப் பன்மை, இவரெல்லாம் தொக்க பன்மை என்று உயர்திணையை ஏழுவகைப்படுத்தாமல், தொல்காப்பியர் ஆண், பெண், பலர் என்று மூன்று வகையே குறிப்பிட்ட காரணம் என்ன? என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு பொதுமையாகவும் அந்தக் கேள்விக்கு நேரடியாகவும் பதில் சொல்லியுள்ளது பாகுபாட்டு அடிப்படைக்கு மொழி அமைப்பே காரணம் என்பதைத் தெளி வாக்கி விட்டது'

'ஆண், பெண், அலி, ஆண்பன்மை, பெண்பன்மை அலிப் பன்மை இவரெல்லாரும் தொக்க பன்மையெனப் பலவகைப் படுமாலெனின் பொருள் நோக்கிக் கூறினார் அல்லர்; சொல் முடிபு மூவகையென்று கூறினார் என்க. அலிப் பன்மை மகடூஉ அறிச் சொல்லானும் கூறப்படுதலானும் ஆண் பன்மையும் பெண்பன்மையும் எல்லாரும் தொக்கபன்மையும் 'வந்தார்' எனவே மூவகையாகி அடங்கிற்று என்க'

என்ற தெய்வச் சிலையார் கூற்றில் பொருள் நோக்கிக் கூறினார் அல்லர்; சொல் முடிபு மூவகை கூறினார்' என்று பொதுமை சிறப்பு வாய்ந்தது. இதைத் தான் மொழியியலாளர் அமைப்பியல் நோக்கு (Structural Point of view) என்று அழைக்கிறார்கள். அலிப்பன்மை, பெண் பன்மை, ஆண்பன்மை ஆகிய மூன்றும் 'வந்தார்' என்று முடிவதால் ஒரே வித பன்மை யாக - பலர்பாலாக அழைக்கப்படுகிறது. அப்படியே அலியும் வந்தாள் என்ற பெண்பாலாக முடிவு பெறும். எனவே.

| | | |
|---|---|---|
| 1. ஆண் | வந்தான் | I |
| 2. பெண்<br>3. அலி | வந்தாள் | II |
| 4. ஆண்கள்<br>5. பெண்கள்<br>6. அலிகள்<br>7. ஆண் - பெண் அலிகள் | வந்தார் | III |

ஏழு பெயர்கள் மூன்று வகையான வினை முற்று கொண்டு முடிவ வதால் உயர்திணை, ஆண், பெண், பலர், ஆகிய மூன்று வகையா கப் பிரிக்கப் பட்டுள்ளது என்பது தெய்வச்சிலையார் கருத்து. இதே முறையில் உயர்திணை அஃறிணை என்ற பிரிவிற்கும், உயர்திணை ஒருமை, உயர்திணைபன்மை என்ற பிரிவிற்கும். அஃறிணை ஒருமை, அஃறிணைப்பன்மை, என்ற பிரிவிற்கும் காரணம் கூற முடியும் (பிற உதாரணங்களுக்கு 3.8பார்க்கவும்)

எனவே திணை - பால் பாகுபாடு 'சொல்முடிபு நோக்கி' அமைக்கப் பட்டது என்ற தெய்வச் சிலையார் கருத்து அமைப் பியல் நோக்கில் அமைக்கப்பட்டு மொழியியல் பாணியோடு ஒத்து சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. ஆயினும் தெய்வச்சிலை யாரின் கருத்து ஆய்வு உலகில் புரிந்துகொள்ளப் படாததோடு பலரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதை வரலாறு காட்டு கிறது.

### 3.6. கால்டுவெல்

கால்டுவெல் திணை- பால் பாகுபாட்டை வரலாற்று நோக்கில் இருந்து விளக்கம் தந்துள்ளார். தொல்திராவிடத்தில் பெயர்கள் திணை-பால் வேறுபாடு அற்றனவாக இருந்து பின்னரே ஒவ் வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமாக வளர்ந்திருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். ஏனெனில் தெலுங்கில் ஒருமையி ) பெண்பாலும் ஒன்றன்பாலும், ஒன்றாகவும், (ஒரே வித பதீலீடு பெயரையும் (அதி) வினை முற்று விகுதியையும், (அதி-ஒச்சனதி 'ஆவள்-வந்தாள், அது வந்தது, ஏற்று வரும். பன்மையிலோ பெண் ஆணோடு சேர்ந்து பலர்பால் ஆகவும் ஏனையன பலவின்பால் ஆகவும் காணப்பட தமிழில் உள்ள பாகுபாடு சிறப்பு வாய்ந்த தாகத் தோன்றியிருக்கவேண்டும். ஆகவே தமிழில் திணை- பால் பாகுபாடு தத்துவார்த்தமானது என்றும் அது திராவிடர் களின் அறிவு வளர்ச்சியைக் காட்டுவதாகவும், கால்டுவெல் (1856 - 220)[2] சிறப்பித்துக் கூறியுள்ளார். கால்டுவெல் கருத்தை இலக்கண நோக்கில் தத்துவார்த்த நோக்கு(Philosophic Points of view) என்று கொள்ளலாம்.

சுப்பிரமணிய சாஸ்திரி (1930) தொல்காப்பிய சொல்லதி காரக்குறிப்பில் தெய்வச்சிலையார் உட்பட எல்லா உரை யாசிரியர் கருத்தையும் விமர்சித்து குறிப்புரை எழுதிஇருந்தாலும் 'ஆடூஉ அறி சொல்' என்ற இரண்டாம் சூத்திர உரையில் தெய்வச் சிலையார் கூறும் சிறந்த கருத்தைக் குறிப்பிடாமல் போய் விட்டதுஅவருடைய விளக்கத்தின் சிறப்பைச் சாஸ்திரியார் உணர வில்லை என்பதையே காட்டுகிறது. எனவேதான் சாஸ்திரியார் 1934 இல் தெய்வச்சிலையார் கருத்துக்கு மாறாக'பொருள் அடிப்

படையில் அமைந்தது' என்றும் குறிப்பிட்டுள்ளார் ( 1: 08)[3] இஸ்ரேலும் (1973 : 16) பொருள் அடிப்படையிலும், பகுத்தறிவு அடிப்படையிலும், திணை-பால் அமைந்தது என்று கருதுவது[4] கால்டுவெல் கருத்தின் பிரதிபலிப்பே ஆகும். ஆனால் முன்னரே குறிப்பிட்டபடி அகத்தியலிங்கம் & சுந்தரம் (1969) தெய்வச்சிலையார் கருத்தை மொழியியல் நோக்கில் விளக்கிப் பாராட்டியுள்ளார்கள்.

சமீபத்தில் சண்முகதாஸ்(1982) திணைபாகுபாடு சமண தத்துவ அடிப்படையில் அமைந்துள்ளது என்று கூறியுள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

3.7. சண்முகதாஸ்

'மக்களையும் ஏனையவற்றையும் வேறுபடுத்துவது உயிர் எனக் கொண்டால் தொல்காப்பியர் உயிரிகளை உயர்திணை என்றும், உயிரிலிகளை அஃறிணை என்றும், பாகுபடுத்தியுள்ளார் எனக்கூறலாம். ஆனால் உயிருடையனவாகவுள்ள மிருகங்கள், பறவைகள், ஊர்வன, தொல்காப்பியரால் உயர்திணையாகக் கொள்ளப் படவில்லை. தமிழ் மொழியிலே இவ் விலக்கணமரபு நன்கு வேரூன்றி விட்டது. இதனாலே காளை என்னுஞ் சொல் ஓடுதல் என்னுந் தொழிலைச் செய்யும் வினைச்சொல்லைப் பயனிலையாகக் கொள்வதென்றால்

காளை ஓடினான்

காளை ஓடிற்று

என இருவகையான வாக்கியங்களை அமைக்க வேண்டியுள்ளது'.

சண்முகதாசின் (1982 : 46) இந்தக் கூற்று திணை பாகுபாட்டின் அடிப்படையை விளக்கி அதை விமர்சித்திருக்கிறது எனலாம். இங்கு அவர் திணை - பால் பாகுபாட்டில் இரண்டு வித குறைகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். 1) திணை-பால் பாகுபாடு குறை உடையது. 2 அதனால் வாக்கிய அமைப்பில் அதாவது வினை முற்று விகுதியில் கொஞ்சம் சிக்கல் உள்ளது என்று நாம் பொதுமைப் படுத்தலாம். இவை எவ்வளவு தூரம் உண்மையானது என்று பார்க்க வேண்டும்.

திணை-பாகுபாடு குறை உடையது என்ற முதல் கருத்து அதன் அடிப்படையைத் தவறாகப் புரிந்து கொண்டதால் ஏற் பட்டது. ஏனெனில் உயர்திணை - அஃறிணையை மக்கள்/அவரல்லாத பிற எஃ்று விளக்கியதை உயிரி/உயரிலி என்று பொதுமைப்படுத்தியதே தவறு. மக்களை உயிரி என்று கூறியது மிகைப்படக் கூறுதல் என்ற குற்றம் ஆகும். ஏனெனில் உயிரி என்பது மக்களையும், பிற உயிரிகளையும் குறிக்கும். ஆகவே உயிரியின் ஒரு பகுதியாகிய மக்களைக் குறிக்கும் உயர்திணையை உயிரி என்று பொதுமைப்படுத்துவது மிகைப் படக்கூறல் ஆகி விடுகிறது. அது போல அஃறிணையை உயிரிலி என்பது குன்றக் கூறல் என்ற குற்றம் ஆகும். ஏனெனில் மக்கள் அல்லாத பிற அஃறிணை என்றால் உயிரியின் ஒரு பகுதியும் (மக்கள் அல்லா தவை) உயிரிலியும் அடங்கும். ஆகவே திணைக்கு அடிப்படை உயிரி/ உயரிலி என்ற சண்முகதாசின் கருதுகோள் தவறாக அமைந்து விட்டது. ஆனால் இன்னொரு இடத்தில் (பக் 48 கீழே கொடுக்கப்பட்டுள்ளது) திணைபாகுபாட்டைச் சரியாகவே புரிந்து கொண்டிருக்கிறார்.

திணை பாகுபாட்டை அமைத்த முறையால் ஒரு சொல் இரண்டு பொருளைக் குறிக்கும் போது இரண்டு விதமாக வினை முற்று விகுதியை பயன்படுத்த வேண்டியிருக்கிறது என்பது இரண்டாவது கருத்து. இங்கு இலக்கியம் முதலாவதாகவும், இலக்கணம் இலக்கியத்திலிருந்து பெறப்படுகிற உண்மை என்ற முறையில் இரண்டவதாகவும் அமைவதற்குப் பதிலாக. இலக்கணம் முதலாவதாகவும், இலக்கியம் இரண்டாவதாகவும் கருதப்பட்டி ருக்கிறது. மேலும் இலக்கணம் மொழிப் பயிற்சியை உருவாக்கு வது போலக் கூறுவதும் தவறு, இந்தக் கருத்தை இன்னொரு விதமாகவும் விளக்கலாம். மொழிப் பயிற்சியோ, வாக்கிய அமைப் போ, சிறப்பாக மொழியோ இயற்கையாய் இருப்பது; அவை களில் காணப்படும் ஒழுங்கை அமைப்பு முறையைக் கண்டு பிடிப்பதே இலக்கணம். அது ஒருவருடைய அறிவுக்கும், ஆற்ற லுக்கும் ஏற்ப அமைவது. எனவே இலக்கண மரபால்' இருவகை யான வாக்கியங்களை அமைக்க வேண்டியுள்ளது' என்று அவர் கூறுவது இலக்கணத்திற்கு முதலிடமும், மொழி அமைப்புக்கு இரண்டாவது இடமும் தருவதால் பொருந்தாது போய்விடுகிறது.

தொல்காப்பியர் காளை போன்று வேறு பல பெயர்கள் உயர்திணைக்கும், அஃறிணைக்கும் பொதுவாய் அமைந்து வினை முற்றால் திணை-பால் வேறு படுவதை உணர்ந்ததினாலேயே விரவுத்திணை என்ற இன்னொரு பாகுபாடும் பெயரியலில் அமைத்துள்ளார்.

மேலே குறிப்பிட்டபடி உயிரியல் நோக்கிலும் மக்களைத் தனி இனமாகவே கருத முடியும். மனித இனம் உயிரியோடு மூளை வளர்ச்சியும், நிமிர்ந்த தன்மையும் உடையது. ஏனைய உயிரிகள் மூளை வளர்ச்சி குன்றி குனிந்த தன்மையும் உடையவை. சண்முகதாஸ் உயிரியல் நோக்கில் அமையும் பாகுபாட்டைத் தவறாகப் புரிந்து கொண்டதாலும். இலக்கணம் மொழிப் பயிற்சியை உருவாக்குகிறது என்று கருதியதாலும் தான் இவருடைய கருத்து தவறாகப் போய்விட்டது.

சண்முகதாஸ் திணை பாகுபாட்டின் அடிப்படையை விளக்கியதோடு இதற்குரிய காரணம் என்ன என்ற கேள்வியையும். எழுப்பிச் சமண சமயத்தத்துவமே காரணம் என்று பதிலும் கூறியுள்ளார்.

'ஒரு காளையை உயர்திணை என்றும், மற்றைய காளையை அஃறிணை எனவும் செய்ததன் அடிப்படை என்ன? பக் - 47) என்ற கேள்வியை எழுப்பிச் சமண சமயகருத்துக்கள் அடிப் படையில் மரபியலில் உயிரிகளின் பாகுபாடு விரிவாகக் கூறப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, 'சமண சமயக் கோட்பாட்டினை எவ்வாறு தொல்காப்பியர் தன்னுடைய மரபியற் சூத்திரங்களிலே, குறிப்பிட்டுள்ளார் என்பதனை மேலும் வலியுறுத்தவேண்டியது அவசியமில்லை எனக் கருதுகிறோம். அச் சமயக் கோட்பாட்டிலே நன்கு மனம் ஊன்றிய தொல்காப்பியர் திணைப்பாகுபாடு செய்யுமிடத்து உயிரிகளாகிய ஆறறிவு அற்ற விலங்குகளையும், வீடு பேறு அடையா நரகர், தேவரையும் விலக்கி, 'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' என்று வகுத்துள்ளார். ஆகவே ஒரு காளை உயர்திணையாகவும், மற்றைய காளை அஃறிணையாகவும் தமிழ் மொழியிலே கொள்ளுதற்கு அடிப்படையாக அமைந்தது சமயதத்துவமேயாகும்' (பக் 48).

என்று முடிவு செய்துள்ளார். இங்கு சமண சமயக்கோட்பாடும் மொழி அமைப்பும் ஒத்துப்போகிறது. அப்படியிருக்கும் போது சமயக் கோட்பாடே அடிப்படை என்று எப்படிக் கூறுவது? மொழி அமைப்பில் வேறுபாடு இல்லாமல் இருந்து, இலக்கணத்தில் வேறு படுத்தியிருந்தால் தான் சமயச் செல்வாக்கு என்று உறுதியாகக் கூற முடியும். மொழி அமைப்பையே இலக்கண ஆசிரியன் உருவாக்குகிறான் என்று தவறாகக் கருதியதால் அப்படி உருவாக்குவதற்குச் சமயச் செல்வாக்குக் காரணம் என்று சண்முகதாஸ் கருதி விட்டார். மொழி அமைப்பே இயல்பானது இலக்கண ஆசிரியர் உருவாக்காதது என்னும் போது சமயச் செல்வாக்குதான் இலக்கணத்தில் செய்யும் பாகுபாட்டுக்குக் காரணம் என்பதும் சிறப்பு இழந்து விடுகிறது.

திணை - பால் பாகுபாட்டுக்கு மொழி அமைப்பை ஒட்டிய காரணங்கள் தொல்காப்பியத்திலேயே சிதறிக்கிடக்கின்றன என்பது மொழியியல் நோக்கில் பார்க்கும் போது புலனாகிறது. எனவே அவற்றைத் தொகுத்துப் பார்த்தால் பாகுபாட்டுக்கான காரணங்கள் கிடைத்து விடும்.

### 3. 8. தொல்காப்பியச் சான்றுகள்

சொற்களை உயர்திணை, அஃறிணை என்று பிரிப்பதற்கு யார்/ எவன் என்ற வினாச்சொற்கள் காரணமாகக் கருதலாம். 'யார்' என்ற கேள்வியை ஏற்பவை உயர்திணை என்றும், 'எவன்' என்ற கேள்வியை ஏற்பவை அஃறிணை என்றும் பிரிக்கலாம். எனவே தொல்காப்பியர் வினையியலில் 'யார்' என்பது உயர்திணை மூன்று பாலுக்கும் பொதுவானது; 'எவன்' என்பது அஃறிணை இரண்டு பாலுக்கும் பொதுவானது என்று கூறியதைத் திணை பாகுபாட்டின் அடிப்படையாகக் கொள்ளலாம்.

> யாஅர் என்னும் வினாவின் கிளவி
> அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே.
>
> (சூத். 210)

> அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
> ஒக்கும் என்ப 'எவன்' என் வினாவே.
>
> (சூத். 219)

இங்கு இரண்டு உண்மைகளை வற்புறுத்த வேண்டும். ஒன்று: மொழி அமைப்பு. இலக்கண உண்மைகள் என்பன அந்த மொழிக்குள் பொதுவாகவோ, சிறப்பாகவோ அமையும் பிரயோகத்தை ஒட்டியதாக அமைவது ஆகும். அதன்படி உயர்திணை/அஃறிணை வேறுபாட்டுக்கு வினாச் சொற்கள் உதவுவது அக நிலையிலே சான்று கிடைத்து விட்டது என்று பொருள். இரண்டு: சொற்களையோ, விகுதிகளையோ பலவிதமாக பாகுபடுத்த முடியுமானாலும் அந்தப் பாகுபாட்டுக்குள் அடங்காது இரண்டு, மூன்று பிரிவுகளுக்குப் பொதுவானவையும் சில இருக்கக்கூடும். அப்படிப் பொதுவாக இருப்பவையே பலபடியான பாகுபாட்டுக்கு உதவும். யார்/ எவன் என்பவை அப்படிப் பொதுவாக வரும் சொல்லாகும்.

உயர்திணையை ஒருமை/ பன்மை என்று இரண்டாகப் பிரிப்பதற்குத் தமிழில் ஒருவர்/ பலர் என்ற வேறுபாடே காரணம் ஆகும். தமிழில் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடு இருந்தாலும், ஆண்பால், பெண்பால், இரண்டுக்கும் பொதுவாக 'ஒருவர்' என்ற சொல் இருப்பதே, உயர்திணையை இரண்டாகப் பிரிப்பதற்குக் காரணமே தவிர ஒருமை, பன்மை எண் வேறுபாடு இருப்பது அல்ல. தொல்காப்பியர் ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் பொதுவாக 'ஒருவர்' வரும் என்பதை,

> ஒருவர் என்னும் பெயர் நிலைக் கிளவி
> இருபாற்கும் உரித்தே தெரியுங்காலை
>
> (சூத். 191)

என்பதால் குறிப்பிட்டிருக்கிறார்.

உயர்திணை ஒருமையை ஆண்/ பெண் என்ற இரண்டாகப் பிரிப்பதற்கு அவன்/ அவள் என்று வரும் பதிலீடு பெயர்களும், வினைமுற்று விகுதியாக அன்/ அள், என்ற விகுதிகளும் காரண மாக அமையும். பலர் பால் பற்றித் தெய்வச்சிலையார் வாதம் மேலே குறிப்பிடப்பட்டது. அவர் குறிப்பிட்ட வினைமுற்று விகுதி யோடு 'அவர்' என்றஒரு பதிலீடு பெயர் இருப்பதும் சுட்டிக்காட்டத் தக்கது. அஃறிணையை ஒன்று/ பல என்ற இரண்டாகப் பாகுபாடு செய்வது அது/ அவை என்ற பதிலீட்டுப் பெயர்களில் உள்ள

வித்தியாசத்தையும், வினை முற்றில் அது/ அன என்று வரும் விகுதி வேறுபாட்டையும் ஒட்டியது. எனவே திணையில் பாகு பாடு முழுமைக்கும், மொழி அமைப்பில் உள்ள வேறுபாடே முக்கிய காரணம் ஆகும். இவற்றில், உயர்திணை / அஃறிணைப் பாகுபாட்டுக்கும், உயர்திணை ஒருமை / பன்மை பிரிவுக்கும் தொல்காப்பியத்திலே நேரடியாகவே சான்றுகள் கொடுக்கப் பட்டுள்ளன. மற்றவற்றிற்குத் தொல்காப்பிய வருணணையி லிருந்து நாம் சான்றுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. திணை - பால் பாகுபாடும் சொல்வகைப்பாடும்

தொல்காப்பியர் முதல் சூத்திரத்தில் திணைப் பாகுபாடு எல்லாவகைச் சொல்லுக்கும் பொருந்துவது போல,

'ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே' (1. 3) என்று பொதுவாகச் 'சொல்' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதனுடைய சிறப்பை உரையாசிரியர்கள் யாரும் விளக்கவில்லை - அல்லது உரையாசிரியர்கள் அதைச் சிறப்புடையதாகக் கருதவில்லை.

'சொல்' என்று பொதுவாகச் சொன்னதால் எல்லாச்சொல் லுக்கும் பொருந்தும் ஒரு இலக்கணக்கூறா என்ற சந்தேகம் நமக்கு எழுகிறது. ஆனால் நூல் முழுமையும் பார்க்கிறபோது பெயர், வினை, என்ற இரண்டு வகைக்குமட்டுமே பொருந்துவ தாகக் கருதியிருக்கிறார் என்பது,

> வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
> பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்,(சூத். 11)

என்ற கிளவியாக்கச் சூத்திரமும், பெயரியலையும், வினையியலை யும், திணை பாகுபாட்டு அடிப்படையில் வருணிப்பதும் புலப்படுத் தும். அப்படியானால் முதல் சூத்திரத்தில் 'சொல்' என்று பொது வாகக் குறிப்பிடுவானேன் என்ற இன்னொரு கேள்வி எழுகிறது.

தொல்காப்பியர் பெயரியலில் 'சொல்லெனப்படுப பெயரே, வினையென்று; ஆயிரண்டு என்ப' சொல் (1.3) என்பது என்று கூறி யிருப்பதைக்கொண்டு இந்தச்சிறப்புப் பொருளில், கையாண்டிருப்

பதாகக்கொண்டு சமாதானம் அடைய வேண்டும். ஆனால் இதைக் கவனிக்கத்தவறி விட்டதால்தான் நன்னூலார் சொல்லின் பொது இலக்கணமாகத் திணையையும் பாலையும் சேர்த்துவிட்டாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எப்படியாயினும் பெயரும் வினையும், எப்படி திணை-பால் உணர்த்துகிறது என்று அறிந்து கொண்டால் தான் அடிப்படையிலே திணை - பால் பாகுபாடு எந்த சொல்வகைப் பாட்டுக்குச் சிறப்பாக உரியது என்று நிர்ணயிக்க முடியும்.

### 4.1. பெயரும் வினையும் திணை-பால் உணர்த்தும் முறை

தொல்காப்பியர் பெயரும் வினையும் வேறு வேறுவிதமாக திணை - பால் உணர்த்துகிறது என்பதை அறிந்துள்ளார். வினைச் சொற்கள் வினைமுற்றில் வரும் இறுதி விகுதியால் திணை-பால் உணர்த்துகிறது என்பதை வினை - விகுதிகள் இறுதியில் வரும் என்பதால் கூறியுள்ளார்.

இரு திணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்று நின்று இசைக்கும் பதினோரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே (சூத். 10)

என்பதே அந்தச் சூத்திரம். வினையில் முற்றுச் சொற்களில் திணை-பால் விகுதி தவறாது வந்து எல்லா வினைகளும் ஏற்பதால் மொழியியலார் இவற்றைத் திரிவொட்டுக்கூறு (Inflectional category) என்றும், விகுதிகளைத் திரிவொட்டு விகுதிகள் என்றும் அழைப்பார்கள். (திரிவொட்டுக்கூறு என்பதன் விளக்கத்துக்கு அகத்தியலிங்கம், 1979 : 9 பார்க்கவும்). இதன் சிறப்பு என்னவென்றால் வினைச் சொற்களில் திணை-பால் பாகுபாடு என்பது வினை-முற்றுச் சொற்களின் இறுதியில் வரும் விகுதிகளின் பாகுபாடாக அமைவது தான்.

பெயர்ச் சொற்களில் முழுச் சொல்லுமே பால் உணர்த்துவதாக அமைகிறது. இதைத் தெய்வச்சிலையார் 'பெயர்களுள் அவ்வப் பாற்குரிய பெயரைப் பாலறி கிளவியாகக் கொள்க' (157 ஆம் சூத்திர விளக்கம்) என்று கூறியுள்ளார். இந்தக் கருத்தே,

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர் வயினான (சூத். 161)

என்ற சூத்திரத்தால் குறிப்பிடப்படுகிறது. தலைவன், தலைவி, தலைவர்; கிழவன், கிழத்தி, கிழவர், போன்ற சொற்களில் விகுதிகள் பால் காட்டுகின்றனவே. இதனால் எப்படி முழுச் சொற்களே பால் உணர்த்துகின்றன என்று கொள்வது என்ற ஐயம் எழும். தமிழில் குறைவான சொற்களில் மட்டுமே விகுதி மூலம் பால் காட்டப் படுகின்றது. அங்கும் சிலசொற்களில் ஆண், பெண், பலர் ஆகிய மூன்றும் வேறு சில சொற்களில் (சோழன், சோழர்) ஆண், பலர் ஆகிய இரண்டு பால் மட்டுமே உணர்த்தப்படுகின்றன. ஆயிரக்கணக்கான சொற்களில் (தாய், தந்தை, செவிலி, காதல், கூடல்) பால் அறிந்துகொள்ள விகுதி எதுவும் கிடையாது. ஆகையால் சில சொற்களில் காணப்படும் விகுதிகள் ஆக்க விகுதிகளாக (Derivative suffix) கருதப்பட வேண்டும்; திரிவொட்டு விகுதிகளாகக் கொள்ளக்கூடாது[5] அதனால்தான் சொல்லியல் நிலையில் தொல்காப்பியரும் பெயர்களுக்கு உரிய விகுதிகளை வருணிக்கவில்லை. விகுதிகள் உடைய சொல் ஐந்து பாலையும் காட்டாததாலும் அப்படிப்பட்ட நிலையில் சொற்கள் குறைவாக இருப்பதாலும்தான் தொல்காப்பியர் இந்தச் சூத்திரத்தில் முழுச் சொல்லே பால் காட்டுகிறது என்பது போல விளக்கியுள்ளார். இப்படி ஒரு இலக்கணக் கூறு உணர்த்தப்படுவதை அடிக்கூறுகள் (Selective Categories) என்பார்கள் (முழுவிவரத்துக்கு அகத்திய லிங்கம் 1979:67 பார்க்கவும்). இதன் சிறப்பு என்னவென்றால் பெயர்ச் சொல்லின் திணை-பால் பாகுபாடு என்பது பெயர் சொற்களின் பாகுபாடாக அமைவதுதான் (இந்த சூத்திரத்தின் முழுவிளக்கத்துக்கு சண்முகம் 1982 பார்க்கவும்).

ஆகவே வினையும் பெயரும், திணை பால் உணர்த்தும் முறையும் வேறுபட்டது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அடுத்த கேள்வி: பெயர், வினை இரண்டிலும் திணை பால் பாகுபாடு எதில் அடிப்படையானது, எதில் துணை நிலையானது என்பதுதான்.

4.2. உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் 'வினையில் தோன்றும் பாலறி கிளவியும்' என்ற கிளவியாக்க சூத்திரத்திலும் போன பிரிவில் (4-1) குறிப்பிட்ட பெயரியல் சூத்திரத்திலும் கருத்து தெரிவித்துள்ளார்கள். இளம்பூரணர்.

அவன், பெண் மகன், சாத்தன், என னகார ஈறு ஆடூஉ விற்கும் மகடூஉ விற்கும் அஃறிணை ஆண் பாற்கும்.... உரியவாய் வருதலானும் வினைச் சொற்கள் போலவே இன்ன ஈறு இன்ன பாற்கு உரித்து எனப் பெயர்ச் சொல் ஈறு பற்றி உணர்த்தலாகாமையின் (சூத். 158 உரை).

என்று கூறுவது பெயரும், வினையும் பால் உணர்த்தும் முறையில் உள்ள வேறுபாட்டை எதிர்மறை நிலையில் கூறியதாகும். அதாவது நாம் மேலே குறிப்பிட்டபடி பெயரும், வினையும் வெவ்வேறு வகையாகப் பால் உணர்த்துகிறது என்று குறிப்பிடாமல் வினை போல பெயர் பால் காட்ட வில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சேனாவரையர் இளம்பூரணருடைய இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டதோடு 'இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய' என்ற சூத்திர உரையில்,

பெயரோடு வருவழித்திரிபின்றிப் பால் விளங்காமையின் வினையொடு வரும்

என்று விளக்கும்போது பெயர்க்கு விகுதி சொல்லாததற்குக் காரணம் கூறினாலும், இரண்டுக்குமுள்ள வேறுபாடு உணர்த்தப் பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

தெய்வச் சிலையார் 'வினையில் தோன்றும் பாலறி கிளவி' (சூத். 11) என்ற சூத்திர உரையில், 'திரிபின்றிப் பால் உணர்த்துவது வினையாதலின் சிறப்பு நோக்கி முற் கூறினார்'

என்று விளக்கும் போது மதிப்பீடும் செய்து விட்டார் எனலாம். இங்குத் தெய்வச்சிலையார், சூத்திரத்தின் முதலில் 'வினை' உள்ளதற்குக் கூறிய விளக்கமாக அமைந்தாலும், இலக்கண உலகில் வினையே பால் உணர்த்துவதில் சிறப் புடையது என்ற கருத்தின் பிரதிபலிப்பாக இதைக் கொள்ளலாம்

4. 3. மொழியியல் நோக்கில்

வினை சிறப்பாகத் திணை - பால் காட்டுகிறது என்பது வினை முற்றில் வரும் விகுதியால் உணர்த்துகிறது என்று பொருள் படும். அதுவும் கேட்போன் நோக்கில் மட்டுமே உண்மை. அதாவது பேசுவோன் முன்னரே பெயர்ச் சொல் என்ன பால் உணர்த்துகிறது என்பதை முடிவு செய்து அதற்கேற்ற விகுதியைப் பயன்படுத்துவதாலேயே கேட்போன் வினை மூலம் திணை - பாலை உணர்ந்து கொள்கிறான். இங்கு கூட ஒரு பிரச்சனை இருக்கிறது. உதாரணமாகி 'தந்தை' என்ற சொல் ஆண்பாலுக்கு உரியது என்று எல்லோரும் அறிவோம், தந்தை வந்தாள் என்ற வாக்கியத்தைப் பயன்படுத்திவிட்டால் கேட் போன் வினை முற்றைக் கொண்டு பெண் பால் என்று உணர்ந்து கொள்வானா ? தந்தை என்பது ஆண் பால் என்று தெரியு மாதலால் ஆண் பாலுக்குரியது என்று கொண்டு, பேசுவோன் தவறான வினை விகுதியைக் கையாண்டு விட்டான் என்று கருதுவானா? என்பது ஆராய்வதற்கு உரியது.

பால் தெரியாத அல்லது இரண்டு பாலுக்கும் உரிய பெயர்ச் சொல்லைப் பயன்படுத்தும்போது பேசுவான் என்ன பால் என்று கருதுகிறான் என்ற உண்மையே வினை முற்றின் மூலம் வெளிப்படும். எனவே வினை முற்று திணை பால் உணர்த்து கிறது என்பது பேசுவோன் என்ன பால் என்று உணர்ந்தி ருக்கிறான் என்பதன புறநிலை வெளிப்பாடே ஆகும். ஆகவேதான் மொழியியலார்கள் வினைமுற்றில் வரும் திணை-பால் - விகுதி புற நிலையானது; அடிப்படையானது அல்ல என்று கூறுவார்கள். இதற்கு ஆதாரமாக உலகமொழிகள் பலவற்றில் (உதாரணம் மலையாளம், ஆங்கிலம்) வினை முற்றில் திணை-

பால் விகுதி இல்லாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டுவார்கள். உதாரணமாக அகத்தியலிங்கத்தின் (1979: 152) கூற்று எடுத்துக் காட்டத் தக்கது.

''இப்பகுப்புகளுக்கு (எண்-பால் பகுப்பு) அடிப்படையே பெயர்ச் சொற்கள்தாம். பெயர்ச் சொற்களில் காணப்படும் எண்- பால்-பகுப்பே அடிப்படையானது. எனவேதான் பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை என்றும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்றும் பகுப்பர் இலக்கண அறிஞர்கள். வினைச்சொல்லில் காணப்படும் எண், பால் பகுப்பு, இவற்றின் சாயலேயன்றித் தனியான ஒரு கூறன்று. புறநிலையே Surface phenomenon) யன்றிப் புதை நிலை (deep) யன்று''

என்று தெளிவாகப் பெயர்ச் சொல்லில் உள்ள திணை-பால் பாகுபாடே அடிப்படையானது என்பதைப் புலப்படுத்தி விட்டார். மேலே நாம் முதல் சூத்திரத்தில் உள்ள 'சொல்' என்பதற்குப் பெயரும் வினையும் கொள்ள வேண்டும் என்பதற்குச் சில சான்றுகள் காட்டினோம். இந்தக் கருத்து நோக்கில் பார்க்கின்ற போது தொல்காப்பியர் கருத்தாக நாம் கூறியது மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியதாகிறது.

### 4.4. தொல்காப்பியச் சான்று

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் முதல் மூன்று சூத்திரங்களில் பொதுவாக திணை-பால் பாகுபாடு வருணித்து விட்டு நான்காம் சூத்திரத்தில்,

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
உயர்திணை மருங்கில் பால் பிரிந்திசைக்கும்.

(சூத்.4

என்று சில பெயர்ச் சொற்களின் திணை- பால் பாகுபாடு பற்றிக் குறிப்பிட்டுவிட்டுதான் அடுத்து ஐந்து சூத்திரங்களில் வினை

முற்றில் வரும் விகுதிகளை வருணித்துள்ளார். எனவே பெயர்ச் சொல்லில் வரும் திணை-பால் பாகுபாடே சிக்கலானதாகவும் சிறப்பானதாகவும் நினைத்து இருக்கிறார் என்று நாம் ஊகிக் கலாம். வினை விகுதிகளை திணை பால் அடிப்படையில் பிரிப் பது எளிது. ஆனால் பெயர்ச் சொல்லின் பாகுபாடு மேலே குறிப் பிட்டபடி சிக்கலானது; அடிப்படையானதுகூட. எனவே திணை பால் பாகுபாடு பெயர்ச் சொற்களுக்கு அடிப்படையானது என்று கருத வேண்டும் என்பதைத் தொல்காப்பியரும் மறைமுகமாக நான்காம் சூத்திரம் மூலம் வலியுறுத்தியுள்ளார் என்றே கொள்ள வேண்டும்.

5. பெயரியல் வினையியல் வருணனையில் பாகுபாடு

முன்னரே குறிப்பிட்டபடி பெயரியலிலும், வினையியலிலும் திணை-பால் பாகுபாடு பேசப்பட்டுள்ளது. இங்கு மூன்று முக்கிய செய்திகள் குறிப்பிடத்தக்கவை. 1) பெயரியலும், வினையியலும் ஒரே மாதிரியாக வருணிக்கப்பட்டுள்ளமை. 2) திணை- பால் பாகுபாட்டில் புதிதாகச் சில சொற்களைச் சேர்த் துள்ளமை 3) திணை- எண்ணிக்கையை மாற்றியமை, அதாவது கிளவியாக்கத்தில் 'ஆயிரு திணையின் இசைக்குமென சொல்லே, என்று குறிப்பிட்டவர் இரண்டு இயல்களிலும், அம்மூவுருபின தோன்றலாறே' (சூத். 160, 201) என்று மூன்று வகையாகப் பிரித் தமை. மூன்றாவது செய்தி 'விரவுத் திணை' என்று தனிக் கட்டுரையில் ஆராயப்படும். எனவே முதல் இரண்டு செய்திகளை மட்டும் இங்கு ஆராய்வோம்.

5.1 பெயரியல் - வினையியல் வருணனை ஒற்றுமை

தொல்காப்பியர் பெயர்ச் சொல்லை,

பெயரெனப் படுபவை தெரியுங்காலை
உயர்திணைக் குரிமையும், அஃறிணைக்குரிமையும்
ஆயிருதிணைக்கு ஓரன்ன உரிமையும்
அம்மூவுருபின தோன்றலாறே (சூத். 160)

என்று உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என்று மூன்று வகைப்படுத்தி அந்தப் பாகுபாகுபாடுகளின் விளக்கமாகப் பெயரி யலை முடித்து விட்டார். அப்படியே,

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றி
காலமொடு வரும் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக்குரிமையும், அஃறிணைக்குரிமையும்,
ஆயிரு திணைக்கு ஓரன்ன உரிமையும்
அம்மூவுருபின தோன்றலாறே - (சூத். 201)

என்று பெயரியல் போல் வினைச் சொற்களையும், மூன்று வகை யாகப் பாகுபடுத்தியதோடு அந்தப் பாகுபாடுகளின் விளக்கமாக 42 சூத்திரங்கள் அமைத்துவிட்டு, காலமயக்கம் பற்றிக் கடைசியில் ஒன்பது சூத்திரங்கள் செய்துள்ளார்.

இங்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன. 1) ஏன் வினை யியலைப் பெயரியல் பாணியில் அமைத்தார்? 2) இரண்டும் ஒரு மாதிரியில் அமைத்ததால் ஏற்பட்ட குறை நிறை என்ன இவை களுக்கு முன்னால் பெயரியலைத் திணை-பால் பாகுபாட்டின் விளக்கமாக அமைத்ததன் வன்மை, மென்மைகளைத் தெரிந்து கொண்டால்தான் இந்த கேள்விகளுக்குரிய விடை புலப்படும்.

பெயர்ச் சொற்களின் திணை-பால் பாகுபாடு என்பது சொல்லின் முழுப்பகுதியினுடைய பாகுபாடாக அமைந்து விடு கிறது. எனவே பெயர்ச் சொல்லின் பட்டியலாக பெயரியல் வருணனை அமைந்து விட்டது; சொல்லியல் பகுப்பு காணப்பட வில்லை. ஆயினும் பெயர்க்குரிய இலக்கணக்கூறான வேற்றுமை முன்னால் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் விளிமரபு என்று மூன்று இயல்களில் விரிவாகவும் ஆழமாகவும் வருணிக்கப் பட்டு விட்டன. அத்தோடு பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போதுஅடையும் வடிவ மாற்றங்கள் புணரியல், உருபுப் புணரியல் ஆகிய இரண்டு இயல்களில் எழுத்ததிகாரத்தில் விளக்கமாகவும், சிறப்பாகவும் விவரிக்கப்பட்டு விட்டன. எனவே பெயரியல் திணை- பால் பாகுபாட்டை மட்டும் வருணித்து ஓரளவு குறை இல்லாமல் போய்விட்டது.

வினைச் சொற்களின் இலக்கணம் எப்படி விவரிக்கப் பட்டிருக் கிறது என்று பார்ப்போம். படர்க்கையில் வரும் வினை விகுதி களைச் சுருக்கமாக ஐந்து சூத்திரங்களில் கிளவியாக்கத்தில்

வருணித்ததோடு சரி: வேறுசெய்திகள், வேறு எந்த இடத்திலும் விளக்கப்படவே இல்லை. வினையியலில் வினை முற்றுக்களில் திணை- பால் விகுதிகளைப் பகுத்தும், எச்சங்களைப் பட்டியல் போட்டும் (சொல்லடுக்கு முறையிலும்) சில தொடரியல் உண்மை களை விளக்கியும் சென்றுள்ளார். வினைப் பகுதி, பிறவினைப் பகுதி, காரணவினைப்பகுதி, கால விகுதி, தொழிற் பெயர் விகுதி ஆகியவை பேசப்படவேயில்லை. வினைக்குரிய இலக் கணக் கூறாகக் 'காலத்தை' விளக்கி விட்டு அது பற்றி கூட ஒன்றும் கூறாமல் போய் விட்டது கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கிறது. எப்படியாயினும் வினையின் முழு இலக்கணமும் தொல்காப்பியத் தில் வருணிக்கப்பட வில்லை. இந்தக் குறை ஏன் ஏற்பட்டது?

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் தொடரியலுக்கு முக்கியத் துவம் ளித்து சொல்லியலுக்கு அளிக்க வில்லை என்று பொது வாகக் குறிப்பிடப்படுகிறது. (இது பற்றிய சில வாதங்களுக்கு சண்முகம் 1980 : 11, 12 பார்க்கவும்) அனதவிட வினைச் சொல்லை ஒரு அலகாக (unit) கருதி விட்டதும், திணை- பால் பாகுபாடு ஒரு முக்கியமான இலக்கணக் கூறு என்று நினைத்து விட்டதுமே காரணமாக இருக்கலாமோ என்று எண்ண வேண்டி யுள்ளது. சொல்லதிகாரத்தின் முதலிலே சொல்லின் பொது இலக்கணப், சொல்லின் வகைப்பாடு முதலியவற்றைக் கூறாது அவை பெயரியலுக்கு தள்ளப்பட்டு விட்டன. அந்த இடத் தில் திணை- பால் பாகுபாட்டைக் கூறும் போது, அப்பாகு பாட்டுக்குத் தொல்காப்பியர் கொடுக்கும் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் வெளிப்பட்டு விடுகிறது. திணை-பால் பாகுபாட்டில் அடங்காத தன்மை, முன்னிலைப் பெயர்களையும், தினண பால் பாகுபாட்டில் அடக்குவதும் இந்த உண்மையை வலி யுறுத்துகிறது.[6] எனவே.திணை- பால் பாகுபாட்டுக்குக் கொடுத்த முக்கியத்துவமே இரண்டு இயலின் வருணனையும், ஒற்றுமைப்பட வழிவகுத்து விட்டதோ என்று எண்ண வேண்டியுள்ளது.

இன்னொரு காரணமும் இருக்கலாமோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. அது இலக்கண வருணனை உத்தியை ஒட்டியது.

தொல்காப்பியருடைய வருணனையில் அமைப்பு அழகு புறநிலை யிலும், அகநிலையிலும் உண்டு. மூன்று அதிகாரமாகப் பகுத்து, ஒவ்வொன்றையும் ஒன்பது ஒன்பது இயலாகப் பிரித்து விளக்குவது புறநிலை அமைப்பு அழகு ஆகும். அகநிலையில் புணர்ச்சியை வருணிக்கும்போது பொதுமை உண்டாக்க அவர் கடைப்பிடித்த சில இலக்கணஉத்திகள் முன்னரே (சண்முகம் 1980 : 233-34) விளக்கப் பட்டுள்ளன. அது போல சொல்லதிகாரத்தில், பெயரி யலையும், வினையியலையும் ஒரே மாதிரியாக விவரித்தது இலக்கண வருணனையில் பொதுமையும் எளிமையும் ஏற்படுத்த நினைத்தாரோ என்று எண்ணிப் பார்க்கலாம், ஆனால் இது ஒரு இயலில் (பெயரியல்) நிறைவையும் இன்னொரு இயலில் (வினையியல்) குறைவையும் உண்டாக்கிவிட்டது. இப்படி ஒரு நிலைக்கோ சொல் வகைப்பாட்டுக்கோ சிறப்பாகப் பொருந்துகிற வருணனைமுறை - உத்தியை மற்றொன்றுக்கும் பொருத்திப் பார்த்ததில் வெற்றியும் தோல்வியும் ஏற்பட்டதை இருபதாம் நூற்றாண்டின் மொழியியல் வரலாற்றாலும் அறிய முடிகிறது.

ஒலி, மாற்றொலி, ஒலியன் என்ற எழுத்தியலில் வருணித்த முறை சொல்லியலுக்கும் நீட்டித்து அதற்கேற்ப உருபு, மாற்றுருபு, உருபன் என்று வருணிக்கும் முறை உண்டாயிற்று. (ராபின்ஸன் (1976 : 28)[7] இது சிறப்பானதாக அமைந்துவிட்டது. அதே முறையை பைக் தொடரியலுக்கு நீட்டித்து வருணிக்கும் முறை அவ்வளவு சிறப்பாகக் கருதப்படவில்லை. சுருங்கச்சொன் னால் சோதனையாகக் கருதப்படுகிறதே தவிர சாதனை யாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. அப்படியே தொடரியலில் வெற்றி பெற்ற அண்மை உறுப்பு ஆய்வு (Immediate consti tuent analysis) முறை எழுத்தியலுக்கு எழுத்து மயக்கம் (Clustering) அசை (Syllable) ஆகியவற்றை விளக்க ஹாக்கெட் (1955) செய்தமுயற்சி சிறப்பாகக் கருதப்படவில்லை.

எனவே தொல்காப்பியர் திணை பால் பாகுபாட்டை மிக முக்கியமான இலக்கணக் கூறாகக்கருதி விட்டதும் வருணனை முறையில் பொதுமை கடைப்பிடிக்க முயன்றதும், இரண்டு இயல்

களிலும் வருணனை ஒற்றுமை ஏற்பட வழி வகுத்திருக்க வேண்டும் என்று கருத வேண்டியிருக்கிறது. இதுவே வினையியல் அமைப்பை முழுமையாக வருணிப்பதற்குத் தடையாய் அமைந்து விட்டது.

5.2. வருணனையில் உள்ள பாகுபாட்டு மாற்றம்

தொல்காப்பியர், யான், யாம், நாம் என்ற மூன்று தன்மைப் பெயர்களையும் உயர்திணைக்கு உரியதாகப் பெயரியலில் சேர்த்தது போல வினையியலிலும், தன்மை ஒருமை, பன்மை விகுதிகளை உயர்திணை விகுதிகளாகச் சேர்த்துக் குறிப்பிட்டு உள்ளார். இவை எப்படி ஆண், பெண், பலர் ஆகிய மூன்று பாலிலும் வரும் என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

சேனாவரையர்தான் முதன் முதலில் 'தன்மைப் பெயர்கள், பாலறி வந்த உயர் திணைப் பெயராக எப்படி அமைகிறது' என்ற கேள்வியை மனதில் எழுப்பிக் கொண்டு பதில் சொல்லி யுள்ளார். (192 ஆம் சூ. உரை)

'யான்' என்பது ஒருவன், ஒருத்தி யென்னும் - பகுதி உணர்த்தாதாயினும் அத்திணை ஒருமை உணர்த்தலின் பாலறி வந்த பெயராம். அல்லதூஉம் பாலறி வந்தவெனப் பன்மை பற்றிக் கூறினார் எனினும் அமையும்'
என்பது அவருடைய வாசகம்.

இங்கு இரண்டு வகையான சமாதானம் மாற்று முறையில் உள்ளன. ஒன்று பிடிக்காவிட்டால் இன்னொன்று என்றுதான் இரண்டைக் குறிப்பிட்டிருக்கிறார். முதல் சமாதானம் ஒருமை/பன்மை என்ற பால் வேறுபாடு உடையது என்பது. இங்கு 'பால்' என்ற பிரிவு பொதுப் பொருளில் கையாண்டுள்ளார். சேனாவரையர். மேலும் உயர்திணை ஒருமைக்குரிய பொதுச் சொல்லாகக் கொண்டால் ஏனைய சொற்கள் போல வினை முற்றில் 'ஆர்' (வந்தார்) கொண்டு முடிய வேண்டும். ஆகவே இந்தச் சமாதானம் அவருக்கே முழுதிருப்தியைத் தராததால் இரண்டாவது சமாதானத்தைக் கூறியுள்ளார்.

'பன்மை பற்றிக் கூறுநப்' என்பது பெரும்பான்மையான வழக்கு என்று பொருள். பதினைந்து பெயர்கள் உயர்திணைக் குரியவையாகக் கூறப்பட்டவற்றில் தன்மைப் பெயர்கள் மூன்று நீங்கிய ஏனைய பன்னிரண்டு பெயர்கள் பால் வேறுபாடு உடையன. எனவே 'அப்பதினைந்தும், பாலறி வந்த உயர் திணைப் பெயரே' (192.7,8) என்றது பெரும்பான்மையான வழக்கு என்பது சேனாவரையர் வாதம். தொகுத்துப் பெயரிடும் போதுதான் பெரும்பான்மை வழக்கு பற்றிப் பெயரிடலாம். பாகுபடுத்தும் போது அந்த முறையைக் கையாளக் கூடாது. பாகுபாட்டில் சில சொற்கள் அடங்கவில்லை யென்றால் புதிய பாகுபாடு செய்ய முயல வேண்டும் அல்லது இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்து அவைகளை உட்பிரிவுகளாக மறுபடியும் பிரிக்க வேண்டும். (தன்மைப் பெயர்கள் வேறு பெரும்பாகுபாட்டுக்கு உரியது என்பது பின்னால் விளக்கப்படும்) எனவே சேனா வரையரின் இரண்டு சமாதானமும் பொருத்தமாக அமையவில்லை.

நச்சினார்க்கினியரும் இந்தப் பிரச்சனையை நினைத்துப் பார்த்து விடைகாண முயற்சித்திருக்கிறார்.

'யான், யாம், நாம் என இருபாற்கும் பொதுவேனும் குறிப் பால் உணர்ந்துழி ஒருபால் உணர்த்தியே நிற்றலின் பால் அறிய வந்த உயர்திணைப் பெயராயிற்று'.

இங்கு நச்சினார்க்கினியர் கூறும் தன்மைப் பெயரின் பண்பும் (இருபாற்கும் பொது என்பது), அதற்குரிய காரணமும் (குறிப்பால் உணர்த்துவது) பொருத்தமாக இல்லை. பொதுவாக உயர்திணைப் பெயர்கள் மூன்று பாலுக்கு உரியவை (ஆண், பெண், பலர்) ஆனால் தன்மைப் பெயர்கள் இரண்டு பாலுக்கு (ஒருமை, பன்மை) மட்டும் பொது ஆகிறது. மேலும் அவற்றில் ஒருமை/பன்மை வேறுபாடு தெளிவாக உள்ளது. ஆகையினால் தன்மை 'இரு பாற்கும் பொது' என்பது தவறாகி விடுகிறது. அடுத்து, குறிப் பால் பால் உணர்த்துவது என்பது விரவுத் திணைப் பெயர்களில் நீ, நீயிர், ஒருவர், என்ற மூன்று சொற்கள்தான். (சூத். 193) ஏனைய விரவுத்திணை சொற்கள் கூட 'தத்தம் வினையொடு

பால் உணர்த்தும்' (சூத். 172). ஆனால் தன்மைப் பெயர்கள் வினையாலும் திணை-பால் உணர்த்தாது. உண்மையில் முன்னிலைப் பெயர்கள் போலவேதான் தன்மையும் செயல்படுகிறது. எனவே அவை விரவுத்திணைச் சொற்களில் ஒருதனிப் பிரிவாக அமைகின்றன. ஆகவே நச்சினார்க்கினியர் வாதம் தன்மைப் பெயர்களை ஏன் உயர் திணையாகக் கருத வேண்டும் என்பதற்கு உதவி செய்யவில்லை.

தன்மைப் பெயர்கள் பால் உணர்த்த வில்லை என்பதை ஒத்துக் கொண்டிருந்தால் அவை வேறு எந்த விதத்தில் உயர் திணையாக ஆகும் என்ற சிந்தனை பிறந்திருக்கும். அப்படிச் செய்யாமல் தொல்காப்பியர் கூறிய 'பாலறி வந்த உயர்திணைப் பெயரே' என்பதை வேத வாக்காகக் கொண்டு சமாதானம் கூற முற்பட்டதால்தான் அவர்களால் சரியான காரணத்தைக் கண்டு பிடிக்கமுடியாமல் போய் விட்டது.

மொழி என்பது அடிப்படையாகப் பேச்சைக் குறிக்கும். அது பேசுவோன், கேட்போன், பேசப்படும் பொருள் ஆகிய மூன்று கூற்றையுடையது. எனவே தன்மை என்பது பேசுவோனையும், முன்னிலை என்பது கேட்பானையும், படர்க்கை என்பது பேசப் படும் பொருளையும் குறிக்கும் லயன்ஸ் 1968 : 276) [8]. இந்தக் கோணத்தில் பார்க்கும்போது பேசுவோனைக் குறிக்கும் தன்மைச் சொற்கள் பேசும் ஆற்றலை உடைய மக்களைக் குறிப் பிடுகின்றன. எனவேதான் தன்மைச் சொற்கள் உயர்திணையாகக் கருதப்படுகின்றன என்று நாம் சுலபமாக விளக்கி விடலாம்.

தொல்காப்பியர் 'எல்லாம்' என்ற தன்மைப் பெயரை விரவுத் திணையாக (சூத் 176) கருதியுள்ளமையும் குறிப்பிட வேண்டும். இதற்குக் காரணம் 'எல்லாம்' என்பது அஃறிணைப் பன்மை யாகவும் வருவதுதான். இது அவருடைய விரவுத்திணைக் கோட்பாட்டை ஒட்டியது. அது நியாயமானதும் கூட. (விரவுத் திணைப் பற்றித் தனிக் கட்டுரையில் விளக்கப்படும்).

முன்னிலைப் பெயர்களைப் பொறுத்த வரையில் தொல்-காப்பியத்தில் ஒரு தடுமாற்றம் காணப்படுகிறது. நீ, நீயிர் என்ப

முன்னிலை இடப்பெயர்களை (Personal Pronouns) விரவுத்திணை யாகக் கருதி விட்டு, 'எல்லீரும்' என்ற முன்னிலை முழுமைப் பதிலீட்டுப் பெயரை (Universal Pronoun) மட்டும் உயர் திணையாகக் கருதியுள்ளார். இவற்றின் உள் கிடக்கையைப் புரிந்து கொண்டு மதிப்பீடு செய்ய முயலுவோம்.

முன்னிலை என்பது கேட்போனைக் குறிக்கும் என்று மேலே குறிப்பிட்டோம். முன்னிலை விரவுத்திணை என்றால் கேட்போன் மனிதனாகவும், விலங்கு முதலியனவாகவும் கொள்ள வேண்டும். தொல்காப்பியர் திணை பாகுபாட்டின்படிப் பார்த்தால் மனிதனுக்கு (உயர்திணைக்கு) பேசும் ஆற்றலும், கேட்கும் ஆற்றலும் உண்டு. விலங்கு முதலியவற்றிற்கு (அஃறிணைக்கு) கேட்கும் ஆற்றல் மட்டும் உண்டு என்று ஆகிறது. நாம் வீட்டில் வளர்க்கும் சில விலங்குகள் நாம் சொல்லும் சொற்கள் சிலவற்றைப் புரிந்து கொள்கின்றன என்பதற்காக முன்னிலையை விரவுத்திணையாகக் கருதி விட்டாரோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் இங்கும் வேறு சில பிரச்சனைகளும் அடங்கியுள்ளன. இவைகளை விளக்குவதற்கு முன்னால் 'எல்லீரும்' என்ற சொல்லை உயர் திணையில் அடக்கியதன் உள்கிடக்கையைப் பார்ப்போம். முதலில் வினைமுற்றில் எல்லா முன்னிலைகளையும் விரவுத்திணையாகக் குறிப்பிட்டிருப்பதால் எழுவாய்க்கும் பயனிலைக்கும் திணை-இயைபு (Concordance) இல்லாமல் போய் விடுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

எல்லீரும் என்பது முன்னிலைப் பன்மை முழுமையும் உணர்த்தும் பெயர். எனவே கூட்டமாகச் சேர்ந்து கேட்டு செயல்படும் ஆற்றல் மனிதனுக்கே உண்டு; விலங்குகளுக்கு இல்லை. விலங்குகள் தங்களுக்குள் கலந்து செயல்படாத நிலை உடையது என்று தொல்காப்பியர் கருதி இதனை உயர்திணைக் குரியதாகமட்டும் விட்டாரோ என்று நினைக்க வேண்டியிருக் கிறது.

சில விலங்குகள் கேட்கும் ஆற்றல் உடையது என்பதற்கு முன்னிலை விரவுத்திணை என்றால் கிளி, பூவை, முதலியன பேசும் ஆற்றல் உடையன என்ற உண்மையையும் புறக்கணிக்கக் கூடாது,

'பேய், பூதம், மந்தி, கிளி, பூவை பேசுதலான் ஆகுமே தன்மை பொது' என்ப ஆதலின் தன்மையும் விரவுப் பெயராயிற்று என்ற இலக்கண விளக்கஉரை (சூத். 187) மேற்கோளும் குறிப்பி டத்தக்கது. அப்படியானால், தொல்காப்பியர் ஏன் தன்மையை யும் விரவுத்திணையில் சேர்க்க வில்லை என்ற கேள்வி எழுகிறது. சில விலங்குகளின் கேட்கும் ஆற்றலைக் கருதி முன்னிலை விரவுத் திணைக்குரியது என்று இலக்கணம் அமைத்துவிட்டு இன்னும் சில விலங்குகளின் பேசும் ஆற்றலைக் குறிக்கும் வகையில் விலங்கு களை உயர்திணையில் சேர்க்காதது குறை உடையதே.

பொதுவாக விலங்குகள் பேசும் ஆற்றலும், கேட்கும் ஆற் றலும் உடையன என்னும்போது மொழியின் மிகச்சிறிய பகுதியே அவை கையாளுகின்றன என்பதே உண்மை. அதாவது அவை சில சொற்களும், சொற்றொடர்களும் அறிந்தவை. சிவஞான முனிவர் இலக்கண விளக்கச் சூறாவளியில் விலங்குகள் பேசும் ஆற்றலைப் பற்றிக்கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

'கிளி பூவை, கூறியவாறு கூறுதலல்லது இச்சொல்லை இவ்வாறு கூற வேண்டும் எனச் சொல்லுண்மை அறிந்து கூறுதல் உலகத்து இன்மையான் 'பூவையும் கிளியும் கேட்டு (சீவக 2510) என்றாற் போல்வனவும்' புனைந்துரை வகையான் கூறியதேயாம் ஆகலானும்'

என்ற சிவஞானமுனிவரின் விளக்கம் மனிதன் பயன் படுத்தும் மொழிக்கும், விலங்கு மொழிக்கும் உள்ள வேறு பாட்டைத் தெளிவுபடுத்துவதாய் உள்ளது. அப்படியே மனித னின் கேட்கும் ஆற்றலுக்கும், விலங்குகளின் கேட்கும் ஆற்றலுக் கும் வேறுபாடு உண்டு. தொல்காப்பியரே 'எல்லீரும்' என்பதை விரவுத்திணையில் சேர்க்காததால் இந்த உண்மையை ஓரளவு உணர்ந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது. எப்படியாயினும் விலங்குகளைத் திணைபாகுபாட்டில் சேர்ப்பது மொழி அமைப்பு ஆராய்ச்சியை உயிரியல் ஆராய்ச்சியின் கைக் குழந்தையாக அமைப்பதாகும். அது சிறப்புடையது அல்ல.

எனவே தொல்காப்பியர் தன்மையையும், எல்லீரும் என்ற சொல்லையும் உயர்திணையில் சேர்த்ததும் சரி; நன்னூலார் தன்மை, முன்னிலைப் பெயர்கள் எல்லாவற்றையும் விரவுத் திணையில் சேர்த்ததும் சரி அவ்வளவு சிறப்பானதாகக் கொள்ள முடியாது. இன்னொரு நோக்கிலும் இந்த முறை போற்றுதற் குரியது இல்லை என்று வாதிடமுடியும்.

பொதுவாக மனிதனே பேசவும் கேட்கவும் முழு ஆற்றல் உடையவன் என்பதே உண்மை. அந்த நோக்கில் சிலர் தன்மையையும், முன்னிலையையும், மக்கள் சுட்டுக்கு உரியதாகக் கருத வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (லயன்ஸ் 1968: 277)[9] இதைத்தமிழ் இலக்கண நோக்கில் விளக்கினால் தன் மையும் முன்னிலையும், உயர்திணையாகக் கருதவேண்டும் என்பது பொருள்.

தமிழ் இலக்கியப் பயிற்சியை நோக்கினாலும் தன்மையும், முன்னிலையும் உயர்திணையாகக் கருதலாம் என்பதற்குச் சான்று கிடைக்கிறது. உயர்திணையில் மூன்று பாலுக்கும் பொதுவாக வரும் என்று தொல்காப்பியர் கூறிய 'யார்' என்ற வினா தன்மைப் பெயரையும் முன்னிலைப் பெயரையும் ஏற்று வந்துள்ளது:

தன்மை: '(சால்பு அளந்து அறிதற்கு) யாம் யாரோ'
குறுந். 366.2

முன்னிலை: 'யாரே நீ எமக்கு' - நற். 395,1
'யார்இவண் நின்றனீர் எனக்கூறி.
- கலி.65.11

எனவே 'யார்' என்ற வினா உயர்திணை மூன்று பாலுக்கும் பொதுவானது என்பதைவிட உயர்திணைக்கு உரியது என்று பொதுமையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும்.

இலக்கணம் என்பது மொழியின் அமைப்பை, மொழிக்குள் இருக்கும் வேறுபாடுகளை ஒட்டி விளக்குவது: நாம்வாழும் உலகத்தில் உள்ள எத்தனையோ வேறுபாடுகள் பற்றிக் கவலைப் படாதது. உதாரணமாக விலங்குகளில் ஆண், பெண் வேறுபாடு

உண்டு. அந்த வேறுபாடு பற்றிய அறிவு, வாழ்க்கைக்கும் பயன் படுவது. ஆயினும் தமிழ் இலக்கண நூல்கள், அஃறிணையில் ஆண்-பெண், வேறுபாடு செய்வதில்லை. ஏனெனில் அந்தவேறு பாடு பதிலீட்டுப் பெயரிலோ, வினை முற்றிலோ பிரதிபலிப்ப தில்லை என்பதுதான். அப்படி இருக்கும் போது, மனிதன் பேசும் ஆற்றல் உடையவன் என்ற உலக அறிவைக் கொண்டு, மொழி அமைப்பில் தன்மைக்கும், அவன், அவள் போன்ற உயர்திணைப் பெயருக்கும் உள்ள வேறுபாட்டைப் புறக்கணித்து எல்லாவற்றை யும் (தன்மையும், அவன், அவள், போன்றவையும்) ஒரே திணை யில் சேர்ப்பது இலக்கணத்தின் அடிப்படை லட்சியத்துக்கே மாறு பட்டுப் போய் விடுகிறது. அது சரி, தொல்காப்பியரும், பிற தமிழ் இலக்கண ஆசிரியர்களும், எப்படி இந்த மொழி அமைப்பு உண்மையைப் புறக்கணித்தார்கள் என்ற கேள்வி கேட்கக் கூடாதா என்ற எண்ணம் ஏற்படலாம்.

தொல்காப்பியர் திணை - பால் பாகுபாடு பொதுவானது; சிறப்பான இலக்கணக் கூறு என்று நினைத்து எல்லாச் சொல் லையும் - திணை - பால் பாகுபாடு இல்லாத சொல்லையும் கூட அந்தப் பாகுபாட்டில் அடக்க முயற்சித்து விட்டதால் இந்தக் குறை ஏற்பட்டது என்று ஒருவகையில் சமாதானம் சொல்லலாம். இது பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது.

தமிழுக்கு ஐரோப்பிய அறிஞர்கள் எழுதிய இலக்கணங்களை நோக்கினால் சொற் பாகுபாடு பற்றி இன்னொரு உண்மை புலனாகிறது இன்றைய மொழியியல் நோக்கில் பார்க்கும் போது புதிய பாகுபாட்டிற்குரிய காரணமும் அடிப்படையும் பளிச்சென புலப்பட்டு விடுகிறது.

ஐரோப்பியர் எழுதிய தமிழ்மொழி இலக்கணங்களில், பெயர்ச் சொற்கள் பதிலீட்டுச் சொற்கள் (Pronouns) என்று பாகுபடுத்தி தன்மை, முன்னிலைப் பெயர்களைப் பதிலீட்டுப் பெயர்களில் அடக்கியுள்ளதைக் காணலாம். (மீனாட்சிசுந்தரன் 1961:178). இன்று நன்னூலின் சுருக்கமாக வெளிவரும் இலக்கணப் பாட நூல்களைத்தவிர ஏனைய இலக்கண நூல்களில் பதிலீட்டுப்

பெயர்கள் தனிவகையாகவே இடம் பெறுகின்றன.[10] இந்தப் பாகுபாடு ஐரோப்பிய அறிஞர்கள் தமிழ் இலக்கணத்துக்கு அளித்த கொடை என்று கூறலாம்.

மொழியியல் நூல்களில் இடம் (Person) என்ற இலக்கணக் கூறும், (விளக்கத்துக்கு லயன்ஸ், 1968:276 பார்க்கவும்; அடிக் குறிப்பு 8), பதிலீட்டுப் பெயர்கள் என்ற தனிப் பாகுபாடும், (விளக்கத்துக்கு அகத்தியலிங்கம் 1979:79-131 பார்க்கவும்) அமைத்திருப்பதைப் பார்த்தால் தொல்காப்பியர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று மூன்று இடங்களைக் (Persons) குறிப்பிட்டாலும், அந்தக் கருத்து அடிப்படையில் பெயர்களைப் பாகுபடுத்தாமல் போய் விட்டார் அல்லது இடம் என்ற இலக்கணக் கூறு இருப்பதை உணர்ந்திருந்தும் சொல் பாகு பாட்டில் அது ஒரு தனிவகுப்பாக அமைகிறது என்பதைப் பொருத்திக் காட்டாமல் போய் விட்டார் என்று நினைக்க வேண்டி யிருக்கிறது. இடம் என்ற இலக்கணக் கூறு பேச்சில் பங்கு கொள்வோரின் பங்கைப் பொறுத்தது. பேசுவோர் தன்மையாகவும், கேட்போர் முன்னிலையாகவும், பேசப்படும் பொருள் படர்க்கை யாகவும் கொள்ள வேண்டும். இது ஒரு விதத்தில் பொருள் நிலையை ஒட்டிய இலக்கணக் கூறாகும்.

அப்படியே பதிலீட்டுப்பெயர் என்பது மொழிஅமைப்பு நோக்கில் பெயர்களிலிருந்து மாறுபடுவதால் தனிப்பிரிவாக அமைவது. பதிலீட்டுப் பெயர்கள் பெயரடை ஏற்று வராது.[11] ஏனைய பெயர்களே பெயரிடை ஏற்று வரும். (அகத்தியலிங்கம் 1979 : 81) எனவே தமிழ் இலக்கண நூல்களில் வருணிக்கும் திணை–பால் பாகுபாட்டில் அடங்கும் சொற்களில் 'இடம்' என்ற இலக்கணக் கூறும் பதிலீட்டுப்பெயர் என்ற உட்பிரிவும் கூட அடங்கியுள்ளன.

## 6. முடிவுரை

திணை- பால் பாகுபாடு சொற்களைப் பாகுபடுத்துவதற்குரிய இலக்கணக்கூறு. அதில் 'எண்' என்ற இலக்கணக்கூறும் சேர்ந் துள்ளது என்பது சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தமிழ் இலக்



சொற்க

ளில் பதிலீட்டுப் பெயர்கள் என்ற ஒரு உட்பிரிவு இருப்பதை விளக்கவில்லை ; எல்லாவற்றையும் திணை - பால் பாகுபாடாகக் கருதி விளக்கி விட்டன. 'இடப்' என்ற இலக்கணக்கூறை அங்கீகரித்து அதைத்தனியே விளக்கிவிட்டுச் சொற்பாகுபாடு செய்யும் போது பொருத்திப் பார்க்காததால்தான் சில சொற்களை (தன்மை, முன்னிலைப் பெயர்களை) எந்தத் திணையில் சேர்ப்பது என்று கருத்து வேறுபாடு தோன்றக் காரணமாகும். மற்றபடி திணை - பால் - பாகுபாட்டிற்குரிய செய்திகள் தமிழ் இலக்கண நூல்களில் - சிறப்பாகத் தொல்காப்பியத்தில் சீரிய முறையில் வருணிக்கப் பட்டிருக்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. தெய்வச்சிலையார் வாசகம் திருப்தியாக அமையவில்லை 'அலிப்பன்மை மகடூஉ அறிச்சொல்லாலும் கூறப்படுதலானும் ஆண் பன்மையும்' ...... என்பதில் இரண்டு குறைகள் உள்ளன. முதலில் ஏழு பிரிவு (1) ஆண் ஒருமை, 2) பெண் ஒருமை, 3) அலி ஒருமை, 4) ஆண்பன்மை, 5) பெண்பன்மை, 6) அலிப்பன்மை, 7) இவரெல்லாம் தொக்கப் பன்மை.) குறிப்பிட்டுவிட்டுப் பின்னால் நான்குவிதப் பன்மையை மட்டும் விதந்து பேசிவிட்டு அலி (ஒருமை) பற்றி ஒன்றும் விளக்கம் தரவில்லை. 2) 'அலி பன்மை மகடூஉ அறிசொல்லானும் கூறப்படும்' என்பதும் தவறு. ஏனெனில் அலிப்பன்மையும் 'வந்தார்' எனறே முடியும். ஆகவே உரை கீழ்க்கண்டவாறு செப்பம் செய்து அடிக்குறிப்பில் கொடுக்க வேண்டும்.

'அலி மகடூஉ வறி சொல்லானும் கூறப்படுமாதலானும் அலிப்பன்மையும் ஆண்பன்மையும்'........ என்று இருந்தால்தான் வாதப்பிரதிவாதங்கள் சரியாக அமையும்.

2. This classification of nouns (i e., *tiṉai* classification) though not so imaginative as that of the Indo European and Semitic tongues is decidedly *more philosophical* for the difference between national beings and things or things which are destitute of reason is more momentuous and essential

than the difference that exists between the sexes....... The peculiar Dravidian law of gender which has now been described would appear to be a result of 'progressive intellectual and grammatical cultivation, for the masculine, feminine and epicene suffixes which from the terminations of Dravidian high easte nouns are property fragments of pronouns.

கால்டுவெல் இங்கு திராவிடமொழி என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் ஆண், பெண், பலர்பால்கள் உயர்திணையாகக் கருதப்படுவது தெலுங்கு மொழியில் இல்லாமல் தமிழில் (மலையாளம், கன்னடம் ஆகியவற்றிலும்) காணப்படுவதால் தமிழ் மொழியிலுள்ள பாகுபாட்டுக்குரிய விளக்கமாகக் கொள்ளலாம்.

3. 'The *Pa:l* or the gender and number in Tamil noun, are determined more from their meaning than from their endings.' 3. சுப்பிரமணிய சாஸ்திரி (1934 : 108)

4. 'This division of classes is not based on the morphology of words but on semantics. i.e. this division is made from the point of view of meaning of the words only'.'

Tamil has a natural (or lexical) division of classes according to the reasoning faculty of beings and things.

இஸ்ரேல் (1973 : 16)

5. பெயர்ச் சொற்களில் வரும் அஃறிணைப்பன்மை விகுதிகள் திரிவொட்டுக் கூறாகக் கருதப்பட வேண்டும். சுட்டுப் பெயரில் வரும் -வை விகுதி ஆக்கப்பாடு (Derivation) ஆக்க விகுதியாகும். அதுபோல தலைவன், தலைவர், சோழன், சோழர் ஆகிய சொற்களில் உள்ளவை ஆக்க விகுதிகளாகவும் தந்தை- தந்தையர்; செவிலி - செவிலியர், தாய் - தாய்மார் போன்ற சொற்களில் வரும் விகுதிகள் திரிவொட்டு விகுதியாகும் (Balasubramanian, 1981. தமிழில் இந்தக் கருத்து சண்முகம், 1982ல் உள்ளது.)

6. இதனால் தொல்காப்பியர் 'இன்ன பெயரே இவை யெனல்' (193) என்று வேறு ஒரு சூத்திரம் செய்ய வேண்டியாகி விட்டது. ஆனால் அங்கு மொழி பற்றி இன்னொரு உண்மை இருப்பது 'விரவுத்திணை' என்ற கட்டுரையில் விளக்கப்படும்.

7. 'Among the structuralists in the 1940's morphological aualysis was deliberatly modelled on the admittedly better worked out methods of phonemic analysis'. Robins, 1976 : 28.

8. The category of persons is clearly definable with reference to the notion of participant roles; the 'first' person is used by the speaker to refer to himself as subject of discourse; the 'second' person is used to refer to the hearer; as the 'third' person is used to refer to persons or things other than the speaker or hearer. Lyons, 1968:276.

9. 'Pronouns of the first and second persons refer to human beings'. Lyons, 1968:276.

10. வடமொழியில் பெயர்ச்சொற்களில் பதலீட்டுப்பெயர் 'சர்வநாமம்' என்று தனிப் பிரிவாக (பாணினி அஷடாத்தாயி 1.1. 27) கொடுக்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழியிலும் முதன் முதலில் தனி இலக்கண நூல் எழுதிய டயோனிசியஸ் த்ரேக்ஸ் (சுமார் கி.மு. முதல் நூற்றாண்டு) சொற்களை எட்டுவகையாகப் பாகுபடுத்தி அதில் பதிலீட்டுப் பெயரைத் தனிப் பிரிவாகக் கொண்டுள்ளார். (Robins, R. H. 1967 : 33)

இஸ்ரேல் (1976 : 25) 'மாற்றுப் பெயர்களும் (Pronouns) 'பெயர்' என்னும் சொல்லின் கீழ்த் தொகுக்கப் பெற்றாலும் அவைதனி நூற்பாக்களில் விளக்கப்பெற்றமையே அவை பெயரின் சிறிது வேறுபட்ட வகையின என்பதைக் கொள்ள இடம் தருகின் றன' என்று குறிப்பிட்டு (தொல் 162, 167, 184 - 89) நன். 246, 247 என்ற சூத்திரங்களைச் சான்று காட்டியுள்ளார்.

உண்மையில் தொல்காப்பியர் 162ல் சுட்டுப்பெயர்கள் தெளிவாக உயர்திணைப் பால்காட்டுவதால் அவற்றை முதலில் குறிப்பிட்டு, தன்மை பெயர்களை மட்டும் அங்கு குறிப்பிட்டுள்ளார். 167 இல் அஃறிணைப் பெயர்களின் பட்டியல் பேசப்பட்டுள்ளது. 184 - 89 என்ற சூத்திரங்கள் விரவுப் பெயர்களைத் தொகுத்துச் சொல்லிய தில் அடங்கிய சில சொற்களின் விளக்கமே தவிர மூவிடப் பெயர் கள் என்பதால் தனியே விளக்கப்படவில்லை. இங்கு தன்மை மூவிடப் பெயர்களை ஓரிடத்திலும் முன்னிலை, படர்க்கை மூவிடப் பெயர்களை மற்றொரு இடத்திலும் கூறுவதால் மாற்றுப்பெயர் என்பது தனி உட்பிரிவு என்ற கருத்து தொல்காப்பியருக்கு இல்லையென்றே கருதவேண்டி இருக்கிறது.

11. இதற்கு மாறாக இஸ்ரேல் (1976 : 65) மாற்றுப் பெயருக்கு (Pronouns) முன்னர் இவ் வெண்ணின் (ஒன்று) பெயரடை வடிவம் வருதலைச் சங்க இலக்கியத்தில் காணலாம். ஓர்யான் (குறுந். 6, புறம்.137) ; ஒருநின்பாணன் (குறுந். 127); ஒரு தான் ஆகி (குறுந். 76 என்று குறிப்பிட்டுள்ளது வருணனை உண்மையாகும். அதனால் 'சங்க இலக்கியத்தில் ஒரு சில இடங்கள் தவிர பொதுவாக அவை பெயரடை, பெயரெச்சம் ஆகியவற்றால் தழுவப்படுவதில்லை' என்று இன்னொரு இடத்தில் (பக். 8) கூறுவது பொருந்தாது. ஏனெனில் பதிலீட்டுப்பெயர் சிறப்புப் பெயர்களைப்போல குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒன்றைக் குறிப்பது. எனவேதான் அவை வரையறுக்கும் எண்ணுப்பெயர் அடைகளையோ பொதுவான வேறு பெயரடை களையோ ஏற்பதில்லை என்பது எல்லா மொழிகளுக்கும் பொருந் தும் பொது உண்மை. அப்படியானால் மொழியின் பொதுப் பண்புக்குச் சங்கத்தமிழ் மட்டும் மாறி வருகிறது என்று ஆகிறது. அதாவது சங்கத்தமிழ் மொழிகளின் பொதுமைப் பண்பைப் புறக்கணித்து விட்டது என்பதல்ல இதன் பொருள். தமிழிலும் பிற மொழிகளிலும் பதிலீட்டுப் பெயர்கள் எண்ணுப் பெயர்களைப் பின்னால் பெற்றுவரலாம்

நான் ஒருவன்
நீ ஒருத்தி

அவர் இருவர்
I, one who is interested
We two will be coming

என்ற வாக்கியங்கள் சரியானவையாகக் கருதப் படுபவையே. பாரதியாரும் 'நான் ஒருவன் மட்டிலும் –பிரிவு என்னும் நரகத்தில் உழலுவதோ' என்று பயன்படுத்தியுள்ளார். (பொதுவாகத் தமிழில் பெயர்ச்சொற்களும் பின்னால்வரும் எண்ணுப் பெயர்களும் சேர்ந்த தொடர்களும், எண்ணுப் பெயரடைகளும் பெயரும் சேர்ந்த தொடர்களும் ஒத்த பொருளுடையனவாகக் கருதப் படுகின்றன.

மாணவர் இருவர் = இருமாணவர்
பால் மூன்று = முப்பால்

எனவே 'நான் ஒருவன்' என்பதை ஒப்புமையாக்கத்தால் 'ஒருநான்' என்று மாற்றியமைத்து விட்டார்கள். இதுபோல அமைந்த வாக்கியங்களே இஸ்ரேல் எடுத்துக்காட்டியவை. இவைகளை வழுவமைதியாகக் கொள்ளலாம். வழு அமைதியாக வருபவை பொது இலக்கணத்தைப் பாதிக்காது, அதனால் பொது இலக்கணமான மாற்றுப் பெயர்கள் பெயரடையை ஏற்காது என்ற கோட்பாடு தவறு ஆகாது. ஆகையினால் ஒருசில இடங்கள் தவிர மாற்றுப்பெயர்கள் பெயரடையைத் தழுவப்படுவதில்லை 'என்று கூறாமல் பொதுவாகவே பெயரடையைத் தழுவுவது இல்லை என்றுகூறலாம்

## துணை நூல்கள்


1. அகத்தியலிங்கம், ச. 1979. மொழியியல் : சொல்லியல் I பெயரியல், அண்ணாமலைநகர்.

2. அகத்தியலிங்கம், ச. & இராம. சுந்தரம், 'தொல்காப்பிய முதற் நூற்பா' செந்தமிழ் 65. 1-8

3. இலக்கண விளக்கம் – சொல்லதிகாரம், கோபாலையர் பதிப்பு, தஞ்சாவூர், 1197.

4. இஸ்ரேல், மோ. 1973, *The treatment of morphology Tolka : ppiam* - Madurai.

5. ———, 1976, இலக்கண ஆய்வு - பெயர்ச் சொல் - மதுரை.

6. சண்முக தாஸ், அ. 1982, தமிழ்மொழி இலக்கண இயல்புகள், யாழ்ப்பாணம்.

7. சண்முகம், செ. வை. 1972. *Dravidan Nouns (a Comparative study)*, Annamalai Nagar

8. ———, 1980. எழுத்திலக்கணக்கோட்பாடு, அண்ணாமலைநகர்.

9. ———, 1982, உரியவை உரிய-பெயர் வயினான' ஆய்வுக்கோவை. 14. 479-84.

10. சுப்பிரமணிய சாஸ்திரி, பி. சா. 1930, தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரை.

11. ———, 1934. *History of grammatical theories in Tamil in relation to the grammatical literature in Sanskrit*. Madras.

12. ———, 1945. *Tolka : ppiyam. Collatika : ran* (English translation) 2nd Edition 1979. Annamalai Nagar.

13. தொல்காப்பியம் : சொல்லதிகாரம், இளம் பூரணம், விளக்கவுரையுடன், கழக வெளியீடு, 1963, சென்னை.

14. தொல்காப்பியம் : சொல்லதிகாரம், சேனாவரையம் விளக்கவுரையுடன், கழக வெளியீடு, 1974, சென்னை.

15. தொல்காப்பியம் : சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம் விளக்கவுரையுடன், கழகவெளியீடு, 1974, சென்னை.

16. தொல்காப்பியம் : சொல்லதிகாரம், கல்லாடனார் உரை, கழக வெளியீடு, 1964, சென்னை.

17. தொல்காப்பியம் : சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை-விளக்கவுரையுடன், 1963, சென்னை.

18. மீனாட்சி சுந்தரன், தெ. பொ. 1974, 'உரிச்சொல்' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் I. (பதிப்பர். அகத்தியலிங்கம், ச & க. பாலசுப்பிரமணியம்) அண்ணாமலைநகர்.

19. Meenakshisundaran T. P 1961. 'The Tamil of the seventeenth Century' in *Collected papers of T. P. Meenakshisundaram*, Annamalainagar.

20. Balasubramanian, K. 1981. A descriptive grammar of Tolkappiyam - unpublished Ph. D.

21. Caldwell, R. 1856. *A Comparative grammar of the Dravidian or south Dravidian family of languages*, Revised Ed. Reprinted, Madras.

22. Hockett, C. F. 1955. *A manual of phonology*, Baltimore.

23. Hockett, C. F. 1956. *A course in Modern Linguistics*, Newyork.

24. Lyons, I 1968. *Theoretical Linguistics*, London

25 Natarajan. T. 1977. *The language of sangam literature and Tolkvppi : yam, Madurai.*

26 Robins, R. H. 1967. A *Short history of Linguistics*, London.

27 Robins R. H. 1976 some *Continnities* and discotninuities in the History of Lnnguistics' in *History of Linguisties of Thought and contemporary Linguistics*, Berlin.

# பேச்சு வழக்கில் நல்ல தமிழ்ச் சொற்கள்

ஒரு இடத்தில் வழக்கொழிந்த இலக்கியச் சொற்கள் மற்றொரு இடத்துப் பேச்சுவழக்கில் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் வழங்கும் பேச்சு வழக்குச் சொற்கள் சிலவற்றைக் கூறலாம்.

1. ஏம்மா — செல்லமாக அழைக்க உதவும் விழிச்சொல், ஆடவரைக்கூட ஏம்மா என்று கூப்பிடுவர்.
2. கம்பத்தம் — முதலாளிக்குக் கீழ், பயிர் வேலை செய்வோரைக் கண்காணித்தல்.
3. சிகடு — எண்ணெய்ப் பசையோடு கூடிய மயிர்ச் சிக்கல்.
4. தடம் — பாதை
5. தனியாகாபி — உலர்ந்த கொத்தமல்லி நீர்
6. தாழி — இரும்பு அடுப்பு
7. தேரல் — சர்பத்து
8. நகரா — முரசு, பேரிகை
9. மனுவு — மக்கள் கூட்டம்
10. மோதி — பொறுப்பு, பிணை
11. வாணல் — இருப்புச்சட்டி
12. வளாவுதல் — கலப்பது
13. வாராவதி — பாலம்

ஆதாரம் : செங்கற்பட்டு மாவட்டம்
'சோமலெ', 1963
பாரி நிலையம், சென்னை.

# கூட்டுவினைகள்--ஓர் ஆய்வு

கோ. சுப்பையா
இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்.

தமிழ் மொழியில் காணும் வினைச்சொற்களை (Verbal Bases) இரு பிரிவுகளாகப் பகுத்துணரலாம். அவை இயல்வினைகள் (Simple Verbal Bases) எனவும்; கூட்டுவினைகள் (Compound Verbal Bases) எனவும் வழங்கப்படும். கூட்டுவினைகளின் அமைப்புத்தன்மையையும் (Structure); அவைகள் மொழியில் வழங்கும் தன்மைமுறைமைகளையும் பற்றி இக்கட்டுரை விளக்க முற்படுகிறது. மேலும் ஒரு மொழியைக் கற்பிக்கும் போது அல்லது கற்கும் போது அம்மொழியில் காணும் கூட்டுவினைகள் எவ்விதம் கையாளப்படுகின்றன என்பதைப் பற்றியும், மொழிச் சொல்லடையியலில் (Lexicography) கூட்டுவினைகளை எவ்வாறு கையாளலாம் என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் காண முயலலாம்.

பொதுவாக மொழியில் காணும் சொற்களை இரு வகையில் ஆராய்ந்தறியலாம். மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்து,

மொழி பயிற்றியலில் (Pedagogical Studies) அச்சொற்களைப் பயனாக்கும் வழிமுறைகளைக் கண்டறிவது ஒன்றாகும். சொல்லடையியல் குறிப்புகளைக் கண்டறிந்து, அம்மொழிச் சொற்களுக்குச் சொல்லகராதி (Dictionary) உருவாக்குவதற்கு உரிய வழிமுறைகளைக் காண்பது இன்னொரு முறையாகும். இக்கட்டுரையில் தமிழில் காணும் கூட்டுவினைகளின் பண்புகளைப் பற்றியும் காணலாம்.

இக்கட்டுரை மூன்று பகுதிகளாகப் பிரிகிறது. முதற்பகுதி கூட்டுவினைகள் மொழியில் மொழியியல் அடிப்படையில் அமையும் தன்மையைப் பற்றியும்; இரண்டாம் பகுதி அவைகள் இடையே காணும் பொருண்மைவிரிவாக்கத்தன்மையைப் (Semantic Extention) பற்றியும்; மூன்றாம் பகுதி அவைகளின் பண்புத் தன்மையைப் பற்றியும் எடுத்து விளக்குகின்றன.

1. கூட்டுவினைகளின் அமைப்பு முறைமை

கூட்டுவினைகள் ஆக்கப் பெறும் அமைப்பின் அடிப்படையில் முப்பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. பெயருடன் (Noun) சேர்ந்து கூட்டுவினை உண்டாக்குகிறதைப் பெயர் சேர் கூட்டுவினை (Noun Based Compound Verb) எனக்கூறலாம். இப்பெயர் சேர் கூட்டுவினையைச் சேரும் பெயர்ச்சொல்லின் அமைப்புத்தன்மை அடிப்படையில் இரு சிறுபிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது இயல் பெயர் சேர் கூட்டுவினை (Original Noun based Compound Verb) எனவும், ஆக்கியப் பெயர்சேர் கூட்டுவினை (Derived Noun based Compound Verb) எனவும் பகுத்துணரலாம்.

இடைச்சொல் (particle)லுடன் சேர்ந்து அமையப்பெறும் கூட்டுவினை இன்னொரு பிரிவாகும். ஒரு வினையுடன் வேறொரு வினை சேர்ந்து அமைகின்ற கூட்டுவினையை மூன்று சிறுபிரிவுகளாக, முதல்வினையின் தன்மை அடிப்படையில் பிரிக்கலாம். முதல் வினை வினையடிச்சொல்லாகவோ (Base verb) அல்லது முற்றா வினைச் சொல்லாகவோ (infinite verb) அல்லது வினையெச்சச் சொல்லாகவோ (Verbal participle இருக்கலாம்.

கூட்டுவினைகள் அமையும் முறையினைக் கீழ்க் காணும் வரைப்படத்தில் காட்டலாம்.




புறப்படு, வெள்ளையடி, வாயடி சண்டைபோடு போன்றவை கூட்டுவினைகளில் இயல்பெயர் கூட்டுவினைகளுக்கு எடுத்துக்காட்டாகும். முயற்சிசெய், மணம்செய், ஆட்சிபுரி என்பன ஆக்கியப் பெயர் கூட்டு வினைக்குச் சான்றாகும்.

வினையடிச்சொல் கூட்டுவினைகளுக்கு எதிர்பார், அருள்செய், ஒப்புக்கொள், போக்கடி என்பன எடுத்துக்காட்டுகளாகும். சாகடி, நோகடி, தோற்கடி முதலியன முற்றாவினை கூட்டுவினையை விளக்குகின்றன. பார்த்துப்பேசு, எண்ணிப்பார், தட்டிக்கேள், சொல்லிக்கொடு, தள்ளிப்போடு, கண்டுபிடி, கொண்டுவா போன்றவைகள் வினையெச்சச்சொல்லுடன் சேர்ந்து உண்டாகும் கூட்டுவினையைக் குறிக்கின்றன.

சரிபார், கீழ்ப்படி, உட்கொள், முன்னேறு, பின்னேறு முதலியன இடைச்சொல்லுடன் வினை சேர்த்து ஆக்கிய கூட்டுவினைக்குச் சான்றாகும்.

2. கூட்டுவினைகளின் பொருண்மை முறை

சென்ற பகுதியில் கூட்டுவினைகளின் வகைகளையும், அமைப்பு முறைகளையும் கண்டோம். இனி இப்பகுதியில் கூட்டுவினைகள்

உணர்த்தும் பொருண்மைத் தன்மையைக் (Semanticness) காணலாம். பொதுவாக கூட்டுவினைகளை இரு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டால் உணர்த்தப்படும் பொருளை எளிதில் கண்டுக் கொள்ளலாம். அதாவது இங்கு கூட்டுவினைகள் வினைப்பகுதி (Verbal division) என்றும், வினையல்லாப் பகுதி (Non-Verbal division) என்றும் பிரிக்கப்படுகின்றன. இப்பாகுபாட்டினைக் கீழ்க்காணும் படம் தெளிவாக விளக்கும்.

கூட்டுவினைப்பகுதி

வினையல்லாப்பகுதி வினைப்பகுதி

பெயர்ச்சொல் (இயல்பெயர்ச்சொல்லும், ஆக்கியப்பெயர்ச் சொல்லும்), இடைச்சொல், வினையடிச்சொல், முற்றாவினை, வினையெச்சச்சொல் இந்நான்கும் வினையல்லாப் பகுதியில் அடங்கும். காலம்காட்டும் இடைச்சொல்லும், பாலெண் விகுதி-களும் கொள்கின்ற வினைகள் வினைப்பகுதியில் சேரும்.

வினையல்லாப்பகுதியில் காணும் சொல்லின் பொருளை உணர்த்தும் கூட்டுவினைகளிலுள்ள வினை தன் பொருளை இழந்து செயல் படுவதை உணரலாம்; எனினும் இவ்வினைகள் காலத்தையும், பாலெண் பாகுபாட்டினையும்தான் உணர்த்துமே யொழிய வேறு எந்த ஒன்றையும் உணர்த்தாது. கீழ்வரும் கூட்டுவினைகள் இவ்வகையில் படும்.

எண்ணிப்பார்; தேடிபிடி; ஒத்துக்கொள் போன்றவைகள் எச்சவினையின் பொருளை உணர்த்துகின்றன.

வெள்ளையடி; போரிடு; வேலைபண்ணு; ஓய்வெடு; மணம்செய் ஆட்சிபுரி முதலியன பெயர்ச்சொல் - - (இயல்பெயர்ச்சொல்; [1] ஆக்கியப்பெயர்ச்சொல்) - -லின் பொருளை உணர்த்துகின்றன.

---

1. ஆக்கியப்பெயர்ச்சொல் என்பது வினையடிச் சொல்லிலிருந்து பெறப்படுகின்ற பெயர்ச்சொல்லாகும்.
ஆள் + சி —> ஆட்சி ; மண + அம் —> மணம்
ஒய் + வு —> ஓய்வு.

சரிசெய்; வீணடி; முன்னேறு முதலியன இடைச்சொல்லின் பொருளை உணர்த்துகின்றன. ஒப்புக்கொள்; அருள்செய் என்பன வினையடிச்சொல்லின் பொருளைத் தருகின்றன. சாகடி ; நோகடி; தோற்கடி போன்றன முறையே 'கொல்'; 'துன்புறுத்து'; 'வெல்லு' என்கின்ற பொருள்களைத் தருகின்றன.

கூட்டுவினைகளில் காணும் வினைப்பகுதியிலுள்ள வினைச் சொல் தன் பொருளை மட்டும் உணர்த்தி, தன்னுடன் சேர்ந்துள்ள வினையல்லாப்பகுதியிலுள்ள சொல்லின் பொருளை உணர்த்தாது வழங்கும் இயல்பைக் கீழ்வரும் சான்றுகளில் காணலாம். பார்த்துப்பேசு; தட்டிப்பறி போன்ற கூட்டுவினைகளிலுள்ள வினையெச்சச்சொற்களான ''பார்த்து''; ''தட்டி'' என்பன தம் பொருளை இழந்து நிற்பதை உணரலாம்.

சிற்சில கூட்டுவினைகள் தம்மிலுள்ள வினையல்லாப்பகுதிச் சொல்லின் பொருளையும், வினைப்பகுதிச்சொல்லின் பொருளை-யும் உணர்த்தாமல், வேறொரு (புதிய) பொருளை உணர்த்து வதைக் காணலாம். இவ்வகையில் வேறொரு (புதிய) பொருளை உணர்த்தும் கூட்டுவினைகளுக்குக் கீழ்வருபவைகளைச் சான்று-களாக எடுத்துக் கூறலாம். சொல்லிக்கொடு (கற்பி); தட்டிக்கேள் (கண்டி); எடுத்துச்சொல் (விவரி); அழைத்துவா (கூப்பிட்டுவா); கட்டிக்கொடு (மணம்செய்துவை); தூக்கிப்போடு (எறி) முதலியன வினையெச்சத்துடன் சேர்ந்ததால் உண்டான கூட்டுவினைகளாகும். இக் கூட்டுவினைகள் மேலே சொன்ன கருத்தை விளக்கும். இதே போன்று உட்கொள் (தின்); கீழ்ப்படி (கட்டுப்படு) என்கிற இடைச்-சொற்களிலிருந்து கிடைக்கின்ற கூட்டுவினைகளும் புதிய பொருளை உணர்த்துகின்றன. புறப்படு (கிளம்பு) தலையிடு (குறுக்கிடு); தண்ணீர்காட்டு (அலைக்கழி); மொட்டையடி (ஏழையாக்கு); ஓய்வு-பெறு (வேலையிலிருந்து நீங்கல்); நடைபெறு (நிகழ்) என்பன பெயர் சேர் கூட்டுவினைகளுக்குச் சான்றுகளாகும்.

எதிர்பார் (வரவை நோக்கு); கட்டுப்படு (கீழ்ப்படி); போக்கடி (நீக்கு) முதலியன வினையுடன் வேறொரு வினை சேர்த்துப் பெற்ற கூட்டுவினைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மேலே கூறியவற்றைக் கீழ்வரும் வரைப்படத்தின் மூலம் தெளிவாக விளக்கலாம்.

பொருண்மை விளக்கம்

| வினையல்லாப்பகுதிச் சொல்லின் பொருள் | வினைப்பகுதிச் சொல்லின் பொருள் | வேற்றுப்/(புதிய) பொருள் |
|---|---|---|

3. **கூட்டுவினைகளின் பண்புத்தன்மை**

பொதுவாக இயல்வினைகள் இலக்கணக்கூறுகளில் காணும் செயப்பாட்டுவினையாக்கம் (Passivization); காரணக்காரிய வினையாக்கம் (Causal'zation) பிறவினையாக்கம் (Transitiviza-tion) போன்ற தன்மைகளை ஏற்று வழங்கப் பெறுவதைக் கண்டுணரலாம். இதேபோன்று கூட்டுவினைகளும் மேலே குறிப்பிட்ட பண்புத்தன்மைகளைப்பெற்று வழங்குவது இயல்பே-யாகும். ஆனால் சில கூட்டுவினைகள் எல்லாப்பண்புத்தன்மை-களைப் பெற்று வரும் என்பதில்லை.

இயல்பெயர்ச்சொல்லிலிருந்து பெறுகின்ற கூட்டுவினைகளில் பெரும்பாலானவற்றைச் செயப்பாட்டுவினைகளாகவும் (Passive Verbs) காரணக்காரியவினைகளாகவும் (Causative Verbs) மாற்றலாம். ஆனால் ஆக்கியப்பெயர்ச்சொல்லிலிருந்து ஏற்படு கின்ற கூட்டுவினைகளில் மரபு வழக்கு (Idiomatic Expression) உரியன மேலே குறிப்பிட்ட எப்பண்புகளையும் கொள்வனவாக இல்லை. ஏனைய வினைகள் காரணக்காரியவினைகளாக மாறும் இயல்புடையனவாக உள்ளன; செயப்பாட்டுவினைகளாக மாறா. எனினும் குறிப்பெடு எனும் கூட்டுவினை மட்டும் இங்குக் கூறப்-பட்டவற்றிற்குப் புறநடையாக (Exception) உள்ளது.

எ. கா :

வெள்ளையடி → வெள்ளையடிக்கப்படு (செயப்-பாட்டுவினை)
வெள்ளையடிக்கவை (காரணக்-காரியவினை)

| | | |
|---|---|---|
| தண்ணீர்காட்டு (ஏமாற்று) | —→ | * தண்ணீர்காட்டப்படு (செயப்பாட்டுவினை<br>* தண்ணீர்காட்டவை (காரணக்காரியவினை) |
| ஓய்வுபெறு | —→ | * ஓய்வுபெறப்படு (செயப்பாட்டுவினை)<br>ஓய்வுபெறவை (காரணக்காரிய வினை) |
| கேள்விப்படு | —→ | * கேள்விப்படப்படு (செயப் பாட்டுவினை)<br>* கேள்விப்படவை (காரணக் காரியவினை) |
| குறிப்பெடு | —→ | குறிப்பெடுக்கப்படு (செயப் பாட்டுவினை)<br>குறிப்பெடுக்கவை (காரணக் காரியவினை) |

குடியேறு என்ற தன்வினைப் பண்புள்ள கூட்டுவினை பிறவினைப் பண்பையும், காரணக்காரியவினைப் பண்பையும் ஏற்கிறது. ஆனால் செயப்பாட்டுவினைப் பண்பை பெறாது. இவ்வினையின் பிறவினையான குடியேற்று எனும் கூட்டுவினை செயப்பாட்டு வினைப் பண்பையோ அல்லது காரணக்காரியவினைப் பண்பையோ ஏற்பதில்லை. இதேபோன்றுதான் வெளியேறு எனும் தன்மை கூட்டுவினையும், அதன் பிறவினையான வெளியேற்று எனும் கூட்டுவினையும் உள்ளன.

இடைச்சொல்லுடன் சேர்ந்து ஏற்படுகின்ற கூட்டுவினைகளில் வீணடி; வீண்செய்; வீணாக்கு; சரிசெய்; சரிபார், போன்ற கூட்டு-வினைகள் செயப்பாட்டுவினையாகவும்; காரணக்காரியவினை-யாகவும் மாறும் இயல்பினைப் பெறுகின்றன. ஆனால் கீழ்ப்படி (பணிந்துபோ); உட்கொள் (சாப்பிடு) என்பன காரணக்காரியவினை

யாகத்தான் மாறுமே ஒழிய செயப்பாட்டுவினையாக மாறா. முன்னேறு; பின்னேறு முதலிய கூட்டுவினைகள் பிறவினையாகும் தன்மையுடன், காரணக்காரியவினையாகும் தன்மையையும் ஏற்கின்றன. பிறவினைகளான முன்னேற்று, பின்னேற்று என்பன செயப்பாட்டுவினையாகவோ அல்லது காரணக்காரியவினையாகவோ மாறா.

முன்னேறு { முன்னேற்று (பிறவினையாதல்)
முன்னேறவை (காரணக்காரியவினையாதல்)

முன்னேற்று { * முன்னேற்றப்படு (செயப்பாட்டுவினையாதல்)
* முன்னேற்றவை (காரணக்காரியவினையாதல்)

வினையடிச்சொல்லுடன் சேர்ந்து ஏற்படுகிற கூட்டுவினைகளில் எதிர்படு (காணப்படு) எனும் கூட்டுவினையைத் தவிர மற்ற கூட்டுவினைகள் மேலே சொன்ன பண்புத்தன்மைகளை மேற்கொள்ளும். ஆனால் கட்டுப்படு (கீழ்ப்படி) எனும் கூட்டுவினை இவ்விரு பண்புத்தன்மைகளைப் பெறாமல் தனித்து நிற்கிறது.

எதிர்பார் { எதிர்பார்க்கப்படு (செயப்பாட்டுவினையாதல்)
எதிர்பார்க்கவை (காரணக்காரியவினையாதல்)

முற்றாவினைச்சொல்லுடன் சேர்ந்து ஏற்படுகின்ற கூட்டுவினைகளில் காணப்படு (எதிர்படு) எனும் கூட்டுவினையைத் தவிர மற்ற கூட்டுவினைகள் செயப்பாட்டுவினையாகவோ, காரணக்காரியவினையாகவோ மாறும் இயல்புடையன.

சாகடி { சாகடிக்கப்படு (செயப்பாட்டுவினையாதல்)
சாகடிக்கவை (காரணக்காரியவினையாதல்)

வினையெச்சத்துடன் சேர்த்து கிடைக்கும் கூட்டுவினைகளில் சொல்லிப்பார்; போய்ப்பார்; கட்டிக்கொடு என்பன செயப்பாட்டு வினையாகவோ, காரணக்காரியவினையாகவோ மாறும் இயல்-

புடையன அல்ல. எழுதிப்பார்; ஒட்டிப்பார்; தட்டிப்பறி முதலியன செயப்பாட்டுவினையாக மாறும் தன்மையுடையன; ஆனால் காரணக்காரியவினையாக மாறா.

பார்த்து எனும் வினையெச்சத்துடன் சேர்ந்து ஏற்படும் கூட்டுவினைகளானபார்த்துக்கொடு; பார்த்துப்பேசு; பார்த்துப்போ; பார்த்துச்செய் என்பன செயப்பாட்டு வினையாகவோ அல்லது காரணக்காரியவினையாகவோ மாறும் இயல்புடையன அல்ல. ஏனைய கூட்டுவினைகள் இவ்விரு பண்புத்தன்மைகளை ஏற்றுக் கொள்கின்றன.

| | |
|---|---|
| சொல்லிக்கொடு (கற்பி) | சொல்லிக்கொடுக்கப்படு (செயப்பாட்டுவினையாதல்)<br>சொல்லிக்கொடுக்கவை (காரணக்காரியவினையாதல்) |
| எண்ணிப்பார் (நினை) | எண்ணிப்பார்க்கப்படு (செயப்பாட்டு-வினையாதல்)<br>எண்ணிப்பார்க்கவை (காரணக்-காரியவினையாதல்) |

சொல்லிடையியலிலும், பயிற்றியலிலும், இயல்வினைகளின் பண்புத்தன்மைகளை விவரிக்கும் இடத்தே கூட்டுவினைகளின் பண்புத்தன்மைகளை எடுத்தியம்புவது ஏற்புடைதாகும். மேலும் இயல்வினைகளுக்கும் கூட்டுவினைகளுக்குமிடையே காணும் ஒற்றுமை வேற்றுமைகளை இடைக்குறிப்புகளுடன் (Cross-references) சான்றுகளுடன் விளக்கி, வினைச்சொல்லகராதி வினைச்சொல், பொருட்பண்பகராதி, அமைத்தால் மொழி கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் நல்ல பயனுடைதாகும். எனினும் இயல்வினைகளைப் பற்றிய முழு ஆய்வு வரும் வரை இங்கு கூறப்பட்ட கருத்துக்கள் மறு ஆய்வுக்குட்பட்டவையே ஆகும்.

# கிளைமொழியும் குறுமொழியும்

(Dialet and Slang)

புத்தகங்களில் உள்ளபடி சொற்களை ஒலிக்காமல், வெவ்வேறு வகையாகக் குறைத்தும் மாற்றியும் ஒலித்தால் அவைகள் கொச்சை ஒலிகள் என்று கூறப்படும். 'ஏன் அடா', 'மூன்று' முதலியவைகளை 'ஏண்டா', 'மூணு' என்றெல்லாம் ஒலிப்பது கொச்சையே ஆகும்.

இந்தக் கொச்சைத் தன்மை சொற்களின் ஒலியில் ஏற்படாமல், சொற்களின் பொருளில் ஏற்பட்டால், அவைகள் கொச்சை மொழி அல்லது குறுமொழி (slang) எனப்படும். ''பணம் இருந்தால் நடக்கும்'' என்று ஒருவன் சொல்ல விரும்புகிறான். ஆனால் அப்படிச் சொல்வதில் புதுமை இல்லை, சுவை இல்லை, ஆகையால் கேட்போரின் கருத்தைக் கவர்வதற்காக அவன் ஒரு மாறுதல் செய்கிறான். எல்லோரும் நெடுங்காலமாகச் சொல்லி வந்த 'பணம்' என்னும் சொல்லைச் சொல்வதில்லை. அந்தச் சொல்லால் பயன் குறைவு என்று உணர்ந்து, அதற்குப்பதில் 'வெள்ளையப்பன்' என்கிறான். ''வெள்ளையப்பன் இருந்தால் நடக்கும்'' என்று அவன் மாற்றிச் சொல்லும் போது கவர்ச்சியாக இருக்கிறது. ''அடி கொடுப்பேன்'', ''உதை கொடுப்பேன்'', என்று சொல்லாமல் ''பூசை கொடுப்பேன்'' என்று சொல்லும் போது புதுமையின் கவர்ச்சி இருக்கிறது.

இப்போது சொன்ன இந்தப் புதுச் சொற்களைக் கிளைமொழி என்று சொல்ல முடியாது. கிளைமொழியாக இருந்தால், ஒரு மாவட்டத்தில் அல்லது ஓர் ஊரில் அல்லது ஒரு துறையில், அல்லது ஒரு கூட்டத்தாரிடத்தில் வழங்க வேண்டும். ஆனால் 'வெள்ளையப்பன்', 'பூசை' முதலானவை ஒரு குறிப்பிட்ட அல்லது துறையில் பேசப்படுகின்றவை அல்ல பழக்கப்பட்டுப் போன பழஞ் சொற்களுக்குப் புதிய உயிர், புதிய கவர்ச்சி தரவேண்டும் என்று நினைக்கிறவர்கள் எல்லாரும் இந்தச் சொற்களைப் பேசுகிறார்கள். ஆகையால் இவைகள் குறுமொழி என்று குறிக்கப்படும்.

**ஆதாரம்:** சொல்லின் கதை, பக்கம். 39-57. (1956).

டாக்டர். மு. வரதராசன்

மொழியியல் 6.1. (1983)

# கால அளவையும் பொருண்மையும்

எஸ். பாக்கியலெட்சுமி
இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்.

காலம் எனும் நேர அளவைச் சொல் எவ்வாறு சங்க கால வழக்காற்றில் பயன்படுத்தப்பட்டது என்பதைப் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம். 'காலம்' எனும் நேர அளவைக்குப் பல சொற்கள் தமிழிலக்கியங்களில் வழங்குவதைக் காணலாம். எனினும் இச் சொல்லின் வழக்குத் தன்மையையும் பொருண்மைத் தன்மையையும் ஆராயும்போது மொழியில் முக்காலப் பாகுபாடு எனும் கோட்பாடு இருந்ததா? என்ற வினா எழுகிறது. இவ் வினாவிற்கு விடைகாண முயல்வது இக்கட்டுரையின் இன்னொரு நோக்கமாகும். இக்கட்டுரை இருபகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி காலநேர அளவையின் வழக்குத் தன்மைச் சொற்களை விவரிக்கிறது. இரண்டாம்பகுதி பொருண்மைத் தன்மையையும், இவ்விரு தன்மைகளிடையே காணும் வேறுபாடுகளையும் எடுத்தியம்புகிறது.

வழக்குத் தன்மை : கால அளவைச் சொற்களையும் சங்க இலக்கியத்தில் காணும் அச் சொற்களின் வழக்குத் தன்மையை யும் விவரிக்கின்றது. இப் பகுதியில் 'கால' அளவைச் சொற்க ளான 'பகல்'', 'இரவு' எனும் சொற்களுக்குச் சங்க இலக்கியத்தில் பல சொற்கள் வழக்காற்றைப் பெற்றுள்ளன. எனினும் சில சொற்கள் 'பகல்' எனும் கால அளவையையும் 'இரவு' எனும் கால அளவையையும் குறிப்பதைக் காணலாம்.




சில சொற்கள் வினையடிச் சொற்களிலிருந்து பெறப்பட்ட பெயர்ச் சொற்களாகும். 'புலர்', 'விடி' எனும் வினையடிச் சொற்களில் இருந்து பெற்ற கால அளவைச் சொற்களான 'புலரி' 'விடியல்' எனும் சொற்கள் 'பகல்' எனும் கால அளவைக்கும் 'இரவு' எனும் கால அளவைக்கும் எல்லை வரம்பைக் குறிக்கும் சொற்களாக உள்ளன. 'பகல்' எனும் கால அளவையைக் குறிக் கும் சொல்லில் இவ்வாறு பாகுபாடு இன்மையைக் காணலாம்.

இங்கு கால அளவைச் சொல்லாகிய பகற்பொழுதை நோக் கும் போது, பகல் என்னும் சொல்லுக்குப் பல சொற்கள் பயன் படுத்தப்பட்டமையைக் காணலாம்.

பகல் — பகற்பொழுது (அகம்/புறம்)
*எல் — பகல் (அகம்)
எல்லு — பகல் (அகம்)
எல்லை — பகல் (சிலம்பு/அகம்)

மேற்கண்ட இச் சொற்கள் எல்லாம் பகற்பொழுதினைக் குறிக்கும் பல சொற்களாகும். பகல் எனும் கால அளவையில்

தான் பாகுபாடுகள் காணப்படும். 'இரவு' எனும் காலு அளவை யைக் காட்டும் சொற்கள் பெரும்பாலும் 'பகலு' க்கும் 'இரவு'க் கும் இடையேயுள்ள எல்லையைத்தான் குறிக்கின்றன.

இது போன்றே 'நாள்' என்னும் சொல்லினை எடுத்துக் கொண்டால் இரவு, பகல் என்ற இரு பொழுதுகளும் அடங்கும்.

எல்லை — நாள் (புறம்)

ஞான்றை — நாள் (புறம்)

நிச்சம் — நாள் (புறம்)

வைகல் — நாள் (அகம்/புறம்)

அல்கல் — நாள் (அகம்/புறம்)

வரை — நாள் (புறம்)

ஞான்று — நாள் (அகம்/சிலம்பு)

இத்தகைய பல சங்க இலக்கியச் சொற்களின் மூலம் 'நாள்' என்னும் சொல்லுக்குப் பல சொற்களின் வழக்காற்றினை அறியலாம்.

பகல் என்னும் கால அளவைச் சொல்லானது ஒளி பொருந் திய பகற் பொழுதினைக் குறிப்பதோடு காலை, நண்பகல், மாலை என்ற பாகுபாடுகளையும் கொண்டிருக்கின்றது.

புலரி — விடியல் (சிலம்பு)

வைகறை — விடியற்காலம் (சிலம்பு/அகம்/புறம்)

காலை — காலைப்பொழுது (அகம்/சிலம்பு)

விடியல் — விடியற்காலம் (அகம்/புறம்)

போன்ற சொற்கள் காலைப் பொழுதினைக் குறிக்கும் பல வேறு சொற்களும்

நடு — இடைநாள் (அகம்)

நண்பகல் — நண்பகல் (புறம்)

போன்ற மதியப் பொழுதினைக் குறிக்கும் சொற்களும்

மாலை — மாலைக் காலம்(சிலம்பு/அகம்)

அந்தி — மாலை (சிலம்பு/அகம்)

குறும்பு — மாலைக் காலம் (சிலம்பு)

அமையம் — மாலை மயங்கும்பொழுது (பாட்டும் தொகையும்)

போன்ற மாலைக் காலத்தினைக் குறிக்கும் பல்வேறு சொற்களும் சங்க இலக்கியங்களில் காலை, நண்பகல், மாலை என்ற பாகுபாடு இருந்தமையைக் காட்டுகின்றன. இதுபோன்று இருவினைப் பாகுபடுத்தும் சொற்கள் காணப்படவில்லை எனலாம்.

இரவு என்று சொல்லும்போது சூரியனுடைய ஒளி இல்லாமல் கருமை செறிந்த இருளினையே குறிக்கிறது எனலாம்.

அல்கல் — இரவு (பாட்டும் தொகையும்)

மங்குல் — இரவு (அகம்/சிலம்பு)

கங்குல் — இரவு (புறம்/சிலம்பு/அகம்)

அல் — இரவு (சிலம்பு)

யாமம் — நடு இரவு (சிலம்பு/அகம்/புறம்)

இரவு — இரவு (புறம்/அகம்)

எல்லி — இரவு (புறம்/அகம்)

அல்கு — இரவு (அகம்)

* எல் — இரவு (அகம்)

மேற்கூறிய பல்வேறு சொற்களும் 'இரவு' என்ற சொல்லிற்கு வழங்கப்படும் பல சங்க இலக்கிய 'கால' அளவைச் சொற்களாகும். யாமம் என்ற புறநானூற்றுச் சொல் மட்டும் இரவில் வேறுபாடு காட்டும் சொல்லாக அமைந்துள்ளது. எனினும் இச்சொல் ஜாமம் என்ற வடமொழிச் சொல்லின் திரிபாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறே 'பொழுது' எனும் சொல் காலையிலிருந்து மாலை வரையுள்ள பகற் பொழுதினைக் குறிக்கிறது. கீழ்க் காணும் சங்க இலக்கியச் சொற்கள் பலவும் பொழுதினைக் குறிக்கும் கால அளவைச் சொற்கள் எனலாம்.

| | | |
|---|---|---|
| ஞான்றை | — | பொழுது (புறம்) |
| பதம் | — | பொழுது (புறம்) |
| பொழுது | — | நேரம் (புறம்/அகம்) |
| அமையம் | — | பொழுது (சிலம்பு/அகம்) |
| அளவு | — | பொழுது (சிலம்பு) |
| உழி | — | பொழுது (சிலம்பு/அகம்) |
| ஞான்று | — | பொழுது (அகம்) |
| அளவை | — | பொழுது (அகம்) |
| இடை | — | பொழுது (அகம்) |
| காலை | — | பொழுது (அகம்) |
| வரை | — | பொழுது (அகம்) |

பொழுது என்னும் இச்சொல் 'போ', 'வீணாகு' எனும் வினைச் சொற்களுடன் சேர்ந்து வழங்கும் தன்மையை இன்றும் வழக்காற்றில் காணலாம்.

பொருண்மை : 'புலர்' என்னும் வினையடிச் சொல்லிலிருந்து பிறந்த புலரி என்னும் பெயர்ச் சொல் பொழுது விடியும் காலத்தினை, இருள் மங்கி ஒளி பரவும் காலத்தினைக் குறிக்கும் சொல் எனலாம். காலத்தினைக் குறிக்கும் சொல் வைகறை என்ற பெயர்ச் சொல்லுக்கு இருளுக்குக் கரை, இருள் முடிவடையும் இடத்தில் ஆரம்பமாகும் ஒளி பொருந்திய காலை, அதிகாலை எனவும் பொருண்மை தரலாம். காலை என்ற பெயர்ச் சொல்லுக்கும் நண்பகல் வரையுள்ள காலத்தையே கூறலாம். நடு என்னும் கால உரிச்சொல் இடைநாள் என்ற பொருண்மையினையும் நண்பகல் என்னும் புறநானூற்றுச் சொல் நடு நாள் என்னும் பொருளைக் கொடுத்து, காலைக்கும், மாலைக்கும்

இடைப்பட்ட காலத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றதைக் காணலாம்.

'மாலை' என்ற சொல்லிற்குச் சூரியன் மறைந்தவுடன் வரும் தண்ணென் பொழுதினைச் சொல்லலாம். மாலை, அந்தி, குறும்பு போன்ற சொற்கள் மாலைக் காலத்தைக் குறிக்கும் சொற்களாகும். அமையம் என்ற சொல்லுக்கும், அந்தி என்ற சொல்லிற்கும் மாலை மயங்கும் பொழுது என்று பொருள் கூறலாம். ஒளி மங்கி, இருள்சூழும் நேரத்தினை இச் சொற்கள் குறிக்கின்றன. ஆகையால் பகற்பொழுது என்று சொல்லும் சொல்லுக்கு இம் மூன்று காலங்களும் சேர்ந்த பொழுதினையே சொல்லலாம்.

'எல்' என்னும் வினையடிச் சொல்லிற்கு 'பகல்', 'இரவு' என்ற இரு பொருண்மைகளையும் சங்க இலக்கியங்களில் காணலாம். 'எல்' என்னும் கால அளவைச் சொல் 'இருள்' எனும் சொல்லைப் போன்றே பெயரடிச் சொல்லாகவும், வினையடிச் சொல்லாகவும் வழங்கப் பெற்றுள்ளமையை அறியலாம். ஆனால் 'எல்' எனும் சொல்லுடன் 'உ', 'ஐ', 'இ' எனும் விகுதிகளைச் சேர்த்துத் தரும் பொருண்மையை வேறுபடுத்தி அறிந்துணரலாம்.

| | | | |
|---|---|---|---|
| எல் + ஐ | — | எல்லை | 'பகல்' |
| எல் + உ | — | எல்லு | |
| எல் + இ | — | எல்லி | 'இரவு' |

இது போன்ற 'எல்லை' என்னும் பெயர்ச் சொல் 'பகல்' 'நாள்' எனும் இரு பொருண்மையினையும் கொடுக்கின்றது. இது போன்றே 'வைகல்' என்ற வினையடிச் சொல்லிற்கு 'நாள்' என்றும் 'விடியற்காலம்' என்றும் பொருண்மை கொள்ளலாம். இரவிற்காக எடுத்துக் காட்டப்பட்ட எல்லாச் சொற்களும் இரவினைப் பகுத்துக் காட்டாது. பொதுவாக இருள் என்ற பொருண்மையினையே கொண்டு வருகிறது என்லாம். 'இருள்' போன்றே 'எல்' எனும்

சொல் வினையடிச் சொல்லாகப் பயன்படும் போது 'இருள்' எனும் பொருண்மையினையே விளக்குகின்றதனைக் கண்டு-அறியலாம்.

| | | |
|---|---|---|
| இருள் | — | இருள் |
| இருண்ட | — | இருட்சியுற்ற |
| எல்லிற்று, எல்லின்று | — | இருண்டது |

'இருள்' எனும் பெயர்ச் சொல்லும் இருண்ட, எல்லிற்று, எல்லின்று போன்ற சொற்களும் முறையே இருள், இருட்சியுற்ற, இருண்ட என்ற பொருண்மையினையே கொண்டு வந்திருக்கின்றன எனலாம். இச்சொற்களை நோக்கின் இவையெல்லாம் இரவினை மட்டுமே குறிக்கும் சொற்களாகக் கொள்ள முடியாது. பகற்பொழு-திலும் மழை மேகங்கள் சூழ்வதால் ஏற்படும் இருட்டும், வேறு காரணங்களால் இருண்டும் காணப்படுகின்ற தன்மையினையே பொருண்மையாகக் கொள்ளலாம்.

இன்று, அன்று, என்று போன்ற இறந்தகால, நிகழ்கால, எதிர்காலச் சொற்களின் மூலம் சங்க கால வழக்கினை அறியலாம்.

| | | | |
|---|---|---|---|
| இந்நாள் | — | இப்பொழுது (சிலம்பு) | நிகழ்காலம் |
| இன்று | — | இந்நாள் (அகம்) | |
| இனி | — | இப்பொழுது (புறம்) | |
| அன்று | — | அந்நாள் | இறந்த காலம் |
| அந்நாள் | — | அந்நாள் | |
| என்று | — | எந்நாள் | எதிர் காலம் |
| நாளை | — | நாளை | |
| பிற்பாடு | — | பின்னர் | |

மேற்கூறிய நிகழ்கால, இறந்தகால, எதிர்காலச் சொற்-களின் மூலம் இச் சொற்கள் எல்லாம் தற்கால வழக்கினையே அக்காலத்திலும் கொண்டிருந்தன எனலாம்.

## நெல்லைத் தமிழில் சில வழக்குச் சொற்கள்

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அங்கணக்குளி | (*ankaṇakkuḷi*) | 'சிறுநீர் கழிப்பிடம்' |
| அட்டக்குளி | (*aṭṭakkuḷi*) | 'நரகம்' |
| அடவியார் | (*aṭaviya:r*) | 'நெசவாளர்' |
| அண்ணார் | (*aṇṇa:r*) | 'அண்ணாந்துபார்' |
| ஈர்வலி | (*i:rvaḷi*) | 'தலையிலுள்ள ஈரை எடுக்கவுதவும் சீப்பு' |
| ஈரங்கம் | (*i:rankam*) | 'வெங்காயம்' |
| உக்கு | (*ukku*) | 'வெட்கப்படு' |
| ஊளி | (*u:ḷi*) | 'தலை' |
| ஒவலை | (*ovalay*) | 'அவதூறு' |
| ஓட்டி | (*o:ṭṭi*) | 'நான்கு தலை முறைக்கு முந்தைய தாய்' |
| ஓராட்டு | (*o:ra:ṭṭu*) | 'தாலாட்டுப் பாடு' |
| கத்தலு | (*kattalu*) | 'சக்கை' |
| கும்பா | (*kump:a*) | 'கிண்ணம்' |
| குளிதாரி | (*kuḷita:ri*) | 'தொட்டி' (மாடுகள் தண்ணீர்குடிக்க) |
| கொம்மை | (*kommay*) | 'உமி' |
| செம்மு | (*cemmu*) | 'சிக்குதல்' |
| தெரடு | (*teraṭu*) | 'மேடு' |
| தொக்கு | (*tokku*) | 'களைப்பு' |
| பொக்காளம் | (*pokka:ḷam*) | 'தீப்புண்' |
| மாலு | (*ma:lu*) | 'பெரிய அறை' |

— நெல்லை மாவட்ட மொழியியல்
கள ஆய்வுக் குறிப்பேட்டிலிருந்து
தொகுக்கப் பட்டவை.

நன்றி : மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## வாசிப்பது சரியா?

தஞ்சை பா. இறையரசன்
அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி.

1. வினைச்சொல் பெயர்ச்சொல் ஆகியன ஒரு வாக்கியத்தில் தொடர்போடு வருகிற பொழுது அவற்றில் வருகிற பாலறிகிளவிகள் தம்முள் மாறுபடாது வருதல் வேண்டும்.

''வினையின் தோன்றும் பாலறிகிளவியும்
பெயரின் தோன்றும் பாலறிகிளவியும்
மயங்கல் கூடாதம் மரபினவே''

– தொல். சொல். (11)

ஆண், பெண் என்ற இருபாலும், ஒருமை, பன்மை என்ற எண்ணும், உயர்திணை, அஃறிணை என்னும் திணையும் ஆகிய அடிப்படையில் ஐம்பால் என்று பகுப்பர். இவை தம்முள் மயங்கா.

1. அவன் ஓடினான் * அவன் ஓடினேன்
2. அவள் ஓடினாள் * அவள் ஓடினாய்

3. அவர்கள் ஓடினர் * அவர்கள் ஓடினான்

4. அது ஓடியது * அது ஓடினோம்

5. அவை ஓடின * அவை ஓடினீர்கள்

இரண்டு மூன்று சொற்களாக இயைந்து வரும் பொழுதும், வினைச் சொல்லானது எதனைச் சென்று சார்கிறதோ அதற்கேற்ற பாலறிகிளவி பெற வேண்டும்.

6. சாத்தன் குரங்கைக் கடித்தான்

7. குரங்கு சாத்தனைக் கடித்தது

8. சாத்தனை அவள் பார்த்தாள்

9. குரங்கை அவர் பார்த்தார்

எழுவாயில் வரும் பெயர்ச் சொல்லுக் கேற்ற பாலறிகிளவி வினையில் வருகிறது.

2. ''செய்திகள் வாசிப்பது இன்னார்'' என அனைத்திந்திய வானொலியில் வழங்கும் சொற்றொடர் சரிதானா? என்பதைக் காண, 'வாசி' என்ற வினை எதனைச் சார்கிறது, எப்படிச் செயற்படுகிறது என்பவற்றைப் பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

3. 'வாசி' யின் வினைமுற்று

| இடம் | எழுவாய் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| தன்மை | நான் | வாசித்தேன் | வாசிக்கிறேன் | வாசிப்பேன் |
| | நாங்கள் | த்தோம் | க்கிறோம் | ப்போம் |
| முன்னிலை | நீ | த்தாய் | க்கிறாய் | ப்பாய் |
| | நீங்கள் | த்தீர்கள் | க்கிறீர்கள் | ப்பீர்கள் |
| படர்க்கை | அவன் | த்தான் | க்கிறான் | ப்பான் |
| | அவள் | த்தாள் | க்கிறாள் | ப்பாள் |
| | அவர்கள் | த்தார்கள் | க்கிறார்கள் | ப்பார்கள் |
| | அது | த்தது | க்கிறது | ப்பது |
| | அவை | த்தன | க்கின்றன | ப்பன |
| இடை நிலைகள் | | த<br>ட<br>ற | கிறு<br>கின்று | ப<br>வ |

தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றிலும் வினைமுற்றுகளில் குறிப்பாக ஒன்றன்பால், பலவின்பால், வினை முற்றுகளிலும் ப, வ, ஆகிய எதிர்கால இடைநிலைகள் நிகழ் காலம் உணர்த்தியே வழங்குகின்றன.

வாசித்தது, வாசிக்கிறது வாசிப்பது, ஆகியன ஒன்றன்பால் வினைமுற்றாக வருகின்றன.

10. குரங்கு வாசித்தது/ ஆடியது/ தாவியது
வாசிக்கிறது/ ஆடுகிறது/ தாவுகிறது
வாசிப்பது/ ஆடுவது/ தாவுவது

எதிர்கால வினைமுற்றுகள் நிகழ்காலத்தையும் சுட்டிவரும். பொதுவாக, நிலையான உண்மைகளையும் (universal truths), வழக்கமான செயல்களையும் (usual activities), உறுதிப்பாடற்ற தன்மைகளையும் (uncertainty) நிகழ்காலம் போல இவ்வெதிர் கால வினைமுற்றுகளும் குறிப்பிடும். தொழிற்பெயராகச் செயற் படுங்கால் காலங்காட்டாது (காலம் காட்டும் தன்மை இழந்து) வரும்.

11. அவன் வாசித்தான் 12. வாசித்தது கேட்டேன்
13. வாசிப்பது கேட்டேன்

14. அவன் ஓடினான் 15. ஓடியது பார்த்தேன்
16. ஓடுவது பார்த்தேன்

17. ஓடுதல் உடம்புக்கு நல்லது 18. ஓடுவது உடம்புக்கு நல்லது.

4. 'வாசி' யின் தொழிற்பெயர்

வினையடியாகவே மொழி வளர்ந்தது என்று கூறுமளவிற்கு, வினைச் சொற்களிலிருந்து பல பெயர்ச்சொற்கள் தோன்றி யுள்ளன; வினையாக்கப் பெயர்கள் என்றும், வினைதரு பெயர்கள் என்றும் மொழியியலார் குறிப்பர். வினையை அல்லது தொழிலை அதே சொல்லால் பெயரிடல் வினைப்பெயர் அல்லது தொழிற் பெயர் (Verbal Noun) ஆகும். இது வினைத்தன்மை குறைந்தும் பெயர்த்தன்மை மிகுந்தும் விளங்கும்.

1. திணை, பால், எண், இடம் காலம் காட்டாது (பெயர்போல) 19. ஓடுதல் நல்லது

2. வேற்றுமை ஏற்கும் (பெயர்போல) 20. ஓடுதலை விட்டுவிடு

3. பன்மை ஏற்காது *ஓடுதல்கள்

4. பெயரடை ஏற்காது *பெரிய ஓடுதல்

வாசி என்பதன் தொழிற்பெயர் வாசித்தல்.

வாசி — வாசித்தல் ஆடு — ஆடுதல்

ஓடு — ஓடுதல் பாடு — பாடுதல்

வா — வருதல் போ — போதல்

தொழிற்பெயர் வினையைக் குறிக்கும். தொழிலாகு பெயர் அவ்வினையால் ஆகிய தொழில், பொருள், பயன் முதலியவற்றுக்கு ஆகி வரும்.

பாடுதல் >பாடல் — பாட்டு

ஆடுதல் >ஆடல் — ஆட்டம்

ஓடுதல் >ஓடல் — ஓட்டம்

செய்தல் >செயல் — செய்கை

யாத்தல் >............ — யாப்பு, யாக்கை

எழுதல் ................ — எழுத்து

வாசித்தல் ................ — வாசிப்பு

வினைதரு பெயர்களாக வந்த தொழிலாகு பெயரும் பிறவும் தொழிற்பெயரின் இடத்தில் வழங்கலாயின; அதனால் அவை காலம் ஏற்றும், பெயரடை பெற்றும் எண் (ஒருமை, பன்மை) குறித்தும் வந்தன. இவற்றை மாற்றுத் தொழிற் பெயர்கள் எனலாம்.

19. ஓடுதல் நல்லது

21. ஓடுவது நல்லது
22. ஓட்டம் நல்லது
23. இரண்டு ஓட்டம் ஓடு

24. வருதல் நல்லது

25. வந்தது நல்லது
26. வந்தமை நல்லது
27. வருகை புரிந்தான்
28. நல்வரவு ஆயிற்று

29. பாடுதல் நல்லதன்று
30. பாடுவது நல்லதன்று
31. ஒரு பாட்டும் வேண்டாம்
32. பெரிய பாடல் பாடினான்

33. வாசித்தல் சரியன்று
34. வாசிப்பது சரியா
35. வாசிப்பு சரி இல்லை
36. வாசிப்பது நடைபெறும்

5. 'வாசி' யின் வினையாலணையும் பெயர்

ஐம்பால் மூவிடத்தும் எட்டு வேற்றுமையிலும் வினையாலணையும் பெயர் (Participial Noun) வரும்.

37. (அவன் ஓடினான்) ஓடியவனைப் பிடித்தேன்
38. (எலி ஓடியது) ஓடியதைப் பிடித்தேன்
39. (அவன் ஓடினான்) ஓடியதைப் பார்த்தேன்

37, 38 - ஆம் வாக்கியங்களில் ஓடியவன், ஓடியது ஆகியன தொழிலின் கருத்தாவைக் குறித்ததால், அவை வினையாலணையும் பெயர்களாம். 39- ஆம் வாக்கியத்தில் தொழிலைக்குறித்ததால் தொழிற்பெயர். 38, 39- ஆம் வாக்கியங்களில் ஓடியது என்பதன் ஈறு அது என்பது வேறுபடுத்தும் செயன்மை வாய்ந்த சொல்லுறுப்பாகும்.



வாக்கியம்-39




வாக்கியம் 38-ல் 'அது' என்னும் மாற்றுப் பெயர் (Pronoun) அவ்வினையின் கருத்தா ஆகிய எலியைக் குறித்ததால் வினை யாலணையும் பெயர்.

38. ஓடியதைப் பிடித்தேன்

ஓடிய அது ஐ பிடித்தேன்

எலி←

வாக்கியம் 39-ல் 'அது' என்னும் மாற்றுப் பெயர் அவ்வினைச் சொல்லின் வினையை, செயலை அல்லது தொழிலை மட்டுமே குறிப்பதால் தொழிற்பெயர்.

39. ஓடியதைப் பார்த்தேன்

ஓடிய அதுஐ பார்த்தேன்

40. (அவன் வாசித்தான்) வாசிப்பவனைக் கண்டேன் — வாசிப்பவன் கண்டேன்.

41. (அவன் வாசித்தான்) வாசிப்பதைக் கேட்டேன் — வாசிப்பது கேட்டேன்

42. அவன் வாசிப்பது நல்லது — வாசிப்பது நல்லது

41, 42-ஆம் வாக்கியங்களில் 'அது' என்னும் மாற்றுப் பெயர் 'வாசி' என்னும் தொழிலைச் சார்வதால் 'வாசிப்பது' என்பது தொழிற்பெயர்.

43. அவ்வீணை வாசிப்பது

44. குயில் கூவுவது

என்னும் வாக்கியங்களில் வாசிப்பது, கூவுவது என்பன வினைமுற்றுகளாய் வருகின்றன. பெயரை எழுவாயாகப் பெற்று வினைமுற்று பயனிலையாக வரும். முற்றெச்சம் தவிர, வினை முற்று எச்சப் பொருளில் வராது.

**7. செய்ததும் வாசிப்பதும்**

செய்வினை செயப்பாட்டுவினை மாற்றத்தில்,

45. ஒருவன் திண்ணையை மெழுகினான் — என்னும் செய் வினை வாக்கியம்.

46. திண்ணை ஒருவனால் மெழுகப்பட்டது — என்னும் செயப்பாட்டுவினை வாக்கியம் ஆகும். மாற்றிலக்கணத்தில்

விதி. 1. சொல் மாற்றம் எய்தலாம்; பொருள் மாறக்கூடாது.

விதி. 2. வேற்றுமை மாறலாம்; திணை மாறக்கூடாது.

''செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே''
-தொல். வினை

என்று பேச்சு வழக்கில் உள்ள மாற்றத்தைத் தொல்காப்பியர் குறிக்கிறார். 45, 46-ஆம் வாக்கியங்களில் செயப்படுபொருள் 'திண்ணை'.

47. திண்ணை மெழுகிற்று

என்னும் பேச்சுவழக்கு வாக்கியத்தில் எழுவாய் (கருத்தா, செய்தது) நிலையில் வழங்கும்.

48. கடை திறந்தது

49. புத்தகம் கிழிந்தது

50. மெழுகு உருகுவது ; நீர் ஆவியாகுவது

51. வீணை வாசிப்பது

(இந்த வீணை வாசிப்பது ; பிற வாசியாதன பழுது பட்டன)

வாக்கியம் 47 போல 48 முதல் 51 வரையுள்ளவை அமைந்துள் ளன. வாக்கியம் 47 போல,

52 'செய்திகள் வாசிப்பது' என வரலாம்.

இவ்வாக்கியங்களில் (47-52) பயனிலையாக வினைமுற்றுகள் வந்துள்ளன. அவை எச்சப் பொருளில் செயற்படா.

45, 46 - ஆம் வாக்கியங்களின் செயப்படு பொருள் ஆகிய 'திண்ணை' என்பது பேச்சு வழக்கில் (வா - 47) எழுவாயாக வரும் என்பது தொல்காப்பியர் கருத்து; எழுவாய் திணைமாறும் என்பதல்ல அவர் கருத்து. சொற்றொடர் மாற்றத்தில் திணை மாறக் கூடாது. (விதி எண்-2.)

47. திண்ணை மெழுகிற்று

* ஒருவன், மெழுகிற்று * கண்ணன் வாசிப்பது
* மெழுகிற்று ஒருவன் * வாசிப்பது கண்ணன்

45. ஒருவன் மெழுகினான்
* ஒருவன் மெழுகப்பட்டது * கண்ணன் வாசிக்கப்பட்டது
* மெழுகப்பட்டது ஒருவன் * வாசிக்கப்பட்டது கண்ணன்

செய்வினை வாக்கியம்

48. கண்ணன் செய்தி வாசித்தான்
49. கண்ணன் வாசித்தான் செய்தி
50. செய்தி கண்ணன் வாசித்தான்
51. செய்தி வாசித்தான் கண்ணன்

செயப்பாட்டுவினை வாக்கியம்

52. கண்ணனால் செய்தி வாசிக்கப்பட்டது
53. கண்ணனால் வாசிக்கப்பட்டது செய்தி
54. செய்தி கண்ணனால் வாசிக்கப்பட்டது
55. செய்தி வாசிக்கப்பட்டது கண்ணனால்

8. தொழிற் பெயரா ?

'அளை'
'அளைஇ'

என்ற எழுத்து வடிவுகளை ஒலிப்பில் உணர்ந்து வேறு படுத்துகிறோம்.

4+4=8 என்ற குறியீட்டை நான்கும் நான்கும் எட்டு என்றும், 4×4=16 என்பதை தன்னான்கு பதினாறு என்றும் படிக்கிறோம். தமிழ்த்தாய் வாழ்த்து : செல்வி செங்கொடி.
இலக்கண உலகில் புதிய பார்வை : முனைவர் பொற்கோ -என வருபவை வாக்கியங்கள் அல்ல.

ஆண்டறிக்கை வாசித்தல் : செல்வன் குழந்தைவேல்.

நீளம் தாண்டல் : செல்வியர் செங்கொடி, மலர்விழி, அரசி.

- என வருபவற்றில் வாசித்தல், தாண்டல் முதலிய தொழிற் பெயர்களை வினையாலணையும் பெயராக மாற்றினால்தான் வாக்கியங்கள் ஆகும்.

வாசித்தல் = வாசித்தல் செய்பவன் (அ) வாசிப்பவன்.

56. ஆண்டறிக்கை வாசிப்பவன் : செல்வன் குழந்தைவேல்.

தாண்டல் = தாண்டல் நிகழ்த்துவோர் (அ) தாண்டுவோர்.

57. நீளம் தாண்டுவோர் : செல்வியர் செங்கொடி, மலர் விழி, அரசி. எனவே,

செய்தி வாசித்தல் : கண்ணன்
- என்பது வாக்கியமன்று.

* செய்தி வாசித்தல் கண்ணன்.

* செய்தி வாசிப்பது கண்ணன்.

என வரக் கூடாது. 56, 57 வாக்கியங்கள் போல்

58. செய்தி வாசிப்பவன் கண்ணன்.

என வினையாலணையும் பெயராக்கி வாக்கியம் அமைக்க வேண்டும்.

9. தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும்

தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடு உண்டு.

மாற்றுத் தொழிற் பெயர்கள் (ஓடுவது, ஓட்டம், வந்தது, வந்தமை, பாடல். வாசிப்பு, யாப்பு போன்றவை) தொழிற் பெயரின் இடத்தைப் பிடித்ததால் தொழிற்பெயரின் சில பண்புகள் (காலங்காட்டாதது முதலியன) குறைந்து, வேறுபடுத்துவதில் இடர்ப்பாடு வந்தது. மாற்றிலக்கண அடிப்படையில் நாம் காணும் சில வரையறைகள் :

விதி. 3 அ) செயலுக்குப் பெயராக வருவது தொழிற்பெயர்.
ஆ) கருத்தாவுக்குப் பெயராக வருவது வி.ஆ.பெ.

59. கண்ணன் வாசிப்பது செய்தி
வாசி + அது
} செயலுக்குப் பெயராக வந்ததால் தொழிற் பெயர்

60. செய்தி வாசிப்பது கிளி
வாசி + அது
} கருத்தாவுக்குப் பெயராக வந்ததால் வி.ஆ.பெ.

விதி 4. அ) தொழிற்பெயருக்கு முன்னால்தான் (காலமுன்) கருத்தா வரும்.

ஆ) வினையாலணையும் பெயரின் ஈற்றில் அவ் வினையின் கருத்தாவைக் குறிக்கும் மாற்றுப் பெயர் வரும்.

59. கண்ணன் வாசிப்பது செய்தி
வாசி + அது
} முன்னால் கருத்தா வந்ததால் தொழிற் பெயர்

58. செய்தி வாசிப்பவன் கண்ணன்
வாசி + அவன்
} கருத்தா குறிக்கும் மாற்றுப் பெயர் உடமையால் வி.ஆ.பெ.

விதி 5. (அ) தொழிற் பெயர் அடுத்து (இடமுன்) வினைமுற்று வராவிட்டால், செயப்படு பொருள் பெயர்ப் பயனிலையாக வரும்.

39. ஓடியதைப் பார்த்தேன் - தெரிநிலை வினைமுற்று.
21. ஓடுவது நல்லது - குறிப்பு வினைமுற்று.
45. ஒருவன் திண்ணையை மெழுகினான்
செயப்படுபொருள்.
61. ஒருவன் மெழுகியது திண்ணை
பெயர்ப்பயனிலை.

59. கண்ணன் வாசிப்பது செய்தி.

62. தச்சன் செய்வது பெட்டி.

விதி 5 (ஆ) வினையாலணையும் பெயரை அடுத்து (இடமுன்) வினைமுற்று வராவிட்டால், எழுவாய் (கருத்தா) பெயர்ப்பயனிலையாக வரும்.

38. ஓடியதைப் பிடித்தேன் - தெரிநிலை வி.மு.

62. ஓடியவன் நல்லவன்-குறிப்பு வி.மு.

ஐம்பாலிலும் எழுவாய் பெயர்ப்பயனிலையாக வரும்.

58. செய்தி வாசிப்பவன் கண்ணன்,

64. ........... ப்பவள் அழகி

65. ........... ப்பவர்கள் கண்ணனும் அழகியும்.

60. ........... ப்பது கிளி.

60. .. ...... .. ப்பவை கிளியும் பூவையும்.

எனவே 'வாசிப்பது' தொழிற்பெயராக வரும்பொழுது செயப்படு பொருள்தான் பெயர்ப் பயனிலையாக வரும்.

விதி 5 (இ) செயப்படு பொருள், தொழிற்பெயரை அடுத்து (இடமுன்) பெயர்ப் பயனிலையாகும் போது உயர்திணைப் பெயர் வேற்றுமை உருபுடன் தான் வரும்.

67. நான் <u>உன்னைப்</u> பார்த்தேன்.

செயப்படுபொருள்.

68. நான் பார்த்தது <u>உன்னை!</u>

பெயர்ப்பயனிலை.

* நான் பார்த்தது நீ!

69. அவன் அவளோடு வந்தான்.

70. அவன் வந்தது அவளோடு!

* அவன் வந்தது அவள்.

'வாசிப்பது' என்பது வினையாலணையும் பெயராக வரும் பொழுது பெயர்ப் பயனிலையாக எழுவாயில் வரும் அஃறிணை-தான் வரும்.

60. செய்தி வாசிப்பது கிளி.

இங்கே உயர்திணை வரக்கூடாது.

* செய்தி வாசிப்பது கண்ணன்.

* அவளோடு வந்தது அவன். (காண்க-வா 70.)

10. அழுத்தம் (*Stress*) தருவதா?

71. நான் அடித்தது மணிப்புறாக்களை!

72. அவன் பாடியது பாட்டு!

73. திருவள்ளுவர் இயற்றியது திருக்குறள்!

நான் அடித்தது மணிப்புறாக்களைத்தான், குருவிகளை அல்ல! அவன்பாடியதுதான் பாட்டு, மற்றவர் பாடியது வெற்று வேட்டு! என்றெல்லாம் அழுத்தம் தருவதற்கு மேற்கண்ட வாக்கிய அமைப்பு பயன்படுகிறது.

அடித்தது, பார்த்தது, பாடியது போல, 'வாசிப்பது' வரலாமா?

71. நான் அடித்தது மணிப்புறாக்களை!

= கண்ணன் வாசிப்பது செய்திகளை!

* மணிப்புறாக்களை அடித்தது நான்!

= செய்திகளை வாசிப்பது கண்ணன்.

72. திருவள்ளுவர் இயற்றியது திருக்குறள்.

* திருக்குறள் இயற்றியது திருவள்ளுவர்.

எனவே,

73. கண்ணன் வாசிப்பது செய்திகளை

என அழுத்தம் கொடுப்பதற்காக வழங்கலாம். முன்னால் சொல்வதால் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றால்.

74. செய்திகள் வாசிப்பவன் கண்ணன் (அல்லது)

செய்திகள் வாசிப்பவர் கண்ணன் எனக்கூறலாம்.

11. வாசிப்பது, வாசிப்பவை

75. சீதை கண்டது ஊர். 76. சீதை கண்டது ஊர்கள்.

77. சீதை கண்டன ஊர்கள்.

கண்டது என்ற தொழிற்பெயர் கண்டன என பன்மை ஏற்று வருவது மாற்றுத் தொழிற்பெயர்களால் நேர்ந்த விளைவு.

பாட்டு — பாட்டுகள், பாடல் — பாடல்கள்

பாடியது — பாடியன, தாண்டல் — தாண்டல்கள்

வழுவல் — வழுவல்கள்.

என வரலாயின. எனவே,

59. கண்ணன் வாசிப்பது செய்தி.

78. கண்ணன் வாசிப்பது செய்திகள்.

79. கண்ணன் வாசிப்பவை செய்திகள்.

என வரலாம். செய்தி அல்லது செய்திகள் என்பதை முன் வைத்தால்.

58. செய்தி வாசிப்பவ - [ன்] - [ர்] கண்ணன்.

74. செய்திகள். ,, ,, ,,

என வரும்

12. புதைநிலை வாக்கிய வடிவம்.

* செய்திகள் வாசிப்பது சேகரன் என்ற வாக்கியத்தின் புதைநிலை வாக்கியம்.

* செய்திகள் வாசிப்பது சேகரன் ஆவார் என்பது தவறானது.

* செய்திகள் வாசிப்பது சேகரன் ஆவார்.

* வாசிப்பது சேகரன் ஆவார்.

* அது சேகரன் ஆவார்.

அது ஆவார் என்பதும், அது சேகரன் என்பதும் பொருந்தா. அவர் ஆவார், அவர் சேகரன் என்பதே பொருந்தும்.

அவர் சேகரன்.

அவர் சேகரன் ஆவார்.

வாசிப்பவர் சேகரன் ஆவார்.

செய்திகள் வாசிப்பவர் சேகரன் ஆவார்

80. செய்திகள் வாசிப்பவர் சேகரன். என்ற வாக்கியம் அமைகிறது.

81 மரம் அறுப்பது வாள் - ஆகும்.

60. செய்தி வாசிப்பது கிளி - ஆகும்.

78. கண்ணன் வாசிப்பது செய்திகள் - ஆகும்.

82. மரம் அறுப்பவன் முத்தையன் - ஆவான்

80. செய்திகள் வாசிப்பவர் சேகரன் - ஆவார்.

எனவே 'ஆகும்' என்பது அஃறிணை ஈற்றுக்கும் (அது, அவை) ஆவான், ஆவாற் முதலியன உயர்திணை ஈற்றுக்கும் (அவன் அவர் முதலியன) புதைநிலை வாக்கிய முடிவாகும்.

13. எனவே.

1. 'கண்ணன் வாசிப்பது செய்திகள்' 'என்பதில்' 'வாசிப்பது' என்பது தொழிற் பெயர்; செய்திகள் என்ற அஃறிணைப் பெயர்ப் பயனிலை பெற்றுள்ளதால் வாக்கியம் சரியானது.

2. 'செய்திகள் வாசிப்பது கண்ணன்' என்பதில் 'வாசிப்பது' என்பது வினையாலணையும் பெயர்; எனவே அஃறிணைப் பெயர்ப் பயனிலை வரவேண்டும். உயர்திணை வந்துள்ளதால் வாக்கியம் தவறானது,

3. உயர்திணைக்குரிய வினையாலணையும் பெயரிட்டால் 'செய்திகள் வாசிப்பவர் கண்ணன்' எனவரும். வாக்கியம் சரியானது.

மொழியியல் 6. 1. (1983)

# தமிழ் மொழியின் வளர்ச்சிப்பாதை-1

**இரா. பாலகிருஷ்ணன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழி மனித இனத்திற்கே உரித்தாகி, மனிதனின் உள்ளத்தில் எழும் எண்ணங்களையும் கருத்துக்களையும் பிரதி பலிக்கும் ஒரு கருவியாகவுள்ளது. இது இருவேறு வடிவமாக உள்ளது; ஒன்று : ஒலிவடிவம், மற்றொன்று : எழுத்துவடிவம். முதன்முதலில் ஒலிவடிவமாகத் தோற்றுவிக்கப்பட்ட மொழிக்குப் பின்னர் அதைப் பயன் படுத்தும் சமூதாயத்தின் பண்பாட்டினடிப் படையில் வரி வடிவம் அல்லது எழுத்துவடிவம் கொடுக்கப்பட்டது. எனினும், ஒலிவடிவமே மொழிக்கு அடிப்படை ஆதாரமாக விளங்கி வருகிறது.

ஒலிவடிவம் மனிதனின் ஒலியெழுப்பும் உறுப்புக்களால் கொடுக்கப்படுகிறது. மனிதனின் ஒலியுறுப்புக்கள் ஒரே மாதிரி இருப்பினும் அவற்றால் உருவாகும் ஒலி வடிவங்கள் வெவ் வேறாக அமைந்துள்ளன. ஒரே இசைக்கருவியில் வீதவிதமான இசையொலிகளை எழுப்புவது போலவே ஒரே விதமான ஒலி

யுறுப்புக்களைக் கொண்டு பலவித ஒலிகளை உருவாக்க முடிகிறது. இப்படிப் பல்வேறு சமூகத்தினர் வெவ்வேறு விதமாக ஒலிகளை உருவாக்குவதால்தான் ஆயிரக்கணக்கான மொழிகள் இன்று இவ்வுலகில் வழக்கில் உள்ளன. இம்மொழிகளை ஆராய்ந்த மொழி நூலறிஞர்கள் அவற்றின் ஒலியமைப்பு, அதனால் உருவாகும் சொல், அதன் பொருளமைதி இவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளினடிப்படையில் திராவிட மொழிகள், இந்தோ-ஐரோப்பிய மொழிகள், ஆப்பிரிக்க மொழிகள் என்பன போன்ற பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். ஒரு பெரும் பிரிவு மேலும் சில உட்பிரிவுகளாக்கப்பட்டுள்ளன. காட்டாகத் திராவிட மொழிகள் வட, தென், மத்திய திராவிடமொழிகள் எனப்பிரிக்கப் படுதலைக் காணலாம். இவ்வுட்பிரிவுகளுக்குள்ளேயும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவ்வாறு ஒவ்வொன்றும் ஒரு நிலையில் மொழி என்னும் தகுதியைப் பெற்று அதைப் பேசுவோரால் போற்றப்பட்டு வருகிறது. இத்தகைய மொழிகள் மூவாயிரத்திற்கும் அதிகமாக இவ்வுலகில் பேசப்பட்டு வருகின்றன என்று அறுதியிட்டுள்ளனர்.

இவ்வாறாய மொழிகள் அனைத்திற்கும் இரு வடிவங்களும் உள்ளனவா என்றால், அவை இல்லை என்றே கூற வேண்டும். ஒலிவடிவமாகவே பெரும்பாலான மொழிகள் உள்ளன. வரிவடிவம் பெற்ற மொழிகள் அவற்றைப் பேசும் மக்களின் தொகை, பண்பாடு, நாகரிக வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. ஒரேமொழியைப் பேசும் பெரும்பாலான மக்கள் பரந்து வாழும் நிலை ஏற்படும் போது தங்கள் மொழியில் கருத்துப் பரிவர்த்தனை செய்ய ஒலிவடிவத்தால் மட்டுமே இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் ஒலிவடிவத்திற்கு ஒரு மாற்றுவடிவம் தேவைப்படுதலை உணர்ந்து, வரிவடிவத்தைத் தோற்றுவித்தனர். வரிவடிவம் ஏற்பட்டபின் ஒருமொழியின் ஒலி வடிவம் ஒருவித ஒழுங்கு நிலைக்கு வந்து விடுகிறது. இவ்வெழுத்துக்கு இன்ன ஒலிதான் என வரையறுத்தபின். அதை மாற்றி ஒலிப்பின் 'அது தவறு' என்னும் உணர்வு மொழி பேசுவோரிடையே ஏற்படுவனதக் காணலாம்.

வரிவடிவம் பெற்றபின் வாய்மொழி இலக்கியங்களையும் எழுத்திலக்கியங்களையும் இலக்கண வளர்ச்சியையும் ஒருமொழி பெறுமானால் அதை வளர்ந்துவிட்ட மொழிவரிசையில் சேர்க்கின்றனர். ஆனால் மொழிகளை அவற்றின் வளர்ச்சியின் அடிப்படையில் மூன்றுவகையாகப் பிரிக்கலாம். 1) வளர்ந்தமொழி, 2) வளர்கிறமொழி, 3) வளரும்மொழி. லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் வளர்ந்த மொழிகள்; மலாய், இந்தோனேசியா, ஜப்பானிஸ் போன்ற மொழிகள் வளர்கிற மொழிகள்; கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் வளரும் மொழிகள் எனலாம். இந்த மூன்று பண்புகளும் ஒருங்கே அமையப்பெறின் அம்மொழிகளை வளர்மொழிகள் என்று அழைக்கவேண்டும். இத்தகை பண்பு ஆங்கிலம், பிரஞ்சு போன்ற மொழிகளுக்கே பொருந்தும். எக்கருத்தையும் தட்டுத்தடங்கலின்றி ஒலிவகையா வரிவடிவாலும் பிரதிபலிக்கவல்ல மொழியே வளர் மொழியாகும்.

இனி, நம்தமிழ்மொழி வளர்மொழியா? என ஆய்வது நம் கடமைகளில் ஒன்றாகும். வளர்ந்தமொழி தமிழ்மொழி என்றால் அதுதவறில்லை. இலக்கியச் செழுமையும் இலக்கண வலிமையும் பெற்றுப் பீடுநடைபோடும் மொழி தமிழ்மொழியே என்றால் மறுப்பவர் யாருமில்லை. என்றும் நின்று நிலவும் தன்மை வாய்ந்த மொழி தமிழ்மொழியே என்றால் அது வளர்ந்தமொழியாக மட்டுமன்றி மற்ற பண்புகளையும் பெற்றிருத்தல் வேண்டும். அதற்கு முக்கியமான இரண்டு இயல்புகள் ஒருமொழிக்கு அமைதல் வேண்டும்.

1. எச்சொல்லையும் தத்தம் ஒலியமைப்பிற்குள் அமைக்கும் பாங்கு.

2. எக்கருத்தையும் தத்தம் சொற்களால் விளக்கும் இயல்பு.

இவ்விரு இயல்புகளைத் தன்னகத்தே கொண்ட ஆங்கில மொழி, என்றும் வளர்மொழியாக விளங்கிவருதலைக் காணலாம். காலத்திற்குக்காலம் அதன் சொற்களஞ்சியம் விரிவடைவதோடு பொருளமைதியும் பெருகிய வண்ணம் உள்ளது. இத்தன்மை தமிழ்மொழியில் உள்ளதா என்றால் அது ஐயமே. தமிழ்மொழி

யின் வளர்ச்சியில் அக்கரை காட்டாத தமிழறிஞர்களே இல்லை; ஆனால் அவர்களது ஆர்வமும் ஆக்கமும் எத்துணை பயன்படு கிறது? என்பதே முக்கியம்.

ஒரு மொழியின்மேல் இன்னொரு மொழியின் ஆதிக்கம் ஏற்படு வது இன்று நேற்று ஏற்படுவதல்ல. என்றைக்கு இருமொழி களுக்கிடையே மொழித்தொடர்பு அல்லது சமூகத்தொடர்பு ஏற்படு கிறதோ அன்றைக்கே ஏற்பட்டுவிடும். தமிழ்மொழியும் அதற்கு விதி விலக்கல்ல. இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழி வடமொழியோடு தொடர்பு கொண்டுவிட்டது. அதனால் சொற்களின் பரிமாற்றங்கள் அன்றைக்கே ஏற்பட்டுவிட்டன. வட மொழியின் ஆதிக்கம் தமிழ்மொழியில் ஏற்பட்டுத் தமிழ்மொழியின் தனித்தன்மை கெட்டுவிடும் என்பதையுணர்ந்தே ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்தோன்றிய தொல்காப்பியர் ''வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'' (தொல். சொல். 401) என்று கூறிப் பொது எழுத்தாலாய வட சொல்லும் தமிழில் செய்யுட்கண் வரும் தகுதியுடையதென விதி கூறிச் சென்றுள்ளார். ஆனால் பின்னர் ஏற்பட்ட பெரும் அரசி யல் மாற்றங்களால் வடமொழியின் ஆதிக்கம் தமிழ்மொழியில் பெரிதும் ஏற்பட்டுள்ளது என்பதை பதினோராம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புத்தமித்திரனாரின் வீரசோழியம் என்னும் இலக்கண நூலாலும் அதைத்தழுவி வந்த நேமிநாதம் அல்லது சின்னூல் என்னும் நூலாலும் தெள்ளிதின் அறியலாம். தொல்காப்பியம் தோன்றிச் சுமார் ஆயிரம் ஆண்டு இடைவெளிக்குள் வடமொழி இலக்கணத்திற்கு ஏற்பத் தமிழ் இலக்கணத்தை மாற்றியமைக்கும் முயற்சியே மேலே காட்டிய இரு இலக்கண நூற்களின் தோற்றம் என்றால் அது தவறு இல்லை. ஆனால் இந்நூற்களை அடுத்து, அதாவது சுமார் 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பவணந்தி என்னும் சமண முனிவர் நன்னூல் என்னும் இலக்கண நூலையாத்தார். இவர் தொல்காப்பியத்தைப் பெரிதும் தழுவி னாலும் காலத்தால் மறைந்த விதிகளை நீக்கித் தோன்றிய புது விதிகளை இணைத்துத் தமிழ்மொழிக்கொரு புத்திலக்கணத்தை அளித்தார். தொல்காப்பியர் வடசொல் பற்றி கொண்டிருந்த கருத்தைப் போல் இவரும், 'பொதுவெழுத்தாலும் சிறப்பெழுத்

தானும் ஈரெழுத்தானும் இயைவன வடசொல்' (நன். பெய. 17) எனக் கூறினார் எனத் தெரிகிறது. அத்துடன் நில்லாது வட சொற்கள் தமிழில் பயிலும் முறைக்குச் சிறந்ததொரு இலக்கண மும் செய்துள்ளார்.

146 147, 148 149 ஆகிய நூற்பாக்கள் வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் ஆகும் தன்மையினை விவரிக்கின்றன. எம்மொழிச் சொற்களையும் தம்மியல்பிற்கேற்றவாறு மாற்றும் இயல்பினையே இந்நூற்பாக்கள் விளக்குகின்றன. வடமொழியில் உள்ள ஒலிகள் பல தமிழ் மொழியில் இல்லை. ஆனால் அவ் வொலிகளை எவ்வாறு தமிழ் மொழியில் மாற்ற வேண்டுமென்றே விதி கூறியுள்ளார் வடமொழியில் உயிரெழுத்துக்கள் பதினாறு; தமிழ் மொழியில் பனிரெண்டு. ஆனால் தமிழ்மொழியின் சிறப் பெழுத்துக்கள் எ, ஒ என்பனவும் வடமொழியின் ஆறு சிறப் பெழுத்துக்களும் நீங்கலாக மீதமுள்ள பத்து உயிரெழுத்துக்கள் இரண்டிற்கும் பொதுவானவைகளாகவுள்ளன. இது போன்று மெய்யெழுத்துக்களில் பதினைந்து பொது எழுத்துக்கள் நீங்க லாகத் தமிழ் மொழியில் மூன்றும், வடமொழியில் இருபத்தி ரெண்டும் சிறப்பெழுத்துக்களாகவுள்ளன. சிறப்பெழுத்துத் திரிந் தும் அதாவது, வடமொழியின் சிறப்பெழுத்துக்கள் தமிழில் இன்மை யான் அம்மொழியினமைந்துள்ள எழுத்துக் கேற்றவாறு திரிந்தும் (எ - டு. விஷம் → விடம், தேஸம் ← தேசம்; பங்கஜம்← பங்கயம்), பொதுவெழுத்துக்கள் இயல்பாயும் தமக்கேற்ற விகாரம் பெற்றும் வரும் என்பதனையும் (எ-டு. அமலம், கமலம்); ரகரம் மொழி முதல்வரின் அ, இ, உ முதலாகவும் (எ-டு. அரங்கன், இராமன், உரோமம்); லகர யகாரங்களுக்கு இகர இகரம் முதலாகவும் (எ-டு, இலாபம், உலோபம்; இயக்கன், உயுத்தன்) வரவேண்டும் என்ப தனையும் விதிகளாக்கியுள்ள நுண்ணறிவை நோக்கினால், சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மொழி பிற மொழி கலப்பிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் பவணந் தியாருக்கு இருந்த உறுதி வெளிப்படுகிறதென்றே கூற வேண்டும். மேலும் தமிழ் மொழியின் ஒலியமைப்பிற் கேற்ப பிறமொழிச் சொற்களை மாற்றித் தம்மொழியில் பயன் படுத்துதல் தவறில்லை என்பதும் இவரது கருத்தாகவுள்ளது. இதனால்

ஒரு மொழியில் சொல்வளம் பெருகுமேயன்றி பெருமைக்குறை வேதும் ஏற்படப் போவதில்லை. இவ்வியல்பு ஒரு வளர் மொழியின் தனி இயல்பு என முன்னரேகண்டோம்.

அன்று இலக்கணவரம்பு கட்டி மொழி காத்த இலக்கண வல்லாரே ஒத்துக்கொண்ட இவ்வியல்பு இன்று தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்ப்பாதுகாப்புக்கழகம் போன்ற அமைப்புகள் ஏற்பட்ட பின்னரும், இன்றியமையாதது என அறியப்படாமலிருப்பது தமிழ் மொழியின் வளர்ச்சிப்பாதையில் ஒரு தடைக்கல்லாகவே உள்ளது என்றால் அது தவறில்லை. 'சென்ற எழுநூறு எண்ணூறு ஆண்டுகளாக நம் தாய்மொழியில், செந்தமிழ்ச் சீரியமொழியில் ஏராளமான வடசொற்கள் வந்து கலந்துவிட்டன. தமிழிற் கலந்த அதனை முற்றும் வேறுபடுத்தும் வடசொற்களை இப்பொழுதே நாம் களைந்தொதுக்காவிடின் தமிழ் தன் நிலை கெட்டு வேறு மொழி போலாகுமென்பதற்கு ஐயமில்லை'' (நீலாம்பிகை அம்மையார், தி. 1975 : முன்னுரை). என்றெல்லாம் எண்ணுவோர் தூய தமிழ்ச்சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக நினைத்துத் தமிழ் மொழிக்கு ஏற்படவுள்ள சொல் வளர்ச்சிக்கு வழிகாட்டாமலிருக்கின்றனரென்றே கூறவேண்டும்.

காரணங்கள் பல : பிறமொழிச்சொற்களை மொழியுணர்வு படைத்த எவரும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவது இயல்பே. ஆனால், காலம் என்னும் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிற மனிதன் அன்றுள்ள நடை, உடை, பழக்க வழக்கங்கள் அனைத்தையும் மாற்றிய வண்ணம் உள்ளான் என்பதை வரலாற்றாலறிகிறோம். இந்நிலையில் அவனது நோக்கம், எண்ணங்கள், கருத்துக்கள் அனைத்தும் விரிவடைந்தவண்ணம் உள்ளன; அதற்கேற்ப மொழியும் விரிவடைதல் கட்டாயமாகிறது. தூய தமிழ்ச்சொற்களாலேயே தங்கள் வளர்ச்சியினைக் காட்ட வேண்டுமாயின் சொல்லாக்கம் இன்றியமையாத ஒன்று. உதாரணமாக அல்வா என்பதற்குக் கோதுமைத்தீம்பாகு என்றுதான் கூறவேண்டுமாயின் அது மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாயிராது. ஆனால் புதியதொரு சொல்லை - தனிச்சொல்லை உருவாக்குவோமாயின் அது சொல்வளத்தைப் பெருக்கும்.

ஏற்கனவே இருக்கின்ற இன்னொரு பொருளை உணர்த்த வருகின்ற சொற்களாலேயே புதுச் சொற்களை உருவாக்குவோமானால் அது சொல்வளத்தை எவ்வாறு பெருக்கும்? குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல்தானே ஆகும்! இதுபோன்று எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

எழுத்தமைப்பில் இன்றைய நமது அரசு சில மாற்றங்களைப் புகுத்தியுள்ளது. இதற்குக்காரணம், ஒரு தனித்தன்மை வாய்ந்த தலைவரின் - தந்தை பெரியாரின் பிடிவாதமான கொள்கைதான் என்றால் அது தவறில்லை. ஆனால் பழைய செய்யுளமைதியினின்றும் முற்றிலும் மாறுபட்ட புதுக்கவிதைகளிலும், பழைய உரை நடையமைதியினின்றும் வேறுபட்ட எளிய நடை - புதின நடை ஆகியவற்றிலும் முன்னோக்கிச் செல்கின்ற இக் காலத்தில் எழுத்தி ஏற்படுத்திய சீர்திருத்தத்தை முழுதும் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர் என்பதை அறியும் போது மொழியின் வளர்ச்சியில் உண்மையான ஆர்வம் இல்லை என்று தான் கூற வேண்டும். எழுத்துச் சீர்திருத்தத்திற்கே இந்நிலையாயின் சொல்லாக்க நிலை எப்பாடு படும்? அதனால்தான் எத்தனையோ மொழியியல் அறிஞர்கள், பொறியியல் அறிஞர்கள் எழுத்துச் சீர் திருத்தம் பற்றிச் சீரிய கருத்துக்களைக் கூறிய பின்னரும் அவையெல்லாம் கிணற்றிலிட்ட கற்களாகக் கிடக்கின்றன.

சொல்லாக்கத்தை மனதில் கொண்டே தமிழக அரசு பல அமைப்புகளை ஏற்படுத்தி எல்லாத்துறைகளுக்குமுரிய கலைச் சொற்களைத் தமிழில் ஆக்க ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்து வருகிறது. இதுவரை 35-க்கும் அதிகமான சிறப்புச் சொற்கள் துணை அகராதிகளை வெளியிட்டுள்ளது. அவற்றுள் உள்ள சொல்லாக்கங்கள் சொற்களஞ்சியத்தில் - அகராதியில் சேர்க்க இயலாதனவாகவே உள்ளன. காரணம், அங்கு மொழி பெயர்ப்பும், சொற்கூட்டுமே செய்யப்பட்டுள்ளன. சொல்லாக்கம் செய்ய ஆக்க உருபுகள் தமிழில் இருந்தும் அவை பயன் படுத்தப் படவில்லை (எ-டு. தலை - வன், தலை - வி, தலை - வர்; அறி - ஞன்; திருகு > திருகி; மூடு > மூடி). இவ்வாறு தமிழறிஞர்களே அதன் தனித்தன்மையினைப் பயன்படுத்தாதிருப்பதைக் காணலாம்.

ஒரு பக்கம் பழமை விரும்பிகள், மறுபக்கம் புதுமை விரும்பிகள் இவர்களிடையே ஏற்படும் போராட்டம் இன்று தமிழ் மொழி வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து வருகிறது. அன்றைய இலக்கியங்களை ஆராய்ந்து ஆராய்ந்து பெருமை பேசுவோரும் இன்றைய இலக்கியப் புதுமையைப் புகழ்ந்துரைப்போரும் ஒன்று சேர வேண்டும்; அன்றைய மொழி இலக்கணத்தைத் திரும்பத் திரும்பப் பேசுவதிலே பெருமைப்படுவோரும் இன்றைய மொழி யியல்பை ஆய்வோரும் ஒன்று சேர வேண்டும் மொழி, என்றும் உயிரோட்ட முடையதாக - வளர்மொழியாக இருக்க வேண்டு மாயின் இவர்கள் இணைந்தே ஆக வேண்டும் இல்லையேல் ஒரு பக்கம் வளர்ந்த - இறந்த மொழியாகமட்டுமே இருக்க, இன்னொருபக்கம் வாழும் மொழியாக - மாறிவரும் மொழியாகத் தமிழ்மொழி அமைந்து விடும்.

மொழி காலத்திற்குக்காலம். மாறும் அதற்கேற்ப நாமும் மொழி யமைப்பை மாற்றிக் கொண்டிந்தால் மொழியின் தனித்தன்மை கெட்டுவிடுமல்லவா? என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியாது. ஆனால், மொழியின் தனித்தன்மை எது? என்றால், அதற்கு இன்றைய தமிழறிஞர்கள் சங்கத்தமிழ், சங்கத்தமிழ் என் கின்றனரேயன்றி, அதன்படியே தமிழைப் பயன் படுத்துகின்றனரா என்றால் இல்லையே! பேச்சுத்தமிழில்தான் மாற்றம் ஏற்பட்டு வீட்டது, அவர்கள் வழங்கும் உரைநடைத் தமிழிலும் மாற்றம் ஏன் ஏற்பட வேண்டும்?

வீட்டிற்கு என்பது வீட்டுக்கு என்றும்
அவற்கு என்பது அவனுக்கு என்றும்
அவர்க்கு என்பது அவருக்கு என்றும்
கொள்வர் என்பது கொள்ளுவர் என்றும்
சொல்கிறார்கள் ன்பது சொல்லுகிறார்கள் என்றும்
வீட்டின் நீங்கி என்பது வீட்டிலிருந்து நீங்கி என்றும்

மாற்றப்பட்டு இம்மாற்றங்கள் அனைத்தும் அனைவராலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எந்தஇலக்கண நூலிலும் காணப்படாத இவ்வாறாய மாற்றங்கள்பல தமிழறிஞர்களால் ஒத்துக்கொள்ளப் பட்டு இன்று இவை அனைவராலும் பயன் படுத்தப்படுவதைக் காணுகிறோம். மேலும் அன்றுள்ள உரைநடைக்கும் இன்றுள்ள உரைநடைக்குமிடையேயுள்ள மாற்றங்களே, நாம் மொழியில் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டுதான் வருகிறோம் என் பதற்குச் சான்றாகும். எனவே மாற்றங்களை ஒருபக்கம் அனு மதித்துவிட்டு, இன்னொருபக்கம் மாற்றங்களை ஏற்றுக் கொண் டால், தனித்தன்மை கெட்டுவிடும் எனக் கூறுவது விந்தையா கததான் இருக்கிறது. இந்நிலமையினை உணர்ந்து மொழிவளர்ச் சிக்குஊக்கமளித்தால் மொழி என்றும் உயிரோட்ட முடையதாக அமையும். காலத்துக்குகாலம் ஏற்படும் மாற்றங்களை வரைய றுத்து மொழியைப்பாதிப்பது எது? என வரம்புகட்டிவருவோ மாயின், வளர்மொழியாக தமிழ் அமையும் என்பது திண்ணம்· இதற்குக் கருத்து வேறுபாடிருப்பினும், கலந்துரையாடி செயலாக்க வேண்டியது தமிழறிஞர்களின் கடமைகளில் ஒன்று. எனவே,

சென்றிடு வீர்எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்

என்று கூறும் பாரதியாரின் ஆணையை நிறை வேற்றி,

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

என்னும் கனவினை உய்த்துணர்ந்து ஆக்கப்பணிகள் செய்வோமாயின் மேலும் மேலும் தமிழ்மொழி வளம்பெற்றுப் புகழ் பெறும் என்பது தெளிவு.

உதவிய நூல்கள்

1. தமிழ்ப்பாதுகாப்பு நூற்றிரட்டு தமிழ் பாதுகாப்புக் கழக வெ
யீடு, சென்னை, 1976.

2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர், அண்ண
மலைப் பல்கலைக் கழகம், 1981.

3. நன்னூல் காண்டிகையுரை, கழகவெளியீடு, சென்ன
1972.

4. பாரதியார் கவிதைகள், 1 பழனியப்பா பிரதர்ஸ், சென்னை
1975.

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**

M. A., Ph.D. (Kerala), Ph. D. (Ind ,U.S A.)

**டாக்டர். கே. புஷ்பவல்லி, M.A., Ph. D.**

மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்.

பக்கம் 458) (விலை ரூ. 16/-

2. கிளை மொழியியல் (Dialectology)

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph.D.**

ஒரே மொழி வழங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி, தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழிகளைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 226) (விலை ரூ. 10/ -

3. மொழித் திட்டமிடுதல் (Language Planning)

**டாக்டர் கி. கருணாகரன், M.A., Ph.D.**

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில்

எடுத்தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்துரு வாக்கம், நிலைபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165) (விலை ரு 7/-

4. உலக மொழிகள் - திராவிட மொழிகள் I

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

M. A., Ph.D. (Kerala), Ph. D., (Ind., U.S.A)

திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம் இலக்கணம், கல்வெட்டு போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஐந்தாவது நூல் இது.

பக்கம் 250) (விலை ரூ. 12/-

5. உலக மொழிகள் - திராவிட மொழிகள் II

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,

M.A., Ph.D. (Kerala), Ph.D., (Ind., U.S.A)

இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட திராவிட மொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத் தொல் திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு-பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்றுகாட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது.

பக்கம் 265) (விலை ரூ. 15/-

6. நரிக்குறவப் பழங்குடி மக்கள்

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A , Ph D.**

இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்க வழக்கங் களையும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகிறது.

பக்கம் 96) (விலை ரூ. 4/ –

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)

**டாக்டர் செ. வை. சண்முகம், M. A., M. Litt., Ph. D.**

எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடித்தில் செய்யப் படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின்தொகை, சொல்லெழுத்து பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்ய வேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இனிச் செய்யப்பட வேண்டியவைகளும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்த ஆணை பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பக்கம் 240) (விலை ரூ. 12.50/ -

8. ஒலியியல் (Phonetics)

**டாக்டர் சு. இராசாராம், M.A., Ph.D.**

தமிழொலிகளின் வகை, பிறப்புமுறை ஆகியவற்றோடு பொது வாக ஒலியைப் பற்றியும் அதன் ஆய்வு முறைகள் மற்றும் பேச் சுறுப்புக்களைப் பற்றியும் இந்நூல் விவரித்துக் கூறுகிறது. ஒலி யியல் கலைச் சொற்கள் ஒவ்வொன்றும் விளக்கத்தோடு இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

பக்கம் 180) விலை ரூ. 15/-

9. எழுத்திலக்கணக்கோட்பாடு

(Phonological Theoires in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம், M.A., M.Litt., Ph.D.

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமி நாதம், ஆகிய நூல்களின் எழுத்ததிகாரத்தில் காணப்படும் மொழி யியல் கோட்பாடுகள், எழுத்ததிகார அமைப்பு, பிறப்பியல், தொல்காப்பியரின் 'எழுத்து', முதலும் சார்பும், எழுத்தியலின் களன், எழுத்தியல், பதவியல், புணரியல், அடிநிலைக் கிளவி, புணரியல்களின் அமைப்பு, சாரியை என்று பதினோரு இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. முதல் இயலான 'இலக்கணமும் மொழியிய லும்' என்பதில் இலக்கணத்துக்கும் மொழியியலுக்கும் உள்ள உறவு, மொழியியல் நோக்கில் இலக்கணத்தை ஆராயும் முறை, இந்த நூற்றாண்டில் இலக்கண ஆய்வின் வரலாறு ஆகியனவும் கடைசி இரண்டு இயல்களான 'போக்குகள்', 'உத்திகள்' என்பன வற்றில் இலக்கணங்களிடையே காணப்படும் ஆய்வுப்போக்கும், இலக்கண உத்திகளும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே உரை யாசிரியர்களின் கருத்துகளும் மொழியியல் நோக்கில் பரிசீலிக்கப் பட்டுள்ளன. பொதுவாக இந்த நூல் எழுத்ததிகாரத்தை ஒப்பு நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் படிப்பதற்கு உதவியாக இருக்கும்.

பக்கம் 306) (விலை ரூ 20/ -

10. சொல்லியல் 1 (Morphology) – பெயரியல் (Noun)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,

M.A., Ph.D. (Kerala), Ph.D. (Ind., U. S. A)

தமிழ் மொழியின் சொல்லியல் பற்றி இக்கால மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்வது இந்நூல்.

முதல் இயலான 'சொல்லியல் கொள்கைளும் விளக்கங்களும்' என்ற தலைப்பில் தற்கால மொழியியல் கேட்பாடுகளும், பெயரியல் என்ற இரண்டாம் இயலில் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் வகைப்பாடு

களும் அவற்றின் காரணங்களும், பதிலீடுபெயர்கள், எண்ணுப் பெயர்கள் போன்றவையும் விளக்கப்படுகின்றன. மூன்றாவது இயலான 'எண் பால் பகுப்பு' என்ற தலைப்பில் எண் அமைப்பும் பால் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளன. 'வேற்றுமை' என்னும் இயலில் வேற்றுமைகளின் அமைப்பும் ஆக்கமும், பொருளும் போக்கும் ஆராயப்படுகின்றன. பொதுவாகத் தமிழ் மொழியின் பெயர்ச்சொல் அமைப்பு பற்றிப் பல புதிய விளக்கங்களை இதில் காணலாம். பல்வேறு புதிய கோணங்களில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. சொல்லியல் என்ற வரிசையில் முதல் நூல் இது.

பக்கம் 280) (விலை ரூ. 21/-

11. **Linguistic Convergence**

Dr. K. KARUNAKARAN, M.A., Ph.D., Dip., in Kannada

This mornagraph deals with some of the problems related to the use of languages in contact situations, and as a result the development of some commonness in the structure of the languages. The topics discussed include nature and direction of convergence, use of minority languages in multilingual situations, mass communication diglossia and linguistic convergence, social setting – language development and linguistic convergence, and current issues and research related to the study of convergence.

pp. 188) (Price Rs.10/-

12. இருமொழியம் (Bilingualism)

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph,D.**

ஒருவர் இரண்டு மொழிகளைக்கற்று அவைகளைப் பேசும் பொழுது, அவருடைய பேச்சில் ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு

மொழியில் கலந்து வழங்குகின்றன. மொழித் தொடர்பு நீண்ட காலம் நிலைத்திருந்தால் தொடர்பு கொண்ட மொழிகள் ஒன்று மற்றொன்றாலோ அல்லது இரு மொழிகளுமோ தாக்கத்திற்குட் படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும் பொழுது பிற மொழிக் கூறுகள் குறுக்கீடாகவோ, அல்லது கடனாகவோ வரும். இவை களை மொழி அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் விரி வாக விளக்கிக் கூறும் முதல்நூல் இந்நூல்.

பக்கம் 152) (விலை ரூ. 15/ -

**13. Study of Social Dialects in Tamil**

**Dr. K. KARUNAKARAN & Dr. C. SIVASHANMUGAM**

This book deals with the study of social dialects in Tamil from the point of view of social stratification of language. The various theoretical aspects pertaining to the, study of linguistic variation have been discussed in detail and the same suitably illustrated from the Tamil speech behaviour for the first time in book form. Tamil speech differentiation as reflected in the rural, urban, semi - urban set up has been described and the variations thus identified have been conditioned with the help of the social parameters, contexts, etc

pp. 141) (Price Rs. 12/-

14. சொல்லியல் - வினையியல் - 1

(MORPHOLOGY - VERB - 1)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,

M.A., Ph.D (Kerala), Ph.D. (Ind., U.S.A.)

சொல்லியல் என்ற வரிசை நூல்களில் இரண்டாவது நூல் இது. தலைப்புக்கேற்ப தமிழ் வினைச் சொல்லின் அக அமைப்பைப் பற்றி மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்வது. வினைச்சொல் விளக்கம், தமிழில் புதுவினையாக்கம், வினைவகைப்பாடு, பிற வினை, காரணவினை. இணைப்புருபு, ஏவல் வினைம், காலம், எதிர்மறை ஆகிய ஒன்பது பகுதிகளைக் கொண்டது இந்நூல். வினைச்சொல் என்றால் என்ன என்பதை அமைப்பு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் ஆராய்வது முதல் பகுதி. இரண்டாவது பகுதியில் தமிழில் புதுவினைகள் எவ்வாறு ஆக்கப் படுகின்றன என்பதும் அவ்வாறு ஆக்கப்படுவதற்குக் காரணங்கள் என்னென்ன என்பதும் இவை போன்ற பிற செய்திகள் விரிவாக ஆராயப்படுகின்றன. இதையடுத்து வரும் மூன்றாவது பகுதியில் தமிழ் வினைச் சொற்களை வெவ்வேறு அடிப்படையில் விளக்கிப் பின்னர் காலவெழுத்துக்களைப்பொறுத்தமட்டில் எத்தகைய வகைப் பாடுகள் உள்ளன என்று விரிவாக ஆராயப்படுகின்றது. இதன் பின்னர் பிறவினை, காரணவினை, ஏவல்வினை, காலம், எதிர் மறை ஆகிய இலக்கணக் கூறுகள் பல வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றன. எனவே தமிழ் வினைச்சொற்கள் பற்றித் தற் கால மொழியியல் கண்ணோட்டத்தில் விரிவாகத் தந்துள்ள நூல் இதுவே.

இன்னும் எத்தனையோ இலக்கணக் கூறுகள் வினைச் சொல் லில் காணக்கிடக்கின்றன. இவை அடுத்து வரும் வினையியல்-2 என்ற நூலில் இடம் பெறும்.

பக்கம் 212) (விலை ரூ. 16/-

15. சங்கத்தமிழ் (அச்சில்)

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்**

16. பாடல் பயிற்றுமுறை (அச்சில்)

**டாக்டர் மா. சு. திருமலை**

17. Studies in Applied Tamil Sociolinguistics

**Dr. K. M. IRULAPPAN** (in press)

## உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியற் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

## மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு


1. வெளியீட்டாளர் & ஆசிரியர் — டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
செயலாளர், அனைத்திந்தியத்
தமிழ் மொழியியற் கழகம்,
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608 002.

2. அச்சிட்டோர்: — சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர் 608 002

# மொழியியல்

தொகுதி 6 எண் 1

ஜூலை – செப்டம்பர் 1982

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சசூரின் மொழியியல் கோட்பாடு<br>செ. சண்முகன் | 1-23 |
| குறிப்பு வினையெச்சம்<br>சு. அழகேசன் | 25-34 |
| திணை-பால் பாகுபாடு<br>செ. வை. சண்முகம் | 35-79 |
| கூட்டுவினைகள்–ஓர் ஆய்வு<br>கோ. சுப்பையா | 81-89 |
| கால அளவையும் பொருண்மையும்<br>எஸ். பாக்கியலெட்சுமி | 91-97 |
| வாசிப்பது சரியா?<br>தஞ்சை பா. இறையரசன் | 99-114 |
| தமிழ் மொழியின் வளர்ச்சிப்பாதை-1<br>இரா. பாலகிருஷ்ணன் | 115-124 |